# விடுதலைப்புலிகள்

குரல் 100 ஆவணி – புரட்டாதி 2001 அன்பளிப்பு 5/-


# ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அடக்குமுறை அதிகரிப்பு
# விடுவிக்கப்பட்ட மண்ணில் மக்கள் எழுச்சி

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருண்மிய ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளை சிங்கள அரசு சந்தித்துள்ள இன்றைய நிலையிலும் அது தமிழ் மக்களுக்கெதிரான போர்வெறியைத் தணித்துக் கொள்ளவில்லை.

சர்வதேச சமூகத்திலிருந்து அரசின் போர்க்கொள்கைக்கு எதிராக எழுந்துவரும் கண்டனக்கருத்துக்களையும் சிங்கள அரசு கருத்தில் எடுக்கவில்லை.

தமிழரின் தேசிய இனச்சிக்கலுக்கு இராணுவ வழியிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்ற பேரினவாத நிலைப்பாட்டை இப்போது, சந்திரிகா அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது.

ஒரு வருடகாலத்திற்கு புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதில்லையென சந்திரிகா அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.



தமிழர்க்கெதிரான இனஅழிப்புப்போரை சர்வதேசத்தின் கண்களிலிருந்து மறைப்பதற்காக அதற்கு சமாதானத்திற்கான போரெனப் பெயர் சூட்டிய சந்திரிகா அம்மையார், இன அழிப்புப் போரை கடந்த ஏழு வருடங்களாக நடாத்தி வருகின்றார். அம்மையாரின் சமாதானத்திற்கான போரின் உண்மை வடிவத்தை சர்வதேச சமூகம் கண்டறிந்து, அதைக் கண்டிக்கத்தொடங்கியது.

இப்போது ஒரு வருடப்போர் என்ற பெயரில் தமிழினத்தின் மீது ஒரு நீண்ட காலப்போரை பிரகடனப்படுத்தியுள்ளார். அமைதிப் பேச்சுவார்த்தைக்கான எதிர்கால நம்பிக்கையை முற்றிலுமாக அழித்துவிடப் போகின்ற இந்த ஒரு வருடப்போர் தமிழினத்திற்கெதிரான ஒட்டுமொத்தப் போராகப் பரிணாமம் பெற்று, நீண்டகாலம் நடக்கப்போகின்றது.

தீவிரமடையப்போகும் போருக்கு கட்டியம்கூறுவது போல இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தமிழர் நிலத்தில் அரச அடக்குமுறையும் - இராணுவ அட்டூழியங்களும் அதிகரித்து வருகின்றன.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்கள் மீது பல்வேறு வகையான இராணுவ நெருக்குவாரங்களை சிங்களப்படைகள் நடாத்திவருகின்றன. யாழ்குடா நாட்டிலும் சுற்றிவளைப்புக்களும் - கைதுகளும் அதிகரித்துள்ளன.

யாழ்-போதனா வைத்தியசாலை வளவில் இருந்த பாரிய மனிதப்புதைகுழி ஒன்றும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. எனினும் தோண்டும் வேலைகளை நிறுத்தியுள்ள சிங்களப்படைகள் புதைகுழிவிவகாரத்தை இருட்டடிப்புச் செய்யமுனைகின்றன.

செம்மணி, யாழ்விளையாட்டரங்கம், மீசாலை புதைகுழிகளுடன் யாழ்-வைத்தியசாலைப் புதைகுழியும் சிங்கள இராணுவத்தின் இனஅழிப்புக்கொடூரத்திற்கு சாட்சியங்களாகி விட்டன. தென் தமிழீழப் பகுதியில் இதைப்போன்று ஏராளமான மனிதப்புதைகுழிகள் வெளிச்சத்திற்கு வராமலே உள்ளன.

தமிழர் நிலத்திலுள்ள சிங்களப் படை முகாம்கள் அனைத்துமே தமிழ் மக்களின் புதைகுழிகளாகவே உள்ளன என்ற உண்மை இப்போது அம்பலமாகி வருகின்றது.

2ம் பக்கம் பார்க்க

# விடுதலைப்புலிகள் நூறாவது குரல்


- ''சந்திரிக்கா சந்திக்கும் வோட்டர்லூ'' 05
- திரிசங்கு சொர்க்கநிலையில் சந்திரிக்கா அரசு 06
- மட்டுநகர் மண்ணில் புதிய புறநானூறு -நிலைமைஅறிக்கை - 04
- தாயகம் காப்போம் 15
- வயிற்றில் தீ வளர்த்த வலியன் 03
- 25 வருட ஆயுதப்போர் தடங்கலும் தடையுடைப்பும் மறுபாய்ச்சலின் முன் ஒருமீள்பார்வை 10
- சிங்களத்தின் போர் இயந்திரம் சீர்செய்ய முடியாதளவிற்குச்சேதம் 07
- மீண்டு விஸ்வரூபிக்கும் வனம் 08
- நீதிநிர்வாகத்துறையின் எட்டாண்டுச் செயற்பாடுகள் 17


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# சந்திரிக்கா அரசும் சமாதானத் தடைகளும்

சிங்களத்தின் இராணுவ இயந்திரம் பலவீனப்படும் போதெல்லாம் சிங்கள அரசுக்கு சமாதான தாகம் பிறந்துவிடும்.

இத்தகைய சந்தர்ப்பவாத சமாதான தாகம் சிங்கள அரசுக்கு மீண்டுமொருமுறை ஏற்பட்டுள்ளது.

போர்நிறுத்தத்தை மேற்கொண்டு - புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த தனது அரசாங்கம் தயாராக உள்ளது என கதிர்காமர் மூலமாக சிங்கள அரசு அறிவிப்புச்செய்துள்ளது.

கடந்த டிசம்பரில் இருந்து நாலுமாத காலமாக ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை புலிகள் இயக்கம் கடைப்பிடித்து வந்தது.

சிங்கள அரசும் போர்நிறுத்தம் செய்து - பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் என புலிகள் இயக்கம் விடாது வலியுறுத்தி வந்தது.

ஆனால், புலிகளின் சமாதான முயற்சியை சிங்கள அரசு ஒரேயடியாக நிராகரித்து - தனது போர்வெறியை வெளிப்படுத்தியது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் உருவாகி வந்த சமாதானத்திற்கான ஒரு வரலாற்று வாய்ப்பை இராணுவத் திமிர் காரணமாக, சிங்கள அரசு போட்டுடைத்துவிட்டது.

கட்டுநாயக்கா மீதான தாக்குதலும் - அதன் விளைவுகளும் சிங்களத்தின் இராணுவமதைக்கு தகுந்த சாட்டை அடிகொடுத்தன.

இந்தத் தாக்குதலால் சிங்களத்து வான்படையின் போர் ஆற்றல் சிதைக்கபபட்டுவிட்டது. தாக்குதலின் பக்கவிளைவுகள் சிங்களத்தின் பொருண்மியபலத்தை ஆட்டங்காணச் செய்துவிட்டன. போருக்கான பொருளாதாரத்தை மட்டுமல்ல; அரசை இயக்கத் தேவையான நிதிவளத்தையும் சேகரிக்கமுடியாத கையறுநிலைக்குள் சிங்கள அரசையும் தள்ளிவிட்டுள்ளது.

இவை போதாதென்று பாரிய அரசியல் நெருக்கடிக்குள்ளும் சிங்கள அரசு சிக்கித்திணறுகின்றது.

இவ்விதம் இராணுவ - பொருண்மிய - அரசியல் சிக்கலுக்குள் சிக்கிச் சிங்களம் திணறும் இந்த அக - புறச்சூழல்களைப் பயன்படுத்தி மரபுரீதியான ஒரு பாரிய இராணுவ வெற்றியை புலிகள் இயக்கம் பெற்றுவிடும் என சந்திரிகா அரசாங்கம் அஞ்சுகின்றது.

இந்த நிலையில் ஒரு கல்லில் மூன்று மாங்காய்களை விழ்த்தும் பேராசையுடன் சந்திரிகா அரசாங்கம் செயலில் இறங்கியுள்ளது.

புலிகள் இயக்கத்துடன் ஒரு போர்நிறுத்த உடன்பாட்டிற்குச்சென்றால் அதனால்வரும் கால அவகாசத்தையும் சர்வதேச ஆதரவையும் பயன்படுத்தி இராணுவ நெருக்கடியில் இருந்து மீண்டெழவும், அரசியல்சிக்கலைத் தீர்க்கவும் முடியும் என்று சந்திரிகா அரசாங்கம் கணக்குப்போடுகின்றது. அத்துடன் போர்க்கள நிலைமை புலிகளின் பக்கம் மேலும் சாய்வதைத் தடுக்க முடியும் என்றும் அது சிந்திக்கின்றது.

விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

போர்நிறுத்தம் என்ற துருப்புச்சீட்டுமூலம் இந்த மூன்று விடயங்களிலும் சிங்கள அரசுக்கு வெற்றி கிடைக்கும் என்று அது எண்ணுகின்றது.

ஆனால், சிங்கள அரசின் சூழ்ச்சிகரமான இந்த இராணுவ இராஜதந்திரத்திற்குப் பலியாக புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

சிங்கள அரசு சந்தித்துள்ள அரசியல் சிக்கலைத்தீர்க்கும் முகமாக ஜே. வி. பியுடன் ஒரு அரசியல் கூட்டுறவை சந்திரிகா அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அரசியல் கூட்டுறவின் ஆயுளை பொ. ஐ. முன்னணிக்கும் - ஜே. வி. பிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒரு அரசியல் ஒப்பந்தம் நிர்ணயிக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தின் இருபதாவது விதியின் பிரகாரம் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் எந்தவித பேச்சுவார்த்தைகளும் ஒரு வருடகாலத்திற்கு நடாத்தக்கூடாது என இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு பகுதியினரிடையேயும் கைச்சாத்தாகியுள்ள இந்த ஒப்பந்த விதிகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமானால் அரசுக்கான ஆதரவை தனது கட்சி நீக்கிக்கொள்ளும் என ஜே. வி. பி. எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் சந்திரிகா அரசாங்கத்தின் போர் நிறுத்த அறிவிப்பென்பது ஒரு ஏமாற்று நடவடிக்கையேயாகும்.

சிங்கள அரசின் பக்கத்தில் அரசியல் உறுதிப்பாடும் அரசியல் இணக்கப்பாடும் இல்லாத நிலையில் போர்நிறுத்தமுயற்சிகளும் - பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலும் நீர்மேல் எழுதிய எழுத்துக்களாகவே முடியும்.

சந்திரிகா அரசாங்கம் உண்மையில் சமாதானத்தை விரும்பினால் ஜே. வி. பியுடன் செய்து கொண்ட நிபந்தனை வரைபின் இருபதாவது விதியை நீக்கி ஒரு உறுதியான அரசாங்கத்துடன் பேசும் அரசியல் சூழலை ஏற்படுத்தவேண்டும்.

அத்துடன், புலிகள் இயக்கம் மீதான தடையை அகற்றி - தமிழ்மக்களின் சட்டபூர்வமான அரசியல் பிரதிநிதியாக புலிகள் இயக்கத்தை அங்கீகரிக்கவேண்டும்.

மேலும், தமிழ்மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி - தமிழர் நிலத்தில் ஒரு இயல்பு சூழலை ஏற்படுத்தவேண்டும்.

இவைகள் நிறைவேற்றப்பட்ட நிலையில் வரும் போர்நிறுத்தமே உண்மையான சமாதானத்திற்கான படிக்கட்டாக அமையமுடியும்.

இல்லாவிடின் அவைவெறும் வெற்றுக் கோசங்களாகவும் - உலகநாடுகளை ஏமாற்றப் பயன்படுத்தும் தந்திரங்களாகவுமே இருக்கமுடியும்.

1ம் பக்கத் தொடர்ச்சி

சிங்களப்படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் வெளிச்சத்திற்குவந்து அங்கே இராணுவ அட்டூழியங்களும் அதிகரித்து வரும் இன்றைய நிலையில் விடுவிக்கப்பட்ட மண்ணில் புலிகளின் நேரடி நிர்வாகப்பகுதிகளில் வதியும் மக்கள விடுதலை உணர்வுடன் எழுச்சியடைந்துவரும் வரலாற்று நிகழ்ச்சியும் அரங்கேறி வருகிறது.

வன்னியிலும், மட்டக்களப்பிலும், திருமலையிலும், பெருமளவு இளைஞர் இளம்பெண்கள் தங்களை புலிகள் இயக்கத்துடன் இணைத்து, தமிழர்சேனையின் இராணுவபலத்தைப் பெருக்கி வருகின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில், புலிகளின் நேரடி நிர்வாகப் பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளை அவர்களது பெற்றோரே முன்வந்து புலிகள் இயக்கத்தில் இணைத்து வருகின்றனர். முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு, ஒரு குறுகியகாலத்தில். பெருமளவு இளைஞர், யுவதிகள் புலிகளுடன் இணைந்து வருகின்றனர்.

கடந்த இரண்டுவார காலத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் பலநூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் புலிகள் இயக்கத்தில் இணைந்து தமிழரின் படைப்பலத்தைப் பெருக்கி வருகின்றனர். துணைப்படையின் ஆட்பலமும் அதிகரித்துவருகின்றது.

இந்த மக்கள் எழுச்சி தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு புத்தூக்கம் அளித்து வருகின்றது

சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள பிரதேசங்களை என்ன விலைகொடுத்தாவது மீட்டெடுப்பது என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாகவே உள்ளது இந்த மக்கள் எழுச்சி புலிகள் இயக்கத்தின் உறுதிப்பாட்டிற்கு உரம் சேர்ப்பதாகவுள்ளது ஆக்கிரமிப்பு பகுதிகள் மீட்கப்பட்டேயாக வேண்டும் என்ற உணர்வு மக்கள் மத்தியில் பெருகிவருகின்றது

குடாநாட்டிற்கான தரைவழி விநியோகம் முற்றுமுழுதாகவே துண்டிக்கப்பட்ட நிலையில் - வான் வழிவிநியோகமும் முடக்கப்பட்ட நிலையில் - கடல் வழி விநியோகத்தில் மட்டுமே குடாநாட்டுப்படையினரின் தலைவிதி தங்கியுள்ளது

குடாநாட்டிற்கு விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த கப்பற் தொடரணி மீது 16ம் திகதி கடற்புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல் படையினரின் கடல்வழிவிநியோகத்திற்கு சிம்மசொப்பனமாக அமைந்துவிட்டது

கடற்புலிகளின் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக கரையிலிருந்து வெகுதொலைவினூடாக வான்படையின் துணையுடன் சென்ற கப்பல் தொகுதிமீது நடந்த தாக்குதலில் இரண்டு டோராக்கள் மூழ்கடிக்கப்பட்டன. மேலும் சில கடற்கலங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், ஆயிரத்திற்கும் அதிகமான படையினரை ஏற்றிச் சென்ற கப்பலும் கணிசமான சேதத்தைச் சந்தித்துள்ளது.

தொடர்ச்சியாக இரவும் - பகலும் நடந்த இந்த உக்கிர கடற்சமர் சிங்களப் படைத்தலைமையை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

குடாநாட்டை புலிகள் கைப்பற்றப் போகின்றார்கள் என்ற படையினரின் அச்சம் இந்தக் கடற்சமரால் மேலும் அதிகரித்துள்ளது.

தியாகி திலீபனின் 14வது ஆண்டு நிறைவு நாளை உணர்வெழுச்சியுடன் மக்கள் நினைவுகூர்ந்துவருகின்றனர். தமிழ் மக்கள் எழுச்சியடைந்து தலைவர் பிரபாகரனது கரத்தை பலப்படுத்தி தமிழீழம் காணவேண்டும் என்பதே தியாகி திலீபனின் இலட்சிய ஆசையாகும்.

இந்த மகத்தான மாவீரனின் இலட்சிய ஆசைக்கு செயல்வடிவம் கொடுக்க பெருமளவு இளைஞர்களும் இளம் பெண்களும் முன்வந்தபடி உள்ளனர். தமிழரின் படைபலம்தான் தமிழினத்திற்கு விடுதலை தேடித்தரும் என்ற தலைவர் பிரபாகரனது சிந்தனை, செயல்வடிவம் பெறும்காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதையே தமிழர் நிலத்தின் இன்றைய யதார்த்தம் சுட்டிக்காட்டுகின்றது. □



www.eelamview.com

# வயிற்றில் தீ வளர்த்த வலியன்

உன்னை எங்கிருந்து பாடத்தொடங்குவது?
எந்தப் புள்ளியிலிருந்து வரையத் தொடங்குவது?
விண்ணளந்து நிற்கும் விஸ்வரூபத்தை
எந்தக் கண்கொண்டு காண்பது?



இருண்ட வாசலில் ஒளியிறக்கிய பறவையே!
உன் சிறகெரித்த நெருப்புக்குக் கேட்குமா
எம் தெருக்களின் துயர்ப்பாடல்?
பதின்நான்கு வருடங்களுக்கும் இறகுமுளைத்து
பறந்து போயினவா?
அட; காலத்துக்கேன் இத்தனை கடுகதி வேகம்.
சென்ற இடமெல்லாம் தீ மூட்டி எரித்துவிட்டு
அந்த ராமன் கூட அயோத்தி திரும்பினான்
திலீபனே! நீயேன் திரும்பி வரவில்லை.
விழி நிறைய எம் முற்றம் பூத்த வீரியக்கொடியை
அழியா முதலென்றல்லவா அழகு பார்த்தோம்.
அதை வேரோடிழுத்து வெய்யிலிற் போட்டது
இமயம் உயரமெனும் அகம்பாவம்.
துயர முட்செடிகள் படர்ந்திருந்த காலையில்
உழவாரத் திருப்பணிக்கு ஆளணி திரட்டிய
நாவுக்கரசன நீ.
பூரியும், குப்தாவும் வந்திறங்கிய போதே
ஆரியத்வத அடையாளம் கண்டவன் நீ.
சேந்தான்குளத்தில அவர்களுக்குக் காத்திருந்தபோதே
கூந்தல் விரித்த பாஞ்சாலியெனக் கூறினாய்
தீக்குளிக்கப்போகிறது எம் தேசமென்று.
அரிசிப் பொதியோடு அவர்கள் வந்தபோது
பெரிய ஞானியைப்போல் வாக்குரைத்தாய்
இது படடினிக்குப் போடும் படியரிசியல்ல
எம்மைச் சுடடெரிக்கப்போடும் சுடுகாட்டு அரிசியென்று.
மாதமொன்று போகமுன்னரே
அந்த மாரீசமான்களின் வேஷம் கலைந்தது.
வேஷம் கலைந்து அவர்களின் வேட்டைப்பல் தெரிந்ததும்
நீ கோட்டைமுன் நின்று குரல் வைத்தாய்.
கோபத் தீ வளங்கக் குருசேத்திரம் புறப்பட்டாய்.
பெருமிழத்தில பூத்திருந்தாய் அப்போது.
''நீ முன்னே செல
நான் பின்னே வருகிறேன்'' என
வாய்ச்சொல அருளியது எங்கள் வரலாறு.
புலலரித்துப் போனதெம் பூமி.
அன்று விடிந்தபோதே
எங்களின் ஆனந்தம் இருண்டு போனது.

வைகறையெழுந்து குளித்தாய்,
குறிப்பெழுதினாய்,
பூவுக்குப் புத்தாடை புனைவதுபோல்
சாவுக்குத்தானா நீ சட்டையிட்டாய்?
''கந்தன்கருணை''யிலிருந்துன் கால் நடந்தபோது
கோயில் வீதியே குளிர்ந்துபோனது.
கூட்டி வந்து கொலுவிருத்தினோம்.
சாட்சியாக எல்லாவற்றையும் பார்த்தபடி
வீற்றிருந்தாள் முத்துமாரி.
பன்னிரண்டு நாட்களாக உள்ளொடுங்கி
நீ உருகியபோது
வெள்ளைமணல் வீதி விம்மியது.
உன்னெதிரே நின்று எச்சில் விழுங்கியபோது
குற்றவுணர்வு எம்மைக் குதறியது.
வரண்டவுன் நாவு அண்ணத்தில் ஒட்டியபோது
திரண்டிருந்த சுற்றம் தேம்பியது.
நீ படுத்தாய்,
எழுந்தாய்,
பக்கத்திருந்தோரை மெல்லப் பார்த்தாய்,
பின் சுருண்டேதோ சொல்லிச் சரிந்தாய்.
வயிற்றில் தீ வளர்த்த வலியனே!
கயிற்றுக் கொடிபோலக் கருகிக்கிடந்தாயே
மறப்போமா அந்த நாட்களை?
ஆவென வந்துன்னைச் சாவுவிழுங்கியபோது
பாவியராகிப் பக்கத்திருந்தோம்.
அசோகச் சக்கரத்தின் கீழ்
நீ மூச்சிழந்து கிடந்ததை
இந்தப் பாவவிழிகள்தானே பார்த்தன.
ஊர்க்குளத்து நீரை முகில் தூக்கிப்போனது.
மீண்டும் மழையாகிப் பொழியுமென
வானம் பார்த்துக்கிடக்கிறது தேசம்
நீ போனபின் உன் கனவுகளுக்குக் கைகால் முளைத்தன.
திரண்டு வந்தெம் ஊர் புகுந்த குரங்குகளை
இரண்டு வருடத்துள் எறிந்தே கலைத்தோம்.



மணலாற்றில் எம் தலைவன் மறைந்திருக்கவில்லை.
வெட்ட வெளியில் வீச்சரிவாளுடன் நின்று
''செக்மேற்''றை சிதறடித்தார்.
கீழே பார்
உன் ''மக்கள் புரட்சிக்கனவு'' மலர்ந்துளது.
வானத்திருந்து பார்ப்பேன் என்றாயே
நிச்சயம் பார்ப்பாய்.
தமிழீழம் மலரும் நாளை
தலைவன் கொடியேற்றும் அழகை. ☐

**- புதுவை இரத்தினதுரை -**

தமிழீழ விடுதலைப்போர் கடந்த நாலாண்டு காலத்தில் மிகப்பெரும் வளர்ச்சியையும், வெற்றியையும் கண்டுள்ளது. வடதமிழீழப் போர்முனையில் ஏற்பட்ட வெற்றிகள் தமிழீழ மண்ணிலும் வெளியுலகிலும் வியக்தகு மாற்றங்களுக்கு வழிவகுத்தன. ஆனால் தென் தமிழீழ மண்ணில் குறிப்பாக மட்டு - அம்பாறை மண்ணில் மக்கள் உறவிலும், வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகளிலும், நிர்வாக கட்டமைப்புக்களிலும் தேக்கநிலை ஏற்பட்டிருந்தது.

மற்றொருபுறம் சிங்கள குடியேற்றங்களை வேகப்படுத்தி அவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை அதிகரித்து மண்ணை ஆக்கிரமிக்கும் படலம் தீவிரமாகியது. தமிழ்ப் பெண்களை பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்துவதும், கேட்பாரின்றி கைது செய்வதும், கொலை செய்வதும் தாராளமாக நடந்தேறின. எல்லைப்புறக்கிராமங்களில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாறான கொடுமைகளுக்கு அஞ்சி தமது வாழ்விடங்களையும் வளம் நிறைந்த நிலங்களையும் கைவிட்டு வெளியேறினர்.

உறுதியும் வியாபிக்கத் தொடங்கியுள்ளது.

படைப்பலத்தைப் பெருக்குவதில் மக்களின் உறுதி மிக்க செயற்பாடு எல்லோரையும் வியப்பிற்குள்ளாக்கியது. அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, பண்டாரியாவெளி, தாந்தாமலை ஆகிய கிராமங்களிலிருந்து ஒருவாரத்தில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வீரத்திலகமிட்டு போருக்கு அனுப்பியுள்ளனர்.

அனைவரும் கிராமங்கள் தோறும் சென்று மக்களுடன் கலந்துரையாடி தலைவரின் மகத்துவத்தையும் தமிழீழத் தேசியப்பற்றையும் மக்களுக்கு ஊட்டுவதில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர்.

நிர்வாகக் கட்டமைப்புக்கள் சீராக்கப்பட்டுள்ளதுடன், தாக்குதல்களைத் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் தளபதிகள் ஈடுபட்டுள்ளனர். தலைவருடைய ஆலோசனைகள் உரிய காலத்தில் கிடைத்துக்கொண்டிருப்பது

# மட்டுநகர் மண்ணில் புதிய புறநானூறு

## - நிலைமை அறிக்கை -

மட்டு - அம்பாறை மண்ணிலிருந்து கேணல் - கருணா தலைமையில் பெரும் படையணி வடதமிழீழம் நோக்கி நகர்ந்தமையே இத்தேக்கநிலைக்கு காரணமாகியது. வன்னிச் சமர்களத்தில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை தடுத்து நிறுத்த, முறியடிக்கவும் இப்படைநகர்வு இடம்பெற்றது.

நீண்டகால இவ்விடை வெளியைப்பயன்படுத்தி இராணுவத்தினரும் சிங்கள ஆளும் அரசும் வகைமாக ஊடுருவல்களை மட்டு- அம்பாறை மண்ணில் மேற்கொண்டனர். மக்கள் மனங்களை திருப்புவதற்காக இராணுவத்தினர் துப்புப்பிரசுரப்போர் ஒன்றை மேற்கொண்டனர். "வட தமிழீழ போர்முனைக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பி வீணாகப் பலிகொடுக்கின்றார்கள்" என்ற தவறான விசமத்தனமான பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் பரப்பினர். மாவீரர் போராளி குடும்பங்களிடம் பரிவும் பாசமும் காட்டுவது போல் நடித்து அவர்களது மனங்களைக் குழப்பினர். விடுதலைப்புலிகள் தென்தமிழீழத்திற்கு வரப்போவதில்லையென்ற அவநம்பிக்கையினை ஊட்டினார்கள். இவ்வாறு உளவியல் போர் ஒன்றை மக்களுக்கெதிராக இராணுவத்தினர் வேகமாக மேற்கொண்டிருந்தனர்.



அதேவேளை இன்னொரு புறம் முஸ்லீங்களைத் தூண்டி விட்டு தமிழ் மக்களுக்கெதிரான கோபதாபங்களையும் முரண்பாடுகளையும் வளர்த்தனர். ஆபத்தான இத்தகைய போக்கினை அவதானித்துக்கொண்ட எமது தலைவர் அவர்கள் கேணல் கருணாவுடன் பல நூறு போராளிகளை மட்டு - அம்பாறை மண்ணிற்கு அனுப்பி வைத்தார். இவ்வாண்டின் தொடக்கத்தில் தலைவர் எடுத்த இத்தீர்மான முடிவு வியக்கத்தக்க மாற்றங்களை இன்று உருவாக்கியுள்ளது.

மக்களுறவைக் கட்டியெழுப்புதல், தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்தல், சிங்கள குடியேற்ற நடவடிக்கைகளைத்தடுத்து நிறுத்துவதும் வெளியேற்றுவதும், படையணிப் பலத்தைத் திரட்டுதல், சீரான நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்குதல் என பல நோக்கங்களை எட்டுவதற்காக தலைவர் இம்முடிவை எடுத்தார். வடபோர்முனையில் செயற்பட்ட அனுபவங்களுடன் திரும்பிய தளபதிகளினதும், போராளிகளினதும் செயற்திறனால் கிழக்கில் இராணுவத்திடம் சிக்கியிருந்த மக்களின் மீதான ஆக்கிரமிப்பின் அழுத்தம் விலக ஆரம்பித்தது. தலைவர் மீதும் தமிழீழ விடுதலைப்போர் மீதும் மக்களுக்கு இருந்த பற்றும்

"தலைவர் பிரபாகரன் காலத்தில் மட்டு - அம்பாறை மண் முழுவதும் மீட்கப்பட்டு தமிழீழத் தேசியக்கொடி எங்கும் கம்பீரமாக பறக்க வேண்டும். தலைவருக்கு 47 வயதாகிவிட்டது. இனியும் போரை நீடிக்கவிடக்கூடாது. எங்கள் தலைவரும் போராளிகளும் எந்த நாட்டுக்கும், எதிரிக்கும் தலைகுனியக்கூடாது, கையேந்தக்கூடாது. போர் வெல்லும்வரை தலைவருக்கு நாங்கள் பலமாக இருப்போம். வெற்றி எமக்கு விரைவில் கிட்டும்" என வீரவார்த்தைகள் கூறி தம் பிள்ளைகளை போருக்கு அனுப்பிவைத்தபோது அங்கு கூடிநின்ற மக்களும் போராளிகளும் ஆனந்தக்கண்ணீர் சிந்தினர்.

நூற்றுக்கணக்கில் பெற்றார் தமது பிள்ளைகளை போருக்கு மனம் உவந்து அனுப்பி வைக்கும் புதிய வரலாற்றை மட்டக்களப்பு மக்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். தலைவர் மீதும் தமிழீழ விடுதலைப் போரிலும் மக்கள் கொண்ட பற்றும் உறுதியும் புதிய புறநானூற்றை பதிவாக்கியுள்ளது.

பெரும் படையணி உருவாகிக்கொண்டிருக்கும் சமகாலத்தில், மீட்கப்படும் தமது மண்ணைக்காக்க மக்கள் படைப்பயிற்சியில் இறங்கியுள்ளனர். வீட்டுக்கொரு வீரனை போருக்கு அனுப்பும் எழுச்சி ஒருபுறமும், ஏனைய இளைஞர் யுவதிகள் மக்கள் படையணியாகி பயிற்சிபெற்று வருவது இன்னொருபுறமுமாக மட்டக்களப்பு மக்கள் விடுதலைக்கு தயாராகின்றமை எதிரியைக் குழப்பத்திற்குள்ளாக்கியது. படுவான்கரை கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சியில் மட்டும் 3000 பேர் பங்கெடுத்தமை மக்களின் விடுதலை உணர்வை உறுதிபடக் காட்டியுள்ளது.

கேணல் கருணாவின் வழிகாட்டலோடும் ஆலோசனைகளோடும் வடதமிழீழப் போர்முனையில் படைநடத்திய அனுபவம்மிக்க தளபதிகள்

மக்களுக்கும் போராளிகளுக்கும் உற்சாகத்தையும், உத்வேகத்தையும், கொடுத்துள்ளது.

மட்டக்களப்பையும், அம்பாறையையும் நிலத்தொடர்பால் துண்டிப்பதற்கு உருவாக்கிய கல்ஓயா (பட்டிப்பளை ஆறு) சிங்களக்குடியேற்றத்திற்கு பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட மத்திய முகாமை (Central camp) கடந்த 26 ம் திகதி நள்ளிரவு போராளிகள் தாக்கியழித்தனர்.

மண்ணை மீட்பது, சிங்களக்குடியேற்றத்தை அகற்றுவது, நிலத்தொடர்பை ஏற்படுத்துவது என்ற இலக்குகளுக்கு நேரடியாக பழிக்குப்பழி தீர்க்கும் தாக்குதலாகவும் பரிச்சார்த்த தாக்குதலாகவும் இது மேற்கொள்ளப்பட்டது. திருமதி மு. கோணேஸ்வரி என்ற குடும்பப்பெண்ணை கணவன், பிள்ளைகளுக்கு முன்னால் வைத்து மாறிமாறி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய பின்னர் பிறப்புறுப்புக்குள் கிரனைட்டை திணித்து வெடிக்கவைத்து கொலைசெய்த கொடியவர்களின் முகாமை போராளிகள் தமது முதல் இலக்காக்கிக்கொண்டனர்,

அதிகரித்து வரும் தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளுக்கு முடிவு கட்டவும் மண் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்கவும் தொடரப்போகும் தாக்குதல்களை வழியமைக்கும்.

பெருகிவரும் படையணியும், எழுச்சிகொள்ளும் மக்கள் படையும், தொடரப்போகும் தாக்குதல்களும் தலைவரின் தீர்க்கமான முடிவிற்குக்கிடைத்த வெற்றிகளாகப்போகின்றன. தலைவருடைய புதிய தந்திரோபாய நகர்த்தல்கள் மட்டுநகரில் இருக்கும் சிங்கள இராணுவ சிப்பாய்களை மட்டுமின்றி சிங்கள அரசின் கபடநாடகத்தையும் விரைவில் உடைத்தெறியும் என்பது உறுதி.

— மணலாறு விஜயன் —



www.eelamview.com

# "சந்திரிக்கா சந்திக்கும் வோட்டர்லூ"

மிகவிரைவில் கட்டாய ஓய்வில் சிங்கள மக்களால் வீட்டிற்கு அனுப்பப்படவிருக்கும் ஜனாதிபதி அம்மையாருககு, ''நரலோகத்தின் அதிபதி'' என்கின்ற சிங்களத்தின் அதியுயர் விருதும் வழங்கப்படவிருப்பதாக அறிகிறோம். இவ்வேளையில், தனது ஓய்வுகாலத்தையாவது பயனுள்ளவகையில் அவர் கழிக்க வேண்டும் என்பதற்காக ஒரு ஆலோசனையை அவருக்கு வழங்க விரும்புகின்றோம். பல வருடங்களுக்கு முன்னரே திருக்குறள், சிங்களத்தில நாணயக்கார என்கின்ற அறிஞரால் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. இதனைப் பெற்று படித்து அவர் பயன்பெற



வேண்டும் என்பதே எம்விருப்பம். அதிலும் பொருட்பாலில், அரசியல் அங்கத்தின் ஐம்பத்தாறாவது அங்கமான கொடுங்கோன்மை பற்றிய குறள்களைப் படித்தல் நலம். அதிலும் குறிப்பாக அவ்வதிகாரத்தின் கடைசிக் குறளான-

ஆபயன் குன்றும் அறு தொழி
லோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின் —

என்பதை ஆழ்ந்து வாசித்தால்தான், விட்டதவறு என்னவென்பதை அவர் புரிந்துகொள்வார். ஒரு நாட்டை ஆள்பவன்/ஆள்பவள முறையாக அந்நாட்டை காவாதிருந்தால் என்ன நடக்கும்? அந்நாட்டில் வளம் குன்றும்; அறுவகைத் தொழிலோரும் தொழிலற்று விதிமறந்து கெடுவர். திருவள்ளுவர் இட்ட சாபம் இது.

எங்கள் அன்புக்குரியவர்களே! இவ்விடுதலைப் புலிகள் ஏட்டின் நூறாவது குரல் முகிழ்க்கும் போது வரலாற்றிலிருந்து முகிழ்க்கும் சில அரிய செய்திகளை வலியுறுத்த விரும்புகின்றோம். சில பேருண்மைகளை வரலாற்று ஞானம் என்னும் அறிவுப்பேரொளியின முன்நின்று நீங்கள் அறியும் காலமிது. வரலாற்றின் நீண்ட வலிய கரங்கள சிங்கள தேசத்திற்கான தண்டனையை எழுதும இறுதி தீர்ப்புநாள் அண்மிக்கின்றது. மிகமிக அண்மைக் காலம் வரை, தமிழ்மக்களபடும் அவலத்தினை வேடிக்கை பார்த்தவர்கள, இன்று தமக்கு நடக்கும் அவலத்தினையும் சூழநின்று வேடிக்கை பார்க்கும் அபாயகரமான சூழலுக்குச் சென்றுவிட்டார்கள். ''அதிவேக மிகையொலி அதிரடித்தாக்குதல்'' எனப் புதியதொரு வர்ணிப்பு அடைமொழியைப் பெற்றுவிட்ட அண்மைய கட்டுநாயக்கா வான்படை சர்வதேச விமான நிலையத் தாக்குதலின் பின், 2500 ஆண்டு கால சிங்களப் பேரினவாதம் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குளளே மூழ்கிவிட்ட விசித்திரம்தான் என்ன? பேரினவாதத் திமிரேறி கூவிய குரல்கள் யாவும் சுடலை ஞானக் குரல்களாக, விதிர்விதித்து வக்கிழந்த குரல்களாக, கழிவிரக்கம வழியும குரல்களாக மாறிய விந்தைதான் என்ன? அன்று அம்மையாரின புன்சிரிப்பினை கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளத்தின் வெளிப்பாடு என்றவர்கள் இன்று அதனை நயவஞ்சக, ஏமாற்றுச் சிரிப்பென எழுதுவதுதான் என்ன?

''வெண்ணிற அரசி
உலாப்போனாள்,
கருமையைப் படரவிட்டு,
படரவிட்டு
பகல்களையும் இரவாக்கி
திசைகள் எங்கும்
இருள்வர்ணம் குழைத்து
அப்பிட''

என கவிஞர் கருணாகரன் எழுதிய எமக்கான வரிகள் இன்று சிங்களவரின் கவிவரிகளாகிவிட்ட வியப்புத்தான் என்ன? இவ்வாறாக என்ன? என்ன? என வினா வெழுப்பும் காரணந்தானென்ன எம் உடன்பிறப்புக்களே! அன்றும் இன்றும் இன்னமும் நீங்கள் சிந்திய சிந்தும் கண்ணீரில், செந்நீரில், வியர்வையில் வளர்த்த விடுதலைப் பயிரல்லவா காரணம். அன்று தமிழினத்திற்கு பெரும் தீங்கிழைத்த துரோகி துரையப்பா கொல்லப்பட்ட 27. 07. 1975 அன்று வீச்செய்திய விடுதலைப் போரின் அத்தனை நிகழ்வுகளினதும் தூண்டல்ப் பேறுகளின் துலங்கல்களையே இன்றுநாம் காண்கின்றோம். இத் துலங்கல்களைத் துலக்கமாக்கிய வினையூக்கியாக செயல்ப்பட்டது கட்டுநாயக்காத் தாக்குதல்.

2500 ஆண்டுகால சிங்களவர் வரலாற்றில் முதன்முறையாகப் பன்முகப்பரிமாணம் கொண்ட பல முதனிலைமாற்றங்கள் அரசியல், சமூகவியல், பொருளியல், உளவியல ரீதியாக ஏற்படுகின்றன. இவை மிகவிரைவில சிங்களத்தின் அடிப்படை சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைக்கப்போகின்றன, இதன் முதற்கட்டமாகவே இன்று சிங்கள ஒற்றையாட்சி அரசின அத்திவாரங்கள் ஆட்டங்காணத் தொடங்குவதைக்காணகின்றோம. பிரித்தானியர் தமது நலன்களுக்கான சந்தையாக உருவாக்கிய இலங்கை அல்லது ஸ்ரீலங்கா என்கின்ற செயற்கையானதொரு நாடு என்பதன் பௌதிக வடிவமும், அதற்கு சிங்களப் பேரினவாதிகள் கொடுத்த கருத்தியல் வடிவமும் இன்று கேள்விக்குறியாகி விட்டன. இதுவொரு இமாலயளவிலான நுட்பமான தரமாற்றம். இக்கருத்தியலகள பற்றி அதிகம் அறியப்படாதபோதும ஜேன்ஸ் புலனாய்வுத்துறை ஏட்டின் (Janes Intelligence) மோதற்களங்களின ஆய்வாளரும், இன்றைய உலகின் முக்கிய மோதற்களங்களிற்கு நேரடியாகச்சென்று அனுபவம் பெற்றவருமான போல் கரிஸ் அணமையில கொழும்பில் பினவருமாறு கூறியிருந்தார். ''புலிகள வென்றுகொண்டிருக்கிறார்கள. என்பதில எள்ளளவும் ஐயமில்லையாது. ஆனாலும இரண்டு அல்லது மூன்று வருடங்களில நிலைமை மிகப்பாரதூரமானதாகிவிடும. தறபோதைய குழப்பகரமான அரசியல சூழ்நிலை அதனைத் தடுகக உதவப்போவதில்லை. போரின்முழுமையான விலையை இப்போது ஸ்ரீலங்கா செலுத்தத்தொடங்கிவிட்டது. அணமைய கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் இந்நாடு இராணுவரீதியாகவும் பொருண்மிய ரீதியாகவும் தோற்றுப்போய்க்கொண்டிருப்பது தெளிவாகிவிட்டது. இப்பொழுது கடுமையான சோதனைக்கட்டத்திற்கு முகம் கொடுக்கும் ஸ்ரீலங்கா மிகவிரைவில் தனது இறுதிச்சோதனைக்கட்டத்திற்கு முகம் கொடுக்க வேண்டிவரும். ஸ்ரீலங்கா தொடர்ந்தும் தனது இறைமையை ஒரு நாடாகப் பேணமுடியுமா என்பதே அவ்விறுதித்தேர்வு'' இதனை வரலாற்றின் வார்த்தையில் ஸ்ரீலங்காவின் வோட்டர்லூ அண்மிக்கின்றது; என்றோ தார்மீக நெறியடிப்படையில் கூறினால் ஸ்ரீலங்காவின்குருசேத்திரம் நெருங்குகின்றது என்றோ நாம் பதிவுசெய்யலாம்.



பலநூற்றாண்டு கால அடக்குமுறையின [illegible]த்தனத்தின் உருசியை தமிழ் மக்களை உணர வைத்தவர்கள், தமது அவலகரமான வீழ்ச்சியின் அவமானத்தின் உருசியை உணரும்போது தாங்க முடியாமல் குமுறுகின்றார்கள். தம்மைப் படுகுழியில் தள்ளிய தலைமைகளைச்சபிக்கின்றார்கள்; தக்க தலைமை எங்கேயென அரற்றுகின்றார்கள்; தம்மைத் தாமே நொந்து கொள்கின்றார்கள். யூலை 24 ந்திகதிக்கு முன்னர் தமிழர்களைக்கிள்ளுக்கீரைகளாக அவமதித்து எழுதிய முன்னாள்

**— க. வே. பாலகுமாரன் —**

அரச உயரதிகாரி எஸ். கே. கொடகே என்பவர் இம்முறை எழுதுகின்றார். (ஐலண்ட் 28 07) ''அதிர்ச்சி, ஆழ்ந்த சோகம், எங்கும் பாதுகாப்பின்மை, அவமானம், பரிதாபம் நம்பமுடியவில்லையே இவைதான் இன்றைய சிங்களவர் என்னும் போது மனதில் வரும் வார்த்தைகள். இம்முறை மிக மோசமாக கைவிடப்பட்டவர்களாகிவிட்டோம். எங்களது பாதுகாப்பிற்கு யார பொறுப்பு? நடந்தவை யாவற்றிற்கும யார் பொறுப்பு?'' வழமையாகத் தமிழர் என்றாலே பட்டைத்திருநீறு பூசி, நடுவல் பொட்டுவைத்து குடுமி வைத்து இழிவாகக் காட்டுவோரையும வஜயசாமா இம்முறை ஐலண்டில (27-08) சிங்களவர் தயங்குவது கண்டு மகிழ்வுடன புலிகள்

''சிங்கள மோடயா
பொமப கன்ன யோதயா''

(இப்பாடல்வரிகள சிங்களவர் தம்மைப்பற்றி தாமே கேலியாகப்பாடும் பாடலினது) எனப் பாடுவதாக வரைந்திருக்கின்றார். ''தற்கொலைப் பாதையில் சிங்களவர்'' என்றே தம்மைப்பற்றி தலைப்பிட்டு எழுதும் மனநிலையில் சிங்களவர் இன்றிருக்கின்றார்கள்;

''புலிப்பூச் சாண்டி காட்டி இனியொமமை ஏமாற்றவோ திசைதிருப்பவோ முடியாது. புலிகளை வெல்லவே போர் என்கிற பொய்மையை இனி விதைக்க முடியாது. இது நவபேரினவாதிகளாகப் பிறப்பெடுத்திருக்கும் ஜே.வி.பி காரரின்

(18ம்பக்கம் பார்க்க)



www.eelamview.com

# திரிசங்கு சொர்க்க நிலையில் சந்திரிக்கா அரசு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வரலாற்றுப் பிறப்பெடுத்து 25 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இந்த 25 வருட போராட்ட வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு, சிங்கள அரசு பாரிய இராணுவ-பொருண்மிய-அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. கட்டுநாயக்கா மீதான தாக்குதலும்-அதன் விளைவுகளும் இத்தகையதொரு திரிசங்கு சொர்க்க நிலைக்குள் சிங்கள அரசைத் தள்ளிவிட்டுள்ளது.

கடந்த ஏழு - எட்டு வருடங்களாக சிங்களப் பேரினவாதத்திற்கிருந்த ஒரு சாதக அம்சமாக, சர்வதேச ரீதியில் இருந்து வந்த, அதன் ஆட்சியாளர் சந்திரிகா அம்மையாரின் ''நற்பெயரும்'' வீழ்ச்சி கண்டு விட்டது.

சிங்கள தேசத்தின் தேசியப்பத்திரிகைகள் கூறுவதுபோல சிங்கள அரசானது மிகமோசமான தேசிய நெருக்கடிக்குள் இன்று சிக்கி விட்டது.

இராணுவ பொருண்மியச் சிக்கலுக்குள் சிங்கள அரசானது அகப்பட்டபோதெல்லாம் அதிலிருந்து மீள வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்துவந்த உலக நிதிநிறுவனங்களும்-நட்பு நாடுகளும் முன்புபோல கண்களை மூடிக்கொண்டு உதவி வழங்க இன்று தயாராக இல்லை. சந்திரிகா அரசாங்கத்தின் நம்பகத்தன்மை அரசியல் ரீதியில் அற்றுப் போனதே இதற்குப் பிரதான காரணம்.

இலங்கையின் தேசிய இனச் சிக்கலை அமைதி வழியில் தீர்ப்பதற்குத் தடையாக புலிகள் இயக்கமே இருந்துவருகின்றது என்ற சிங்கள அரசின் பரப்புரையை ஒரு தலைப்பட்சமாக ஏற்று புலிகள்மீது பகைமை பாராட்டிய இலங்கையின் நட்பு நாடுகள் பல இப்போது தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஒன்பது மாதங்களாக சமாதானப் பேச்சுவார்த்தைக்காக புலிகள் இயக்கம் முயற்சித்த செயல் ரீதியான அணுகுமுறைகளையும் - அதை நேர்மையாகக் கடைப்பிடித்த செயல்களையும் உலகம் முழுமையாக ஏற்றுக்கொண்டது.

ஆனால் சமாதானவிரும்பியாக தன்னைக்காட்டிக்கொண்ட சந்திரிக்கா அம்மையார், புலிகளின் சமாதான முயற்சிகளுக்கு சிறிதும் உதவவில்லை. அதேவேளை, சமாதான முயற்சியை குழப்புவதிலும்-போரை விரிவுபடுத்துவதிலும் சிங்கள அரசு ஈடுபட்டது. சந்திரிக்கா அரசாங்கத்தின் இச்செயல்கள் உலக சமூகத்திற்கு வெறுப்பைக்கொடுத்தது. சந்திரிகா அரசாங்கத்தின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லை என்று நேரடியாகக் கண்டுகொண்டது. சர்வதேச சமூகம் தனது அதிருப்தியை நேரடியாகவும் மறைமுகமாகவும் சிங்கள அரசுக்குக் காட்டியது.

கட்டுநாயக்கா தாக்குதலாலும்-அதன் விளைவுகளாலும் பொருண்மியரீதியில் திணறிக்கொண்டிருக்கும் சிங்கள அரசுக்கு பொருண்மிய ரீதியில் கைகொடுக்க உலக நாடுகள் எதுவுமே முன்வரவில்லை. கடந்த 50 வருட தமிழர் விரோத ஆட்சியில பேரினவாதிகள் சந்தித்த பாரிய அரசியல் தோல்வியாக இது கொள்ளப்படுகின்றது.

உதவிகள் - கடன்கள் என்ற வகையில் சிங்கள அரசுக்குவரும் நிதிப்பலத்தின் பெரும்பகுதி போர்ச் செலவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பது நீண்டகால உண்மை. இதுகாரணமாகப் போரினால் வரும் பொருண்மியச் சுமைகள் சிங்கள மக்களின் தோள்களில் விழுவது தவிர்க்கப்பட்டுவந்தது எனவே, சிங்கள இளைஞர்களின் உயிரிழப்பு என்ற ஒரு அம்சத்தைத்தவிர சிங்கள மக்கள்போரினால்பெரிதும் பாதிக்கப்படவில்லை. தமிழர்க்கெதிரான போர் சிங்கள மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாததால் சிங்கள மக்களும் போரை விரும்பினர். போர்க்கொள்கையை முன்வைத்து ஆணைகேட்ட சந்திரிகா அம்மையாரே மீண்டும் ஜனாதிபதி ஆகினார். சிங்களத்தின் அரசியல் வாதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மார்க்கமாக தமிழருக்கெதிரான போரையே பயன்படுத்தி வருகின்றனர்.

சிங்கள தேசத்தின் இந்த அரசியல் ஓட்டத்திற்கு அனுசரணையாக இருக்க இனியும் தாம் தயாராக இல்லை என்ற செய்தியை உலகநிதி நிறுவனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் சிங்கள அரசுக்கு உணர்த்திவிட்டன.

போரை நிறுத்தி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும்படி அவை சிங்கள அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்றன. இதையும்மீறி போர்நடாத்த முடிவெடுத்தால் அதற்குரிய நிதி வளத்தை நீங்களே தேடிக்கொள்ளுங்கள் என்று கூறி அவை ஒதுங்கவும் முயல்கின்றன.

அத்தியாவசியப் பொருட்கள்மீது கூடுதல் வரி அறவிட்டு போருக்கான நிதியை பெறும்படி உலகவங்கி கருத்துக்கூறியுள்ளது. போரின் முழுச் சுமையையும் சிங்கள மக்கள் அனுபவிக்கட்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே அது கருத்துக் கூறியுள்ளது. அப்போதுதான் போரை மையப்படுத்தி நடைபெறும் இரத்தம் சிந்தும் அரசியலுக்கு ஒரு முடிவு பிறக்க வாய்ப்பேற்படும் என்றும் உலகவங்கி எண்ணுகின்றது. இது தனியே உலகவங்கியின் கருத்தாக மட்டும் இருக்காது. உலகவங்கிக்கு நிதிவழங்கும் உலக நாடுகளினதும் கருத்தாகவும் இருக்கும்.

ஆயினும், உலக சமூகம் எண்ணுவது போல நடக்க வாய்ப்புண்டா! என்பது சந்தேகமாகவே உள்ளது சிங்கள தேசம் சந்தித்துள்ள தேசிய நெருக்கடியை உணர்ந்து இந்த நெருக்கடிக்கு மூலகாரணமான தமிழரின் இனப்பிரச்சனையை அரசியல் ரீதியில் தீர்த்துவைக்க சிங்கள மக்கள் ஆணையிடுவார்களா! அல்லது போர்ச்சுமையை தாங்களே முழுமையாகத் தாங்கிக் கொண்டு சிங்கள தேசம் குட்டிச்சுவராகு மளவிற்குப் போர் புரிய விரும்புவார்களா! என்பதற்குப் பதில் சிங்கள மக்களிடமும் - அதன் அரசியல்வாதிகளிடமுமே உள்ளது.

இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவரின் கைகளில சென்றடைந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழின அழிப்பு சிங்கள அரசின் தேசியக் கொள்கையாக இருந்து வருகின்றது.

சுதந்திர இலங்கையின்முதலாவது அரசாங்கம மலையகம் வாழ் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்ற- அகதிகள் ஆக்கியது. இலங்கை நாடாளு-மன்றத்தில் அவர்களுக்கிருந்த அரசியல் பலத்தைப் பறித்து- அரசியல் அனாதைகள் ஆக்கியது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர் நிலங்களைக் குறிவைத்து அங்கே சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நில அபகரிப்பைத் தொடக்கி வைத்தது.

இதற்கு இன்னுமொருபடி மேலே சென்ற பண்டார நாயக்கா எங்கும் சிங்கள மொழி- எதிலும் சிங்களவர்களே என்று வெறிகக்கி ஆட்சிப் பீட மேறி தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் இரண்டாம்தர மக்களாக அரசியல் அமைப்பு ரீதியாக அடக்கி வைத்தார். தமிழின அழிப்பிற்கு தூபமிட்டு அதைத் தொடக்கியும் வைத்தார்.

தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றில் விவாதத்திற்கு வந்த போது இசைமைத்துவம் பேசி அரசியல் தீர்க்க தரிசனங்கள் கூறிப் பெயர் எடுத்த சிங்கள இடதுசாரிகள், சிறிமாவோ அம்மையாருடன் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்த போது தமிழினத்திற்கெதிரான இனவெறி நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து துணை போயினர்,

சோல்பரி அரசியலமைப்பு வாயிலாக தமிழ் மக்களுக்கிருந்த சாதாரண அரசியல் பாதுகாப்பு சரத்துக்களையும நீக்கிய சிறிமாவோ அம்மையார் இலங்கையின அரசியலமைப்புச் சட்டத்துடன் சம்பந்தப்படாத அந்நியர்களாக தமிழ்மக்களை ஆக்கினார். பௌத்த மதத்தை ஆட்சி மதமாக்கினார். சிங்கள பௌத்த மேலாதிக்கம் அரசியல் சட்டமாக்கப் பட்டது. தரப்படுத்தல் என்ற நடைமுறை மூலம் தமிழரின் உயர்கல்வியும் வேலைவாய்ப்புகளும் பறிக்கப் பட்டன.

அடுத்து ஆட்சிப்பீடம் ஏறிய ஜே. ஆர். ஜெயவர்த்தன தனக்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் இயற்றிய இனவெறிச் செயற்பாடுகளை தீவிரப் படுத்தியதுடன் தமிழினப் படுகொலையையும் முன்னின்று நடாத்தி தமிழினத்தின் மீது பெரும் போரையும் பிரகடனப்படுத்தினார். தமிழர் தாயகத்தைச் சிதைத்து அழிக்கும் திட்டத்துடன் வடக்கு கிழக்கு எங்கும் சிங்களவர்களை பெரும் எடுப்பில் குடியமர்த்தி, மகாவலி அமைச்சு என்ற பெயரில் சிங்கள குடியேற்றங்களை வளர்த்தெடுக்க ஒரு அமைச்சகத்தையும் ஆரம்பித்து நில அபகரிப்பை உச்ச நிலைக்கு இட்டுச் சென்றார்.

முதலில் கிழக்கு மாகாணம் பின்னர் வடமாகாணம் என்ற கொலைத் திட்டத்துடன் தமிழின அழிப்பில் ஈடுபட்ட பிரேமதாசா அரசாங்கம் ஒரு குறுகிய காலத்தில் - கிழக்கு மாகாணத்தில் ஒரு பாரிய தமிழின அழிப்பைச் செய்து முடித்திருந்தது.

இலங்கைத்தீவை தொடர்ச்சியாக பதினைந்து வருடங்கள் ஆட்சி செய்த இந்த இரு தலைவர்களினதும் இனவெறி ஆட்சியால் உலக அரங்கில், கறைபட்டுப்போய்க் கிடந்த சிறிலங்கா அரசை தூக்கி நிறுத்தியதுடன் ஒரு விதமான உலக அங்கீகாரத்துடன் தமிழின அழிப்பை ஆரம்பித்தார் சந்திரிகா அம்மையார்.

'சமாதானத்திற்கான போர்' என்ற பெயரில் தமிழ்மக்களுக்கெதிரான போரையும் - தமிழின அழிப்பையும் அவர் உச்ச நிலைக்கு இட்டுச் சென்றார்.

சந்திரிக்காவின் ஆட்சியில் தமிழ் மக்கள் கொடூரமான அவலங்களையும் - பாரிய இழப்புக்களையும் சந்தித்தபோதும் புலிகள் இயக்கத்தின் தலைமையில் விடுதலைப் போரானது தீவிரப்பட்டு உச்ச நிலைக்கு சென்றுவிட்ட யதார்த்தமும் சந்திரிகா ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்துள்ளது.

புலிகளை அழித்து - விடுதலைப்போராட்டத்தை நசுக்கும் ஒரே இலக்குடன் பெருமளவு நிதிப் பலத்தை ஒதுக்கி அழிவுகரமான ஆயுததளபாடங்களுடன் பல இராணுவ நடவடிக்கைகளை தமிழர் நிலத்தில் நடாத்தி அவற்றில் தோல்வி கண்டதுடன் சர்வதேச ஆதரவுகளையும இழந்து - சந்திரிகா அரசாங்கம் இன்று தனிமைப்பட்டுப்போயுள்ளது.

போர்த்தோல்வி-பொருண்மியச் சிதைவு இரண்டால் சிங்கள மக்களிடம தோன்றியுள்ள ஆட்சிக்கெதிரான உணர்வலைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சந்திரிகா அரசாங்கத்தை ஒரு அரசியல நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது.

சிங்கள அரசு சந்தித்துள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையில்

— எல்லாளன் —

(18ம் பக்கம் பார்க்க)

"போர்முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்ட போதும், போரின் விளைவால் பொருளாதாரம் சீர் குலைந்த போதும, போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட போதும் போர் அணுகுமுறையைக் கைவிட சிங்கள அரசு தயாராக இல்லை."





www.eelamview.com

# சிங்களத்தின் போர் இயந்திரம் சீர்செய்ய முடியாத அளவிற்குச் சேதம்

**போ**ரைப் பொறுத்த வகையில் வான்படையின் பங்கு முதலாம் உலகப் போரில் தொடங்கிவிட்டது. எனினும் இரண்டாம் உலகப் போரின் போதே அதன் காத்திரமான பங்களிப்பு இருந்தது.

இரண்டாம் உலகப்போரின் போது பிரித்தானியாவின் வான்படையும் - ஜேர்மனியின் வான்படையும் பெருமெடுப்பில் மோதிக்கொண்டன. அமெரிக்க விமானப் படையும் ஜப்பான் விமானப் படையும் பாரிய வான் சமர்களில் பொருதின.

''பிரித்தானியாவுக்கான சமர்'' மற்றும் ''மிட்வே சமர்'' என்பன போர்விமானங்களின் பாரிய பங்களிப்புடன் நடைபெற்ற சமர்களாகும். 'பேள்' துறைமுகம் மீது ஜப்பான் நடாத்திய வான் தாக்குதல் இன்றுவரை பேசப்படுகின்றது. இத்தகைய சமர்களில் இரு அணிகளினதும் வான்படை விமானங்கள் நூற்றுக்கணக்கில் அழிந்த வரலாறு உண்டு.

அதன் பின்னர் 1967 இல் அரபு - இஸ்ரேல் போரின் போது தளத்தில் தரித்து நின்ற எகிப்திய வான்படையின் போர் விமானங்கள் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடாத்திய ஒரு அதிரடித் தாக்குதலில் எகிப்திய வான்படையின் பெரும்பகுதி அழிக்கப்பட்டதும் போர் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

இவை எல்லாம் பலம் பொருந்திய வான்படைகளைக் கொண்டிருந்த நாடுகளிடையே நடந்த போரில் நிகழ்ந்த சம்பவங்களாகும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வீறுகொண்டெழுந்த விடுதலைப்போராட்டங்களில், ஆக்கிரமிப்பு அரசுகளின் வான் படைகள் போராட்ட இயக்கங்களை நசுக்கவும் போராடும் மக்களை மிரட்டிப்பணியவைக்கவும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

வியட்னாம் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அதனதன் ஆக்கிரமிப்பு அரசுகள் நடாத்திய வான்வழித் தாக்குதல்கள் அழிவுகரமானவையாக இருந்தன.

இத்தகைய விடுதலைப் போராட்டங்களின் போது ஆக்கிரமிப்பு அரசுகளின் வான் படைகளானது போராடும் இயக்கங்களுக்கும் - மக்களுக்கும் பேரழிவுகளை ஏற்படுத்தின.

எனினும், ஆக்கிரமிப்பு அரசுகளின் வான்படைகளின் போர்விமானங்கள் பேரழிவுகளைச் சந்தித்ததாக வரலாறுகள் இல்லை.

போரியல் வல்லுனர்களால் பெரிதும் சிலாகித்து ஆய்வு செய்யப்படும் வியட்னாம் விடுதலைப்போராட்டத்தின் போது அமெரிக்க வான்படை அழிவுகளைச் சந்தித்ததாகவும் வரலாறு இல்லை.

தென்வியட்னாமில் பரவலாக அமெரிக்க வான் படைத்தளங்கள் அமைக்கப் பட்டிருந்தன. தனது மண்ணில் இருந்த எதிரி வான் தளத்திற்குள் ஊடுருவித் தாக்கி அமெரிக்க வான் படை விமானங்களுக்கு பேரழிவு உண்டுபண்ண வியட்னாம் போராளிகளால் முடிந்திருக்கவில்லை.

தரைப்போரில் வியட்னாம் போராளிகள் பெற்ற பெரு வெற்றி அவர்களுக்கு விடுதலை தேடிக்கொடுத்தது எனினும், அமெரிக்காவுடனான போரில் அதன் வான் படை இணைந்திய போர் நிகழ்ச்சி எதுவும் வரலாற்றில் பதியப்படவில்லை.

ஆனால், த.வி. போராட்டம் இந்த விடயத்தில் வரலாறு படைத்துள்ளது. சிங்கள வான்படையின் வான் ஆதிக்கத்திற்கு எதிராகப் பலத்த சவால்கள் அடிக்கடி எழுந்துள்ளன. ஒவ்வொன்றாக சிங்கள வான்படை தொடர்ச்சியாகச் சந்தித்த வான்கல இழப்புகள் அதற்குப் பாரிய நெருக்கடியை உண்டாக்கின.

இந்தநிலையில், யூலை 24ம் திகதி, கட்டுநாயக்கா வான் தளத்தில் சிங்கள வான்படை சந்தித்த பேரழிவு அதன் வான் ஆற்றலின் அரைப்பங்கிற்கும் மேலான பலத்தைச் சிதைத்துவிட்டது.

விடுதலைப் போர் நடைபெறும் ஒரு நாட்டில் தனியொரு தாக்குதலில் அல்லது தனி ஒரு சமரில் பத்திற்கும் மேற்பட்ட வானகலங்களை ஆக்கிரமிப்பு அரசுகள் இழந்ததாக வரலாற்றுப் பதிவுகள் இல்லை.

அந்த அற்புதமான போர்ச் சாதனையை கட்டுநாயக்கா மீதான ஒரு விடிகாலைத் தாக்குதல் ஏற்படுத்தி போரியல் வரலாற்றிலும் இடம் பிடித்துவிட்டது.

தமிழர்க்கெதிரான போரில் சிங்களவான்படை காத்திரமான பங்கை ஆற்றிவருகின்றது. இராணுவ ரீதியான அதன் பங்களிப்பைப் போலவே உளவியல் ரீதியான பலத்தையும் வெற்றி பற்றிய நம்பிக்கையையும் சிங்கள மக்களுக்கும், சிங்களப் படையாட்களுக்கும் அது வழங்கி வருகின்றது.

தமிழர் மீது குண்டுவீசி தமது விமானங்கள் கட்டுநாயக்கா ஓடுதளத்தில் ஓடி மேலெழுவதையும், தமிழீழ வான்பரப்பில் அவை மிதந்தவாறு தாக்குதல் நடாத்துவதையும் ரூபவாகினி ஒளிபரப்புச் செய்து சிங்கள தேசத்தை ஒருவித மகிழ்ச்சிப் பிரவாகத்தில் வைத்திருக்க முயல்வது வழமை.

சிங்களமக்கள் அனுபவித்து வந்த சினிமாத்தனமான இந்த மகிழ்ச்சியை கட்டுநாயக்கா மீதான கொமாண்டோத் தாக்குதல் சிதைத்துவிட்டது.

அதேசமயம், தற்போதைய போரின் யதார்த்தத்தை சிங்களமக்களும் பார்த்து - அனுபவிக்கும் ஒரு காட்சித்திடலாக அதே கட்டுநாயக்காவே அமைந்தது. சிங்கள மக்களைப்பொறுத்தவரை ஒரு நகைமுரணாக அமைந்துவிட்டது.

தாக்குதலாளர்களின் வீரம் தியாகம், தாக்குதல் திட்டத்தின் நேர்த்தி என்பன பற்றி உலகச் செய்தி ஊடகங்கள் அனைத்துமே வியப்பும் பாராட்டும் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளன.

சிங்களப்படைத்தலைமைக்கு பூரணதிருப்தி ஏற்படும் வகையில் கட்டுநாயக்காவின் காப்பு ஏற்பாடுகள் இருந்தன. முள்வேலிகள் - கண்ணி வெடிகள் - இலத்திரனியல் கண்காணிப்புச் சாதனங்களுடன் சுமார் 3000 படையாட்கள் தளத்தைக் காவல் செய்தனர்.

இந்த உயர்காவல் வலயத்தை சந்தடியின்றி வெற்றிகொண்டு உள்நுழைந்து, நகர்ந்து தாக்குதலாளர்கள் புரிந்த முதலாவது போரியல் சாதனை. உள்ளே நகர்ந்து சென்று தமது தாக்குதல் திட்டத்தை நேர்த்தியாக நிறைவேற்றியது இவர்கள் செய்த இரண்டாவது போரியல் சாதனை.

சிங்கள தேசத்தின் செய்தி ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின்படி தளத்தினுள்ளே புகவந்த போது மட்டுமல்ல, உட்புகுந்த பின்னரும் சுற்றுலாப் பயணிகள் போல சுதந்திரமாக மணிக்கணக்கில் சுற்றித்திரிந்து, தாக்குதலைத் தாமே ஆரம்பித்து- தாமே முடித்து வைத்து அற்புதமானதொரு போரியல் சாதனையை உலகிற்கு விட்டுச்சென்றுள்ளனர்.

இராணுவ - பொருண்மிய இலக்குகளைக்கொண்ட இந்த நுட்பமான தாக்குதல் திட்டம் சிங்கள அரசைத் திகைப்பூட்டி அதற்கு இராணுவ அவமானத்தையும் உண்டுபண்ணிவிட்டது. சிங்கள மக்கள் அனுபவித்த இன்னுமொரு தேசிய அவமானமாகவும் தாக்குதலும் - அதன் விளைவுகளும் அமைந்துவிட்டன.

இப்போதெல்லாம் சிங்கள அரசானது தான் சந்திக்கும் இராணுவத் தோல்விகளால் எழும் தேசிய அவமானங்களை சகிக்கத் தொடங்கிவிட்டதெனலாம்.

யாழ் குடாநாடு புலிகளிடம் சிக்கப் போகின்றதென்ற இராணுவ கையறுநிலை சிங்கள அரசிற்கு ஏற்பட்ட போது தனது படையை உயிருடன் மீட்டுத்தருமாறு முன்னர் உலக நாடுகளைக் கெஞ்சியிருந்தது. இப்போது, தனது படையினரால் கட்டுநாயக்காவை பாதுகாக்க முடியாமல் போனவுடன் பிரித்தானியாவின் கூர்க்காப் படையினரையும், வெளிநாட்டுப் பாதுகாப்பு நிபுணர்களையும் கூலி கொடுத்து அழைத்து அவர்களிடம் கட்டுநாயக்காவையும்... சிங்கள தேசத்தின் கௌரவத்தையும் பாதுகாத்துத்தரும்படி கோரிக்கை விட முயல்கின்றது.

கட்டுநாயக்கா தாக்குதலும் - அதன் விளைவுக்கும் சிங்கள அரசுக்கு கொடுத்த பொருண்மிய இழப்பு பத்தாயிரம் கோடிரூபா என சந்திரிகா அம்மையாரே பகிரங்கமாகக் கூறிவிட்டார். பாதுகாப்பிற்கென பட்ஜெட்டில் (வரவு செலவுத் திட்டத்தில்) ஒதுக்கப்பட்ட ஒருவருட நிதியைவிட இது அதிகம். ஒரு வருடத்திற்கான போர்ச்செலவுக்கு ஈடான பணத்தை சிங்கள அரசு ஒரு தாக்குதலில் இழந்துவிட்டது.


இப்போது, கொழும்புத் துறைமுகம் தாக்குதலுக்குட்படலாம் என சிங்கள அரசு அஞ்சுகின்றது.

550 ஏக்கர் நிலப்பரப்பையும் 320 ஏக்கர் நீர்ப்பரப்பையும் கொண்டமைந்த கொழும்புத்துறைமுகம் சுமார் 2000 படையினரால் காவல் செய்யப்படுகின்றது.

கட்டுநாயக்காவில் 3000 படையாட்கள் - கொழும்புத் துறைமுகத்தில் 2000 படையாட்கள் - திருகோணமலை துறைமுகத்தில் 2000 படையாட்கள் இவற்றுடன் கொலன்னாவ எண்ணெய்க் குதம் மற்றும் தொலைத்தொடர்பு தலைமையகம் என்பவற்றிலும் 1000 ற்கும் மேற்பட்ட படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இத்துடன், கொழும்பு மாநகரிலுள்ள பாராளுமன்றம் - ஜனாதிபதி மாளிகை - அமைச்சகங்கள் - படைத்தலைமையகங்கள் மற்றும் கேந்திர நிலைகள் என சிங்களத்தின் பொருண்மிய - இராணுவ - அரசியல் நிலைகளில் பலஆயிரம் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வகையில் சிங்களக் காவற்றுறை தவிர்ந்த சுமார் 15 000 அளவான படையாட்களை பிரதான போர்க்களத்திற்கு வெளியே உள்ள நிலைகளில் குவித்து வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குள் சிங்கள அரசு இப்போதுள்ளது. மாற்றுவழி ஏதுமற்ற ஒரு நெருக்கடியாக இதுசிங்கள அரசுக்கு உள்ளது.

போராயுதங்கள் அழிந்தது -தேசிய பொருளாதாரம் நலிந்தது - போருக்கான மன உறுதி சிதைந்தது - போர் வீரர்கள் யுத்த களத்திற்கு வெளியே முடக்கப்பட்டது... என பல்வேறு பரிமாணங்களில் கட்டுநாயக்கா மீதான தாக்குதல் - அதன் விளைவுகளும் அமைந்து விட்டன.





www.eelamview.com

# மீண்டு விஸ்வரூபிக்கும் வனம்

விடுதலைப் புலிகளின் ஒயாத அலைகள் - 03 மீட்டுத்தந்த ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியால் சென்றுகொண்டிருக்கின்றேன் வீதியில் இரண்டு ஓரங்களிலும் இருந்த அடர்ந்த முதிய காட்டு மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு காடு இருந்ததே தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றது. ஆங்காங்கே வீதியோரங்களில் வெட்டிக் குவிக்கப்பட்டிருக்கும் காட்டு மரங்களினூடு வளைந்து செல்லும் வீதியின் வழியே நெஞ்சைப்பிசையும் உணர்வுகளுடன் என் பயணம் தொடர்கின்றது.


இது நடந்தது 1999 இல் நவம்பர் மாதத்தில், ஆனால் வன்னியின் முதுகெலும்பாய் பிரதானமான இயற்கை வளமாயிருக்கும் காடுகள் மீதான சிங்களத்தின் ஆக்கிரமிப்பு ஐம்பது ஆண்டுகளின் முன்னரேயே சிங்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. வன்னிப் பிரதேசம் கிளிநொச்சி, முல்லைத்தீவு என பிரிக்கப்பட முன்னரேயே ஸ்ரீலங்காவுக்குத் தேவையான மொத்தக் காட்டு மரங்களின் பலகைகள், மரக்குற்றிகள் குறிப்பாக தேக்கு, மலைவேம்பு போன்ற அரிய மரங்கள் வவுனியா என அழைக்கப்பட்ட அன்றைய வன்னியின் காட்டுப் பிரதேசங்களில் இருந்தே பெறப்பட்டதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

வடக்கு கிழக்கை தன்னுடைய பிரதேசமெனக் கூறிவந்தாலும்கூட இற்றைக்கு ஐம்பது ஆண்டுகள் முன்னரேயே சிங்களப் பெரும்பான்மையினம் தனது சாதாரண நுகர்வுத் தேவைகளுக்காகக் கூட தனது பிரதேச வனவளத்தைப் பயன்படுத்தாமல் அன்னிய தேசமெனக்கருதி தமிழ்மக்கள் வாழும் பிரதேச வனவளத்தையே அழித்து தனது நுகர்வைப் பூர்த்திசெய்திருந்தது. மட்டுமல்லாமல் எழுபதுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள்காடாக்கலின் போது எமது பிரதேசத்திற்கு ஒத்துவராத நிலக்கீழ் நீரையும், மண்வளத்தையும் அதிகளவு உறிஞ்சுவதன் மூலம் சுற்றுச்சூழலை பெரும் வறட்சி நிலையினுள் தள்ளிவிடும் கபட நோக்கில பெரும் தொகையான யுகலிப்பிட்ஸ் (சஞ்சீவி) இன மரங்களையும் வன்னியில் மீள்காடாக்கம் செய்தது.

இவற்றின் தொடர்ச்சியாக தொண்ணூறுகளில் ஆரம்பத்திலிருந்து கடந்த பத்தாண்டுகளாக ஸ்ரீலங்காப் படைகள் வன்னியின் மணலாறு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் பிரதேசங்களில் மேற்கொண்ட பாரிய ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் மூலம் பெருமளவிலான வனப்பிரதேசங்களை இல்லாதொழித்தது. இறுதியாக வன்னியின் மையத்தளத்தினூடு ஊடுருவிய 'ஜெயசிக்குறு' படைகள் மணலாறு, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம், முறிகண்டி, மன்னார் என அடர்ந்த கானகங்கள் பலவற்றை ஆக்கிரமித்தனர். இராணுவ பாதுகாப்பு தேவைகளுக்காக பெருமளவான காட்டுமரங்களை வெட்டியழித்தனர் வன்னிப் பெருநிலப்பரப்பின் இயற்கைச் சமநிலையில் பெரும் குழப்பத்தை விளைவித்தனர். மீண்டும் சிங்களத்தின் நுகர்விற்காக ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த எமது வனங்களில் இருந்து பெரும்தொகையான மரங்களை வெட்டி சிங்கள தேசத்துள் கடத்தினர். மாங்குளம், கனகராயன்குளம் பகுதிகளில் இராணுவத்தினர் ஏற்படுத்தியிருந்த பாரியளவிலான மரங்களை வெட்டி அரிவுசெய்யும் தளப்பிரதேசங்கள் இப்போது காடுகளின் நடுவே இனங்காணப்பட்டுள்ளன.

நேரடியான இந்தவகை இயற்கைவன அழிப்பிற்கு அப்பால் மறைமுகமானதொரு வன அழிப்பையும் சிங்களதேசம் எம் மக்களையே பயன்படுத்தி எமது இயற்கை வளங்கள் மீது செய்திருந்தது. நகர்புறங்களில் வாழும் மக்களின் வாழ்விடங்களைக் கைப்பற்றுவதன் மூலம் மக்களை காடுகளை நோக்கி இடம்பெயர வைத்தது. நிர்ப்பந்தம் காரணமாக காடுகளில் பரம்பலடைந்த மக்களினால் தம் வாழ்விடங்களிற்காகவும் அன்றாட வாழ்விற்காகவும் தவிர்க்கமுடியாது சில காட்டுப்பிரதேசங்களும் அழிக்கப்பட்டன.

பல் தசாப்தங்களாக சிங்களம் எமது வனங்கள் மீது வெவ்வேறு வடிவங்களில் மேற்கொண்ட கண்மூடித்தனமான வனஅழிப்பு நடவடிக்கைகளும், அத்துமீறல்களும், சுரண்டல்களும் ஆரம்பந்தொட்டே அவதானிக்கப்பட்டிருப்பினும் தனக்கென ஒரு தளப்பிரதேசத்தினை கட்டுப்பாட்டினுள் வைத்து இயங்கக்கூடியவாறான பலத்தை விடுதலைப் புலிகள்இயக்கம் எட்டிவிட்ட தொண்ணூறுகளிலிருந்தே அத்துமீறிய வனஅழிப்புகளை, சுரண்டல்களைத் தடுப்பதற்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகின. எனினும் எண்பதுகளிலேயே, வன்னியின் காடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் கரந்துறைந்த காலங்களிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பின்படி வன்னியின் கானகங்களை கட்டுப்பாடற்று அழிக்கும் செயற்பாடானது தடுக்கப்பட்டிருந்ததும், அத்துமீறிய வனஅழிப்பாளர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததும் கவனத்திற்குரியது. இந்நிலையில் வனவளத்தின் பாதுகாப்பு முக்கியத்துவம் கருதி வன்னி உள்ளிட்ட தமிழீழத்தின் தேசிய வனவளம் அழிவுறுவதைத் தடுக்கும் முகமாக 1993ம் ஆண்டு ''தமிழீழ வனவள பாதுகாப்புப்பிரிவு'' ஆரம்பிக்கப்பட்டது. இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் இயங்கும்



மீள் காடாக்கத்திற்கு தயாராகும் நாற்று மேடைகள்

வனவள பாதுகாப்புப்பிரிவு தமிழீழத்தின் காட்டு வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் தனது வேலைத்திட்டத்தை பிரதானமாக காடழித்தலைத் தடுத்தல, மீளவனமாக்கம் செய்தல் என இரண்டு பிரிவுகளாக மேற்கொண்டு வருகின்றது.

வன்னியின் எந்தப் பகுதியிலாயினும் காட்டு மரங்கள் வெட்டப்படுவது இன்று வனவளப் பாதுகாப்புப் பிரிவினரால் தடுக்கப்பட்டிருக்கிறது அனைத்துக் காடுகளும் பயிற்றப்பட்ட 'பிரதேச காடுபேணல் அலுவலர்'களினால் பராமரிக்கப்படுகிறது. மேலும் பிரதேச காடுபேணல் அலுவலர்களின் அனுமதியுடனும், நிபுணத்துவம்சார் வழிகாட்டலுடனும் காட்டில் காணப்படும் மரங்களின் பரம்பலிற்கும் முதிர்ச்சிக்கும் ஏற்ப, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பாதிக்காத வகையில் தெரிவுசெய்யப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு வனவளப் பாதுகாப்புப் பிரிவினரின் 'மரமடுவம'களுக்கு அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசங்களிலும் இருக்கும் மரமடுவங்கள தமது பிரதேச மக்களின் மரத்தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

இதேவேளை மக்களது வாழ்விடங்களில் உள்ள மரங்களும் அனாவசியமாக வெட்டப்படுவது தடைசெய்யப்பட்டிருக்கின்றது. தமது பிரதேச வனவள பாதுகாப்புப் பிரிவினரது அனுமதியுடன் மாத்திரமே மக்களின் வாழ்விடங்களில் உள்ள மரங்களும் அவசியத்திற்கேற்ப வெட்ட அனுமதிக்கப்படுகின்றன. இவ்வாறு மக்களுக்குத் தேவையான நுகர்விற்கான மரங்கள் வனவள பாதுகாப்புப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட வழிகளில் வழங்கப்படுவதால் எழுந்தமானமான காடழிப்பு தவிர்க்கப்படுகின்றது. மேலும் வெட்டப்பட்ட காடுகளின் நிலத்தன்மைக்கும் தேவைக்கும் ஏற்ப இயற்கைச் சமநிலையை பேணும் வகையில மீள்காடாக்கம் செய்வதற்கும் ஏதுவாக அமைகின்றது.

மரமடுவங்களின் மூலம் மக்களிற்கான மரத்தளபாட நுகர்வுப்பொருட்கள் நிறைவுசெய்யப்படும் அதேவேளை வனவளபாதுகாப்புப் பிரிவின் மீள்காடாக்கும் குழுவினரால் வனப்பிரதேசங்கள் மீள்காடாக்கம் செய்யப்படுகின்றன. 1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மீள்காடாக்கம் இன்று வன்னியின் பெரும்பகுதி வனப்பிரதேசங்களில் பரம்பலடைந்துள்ளது.

வனவள பாதுகாப்புப்பிரிவினரால் பராமரிக்கப்படும் பாரிய நாற்றுப்பண்ணைகளில உருவாக்கம் செய்யப்படும் தேக்கு, மலைவேம்பு, சமண்டலை, சவுக்கு, போன்ற காட்டு மரங்கள தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மீள்வனமாக்கம் செய்யப்படுகின்றன. துறைசார் நிபுணத்துவ வழிகாட்டலுடன் பரிசோதிக்கப்பட்ட மண்ணின் தெரிவுக்கேற்ப மரங்கள் நடப்படுகின்றன. பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களைக்கொண்டு பராமரிக்கப்படும் மீள்காடாக்கம் செய்யப்பட்ட மரங்கள் தாம் சுயமாக வளர்வதற்குரிய காலத்தை எட்டும்வரை கண்காணிக்கப்படுகின்றன.

மீள்வனமாக்கல் திட்டத்தின் கீழ் 1994ம் ஆண்டு முதல் இதுவரை வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இருபத்தியிரண்டு மீள்நடுகைத்திட்டங்களில் அண்ணளவாக எட்டு இலட்சம் வரையான மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் குறிப்பாக மேழிவனம், பனங்காமம், பள்ளமடு ஆகிய மூன்று திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னூறு ஏக்கர் வரையிலான விஸ்தீரணமுடைய மீள்நடுகைத்திட்டங்கள் 1998 இன் பின்னான ஜெயசிக்குறு, ரணகோச இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் மாத்திரம் முற்றாக அழிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

எமது வனங்களை அழித்து எமது வளங்களைச் சுரண்டிச்சென்று தமது தேவைகளுக்குப்பயன்படுத்தி தமிழீழத்தின் குறிப்பாக வன்னியின் வனவளத்தை அழிப்பதன் மூலம் நீண்டகால ரீதியில் தமிழீழத்தின் இயற்கைச் சமநிலையைக் குழப்பத்திற்குள்ளாக்கி எமது பூமியை வறட்சி நிலையினுள் தள்ளிவிடுவதற்காக தொடர்ந்தும் முயற்சித்தும் செயற்பட்டு வரும் சிங்களத்திற்கு தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவினரின் மீள்



www.eelamview.com

# கால அகராதியின் பக்கங்கள்

எழுந்து அடங்கி,
உருக்கொண்டு
ஓயாது உழல்கிறது அலை.
கரை அதன் வரவிற்காய் காத்திருக்கின்றது.

அம்பா ஒலிகள்
காற்றினுள் புகுந்து ஒலிக்க
மரங்கள் நீந்துகின்றன.

குத்திப் பறந்து நிலையெடுத்து
இரையை அடைய
நீர்ப்பறவைகள் அலைகின்றன.

சூரியக் கோளம் தொடுவானத்தை மேவி
உயர உலா வரப் போவதாய்
கதிர்களை அனுப்பிக் கட்டியம் கூறுகின்றது.

வாழ்வியக்கம் ஆரம்பமானதாய்
மனங்கள் நம்புகின்றன

சதிராடும் தென்னங்கீற்றுகளில்
காகங்கள் சல்லாபிக்கின்றன.

அலை மேவிய பொந்தினை
நண்டுகள் புதிப்பிக்கின்றன.

இனி வெள்ளத்தை வாரியிறைத்தபடி
மேற்கு திசை முகத்துள்
புதைந்து கொள்கிறான் கதிரவன்.

ஒரு நாட்பொழுது
உச்சிப் புள்ளியை தொட்டு வீழ்ச்சியடைகின்றது
காலம் தன் கரத்துள்
நிகழ்வுலகை பொத்திக் கொள்கின்றது.

அலைகள் திரளும்
வானம் ஓவியம் காட்டும்
மரங்கள் உயரும்

எல்லையற்ற பரவையில் எல்லையையிட்டபடி
முளைக்கும் கரும்புள்ளிகள்
பொது, பெரிதாகி...
உயிர்ப் பொட்டுக்களை குதறிக் கொள்ளும்
நீர்மையின் வர்ணம் மாறி
செம்மையினை போர்த்திக் கொள்ளும்.

குந்தியிருந்து, தலையிலடித்து
உருகி வழியும் மொழிகள்
வளியினை நிறைக்கும்
அலை உரசும் ஒலியில்
சோகம் உதிர்ந்து கொள்ளும்.

வழமைகள் மாறின
உயர உயருதலும்,
விடிவெள்ளி காலிப்பின்
வழியறிந்து ஒழுகுதலும் தொலைந்து போயின
விழியுடன் உதரமும் வேகிக் கொண்டன
உறுமி, உறுமியே இயற்கையின் வனப்புகள்
இறந்து கொண்டேயிருந்தன

பொழுதொன்றில் பிளந்த கரும்புள்ளியில்
எழுந்த ஒளிர்வில்
கடல் சிலிர்த்துக் கொண்டது.
நீர்த்தாயின் மடி நிறைந்து கொண்டது.
தாய்மையின் தாலாட்டில்
வளர்ந்த ஆன்மாவை
தத்தெடுத்துக்கொண்டது கடலின் மடி

காலவகராதியில் பக்கங்கள் அதிகமாயின,
கிட்ட வந்து வாய் பிளந்து
உயிர்க்குருவியை உருவியெடுத்தோடிய
காலங்கள் மறைந்து கொண்டன.

ஆழியினுள் அவதாரங்கள்
அலையினுள் தாவிக்கொண்டன.

நிரைப்பிளந்து
எதையையோ குறி வைத்தல்.
முடிவுகள் வெளியாகின.
மரணம்... நிரந்த மரணத்துள்
இரும்புருக்குகள் ஒடுங்கிக்கொண்டன.

அச்சகத்துள் புதிதாக
வரவுகள் பதிவாகின.
வரலாற்றை புதிதாக்கின.

விடியலின் இனிமையை
உணர்கின்ற உணர்வினுக்கு
வழியொன்று தேடிட
தாய் வயிறு திறந்து கொண்டது.
மரபுகள் கடந்து
முடியாதது என்றதை முடித்துக் கொள்ளும்
பூவையர்கள் பூத்தனர்.

இருளை மறைத்து
ஒளியினுள் ஒளியைத்தேடிக் கொள்ள
விழிகளிரண்டு வழியைப் பார்த்தன.
துலங்கிய வழியில் குவிந்தன அனைத்தும்
விடுதலை வேகம் பெற்றதை
உணராத புத்திகள் புத்துருப் பெற்றன
வாழ்தலிற்கான யாத்திரைகள் அதிகமாயின.

முற்றுப் பெறாத எச்சங்கள் பலவாகின.
உருள்கிறது காலம்.
யாத்திரையில் துவண்ட கால்கள்
ஒளிவெள்ளத்தின் ஒளிர்வில்
சிலிர்த்துக் கொண்டன.

ஓட்டங்கள் தொடங்கின.
முடிவற்ற ஓட்டத்தில்
முரசங்கள் அறைந்தன.


வாழ்தலிற்காய் தாம்
வாழ்வதையறிந்த மனங்கள்
மலர்ந்து கொண்டன.
கரங்கள் வேகம் பெற்று
விழிகளிற்கருக்க
உயர்ந்து கொள்கின்றன.

வாழ்வியக்கம் உயிர் பெற்று
அசைகிறது.

அலையிசை -

(08ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டு விஸ்வ...




வனமாக்கல்' திட்டம் மூலம் எமது மக்கள் கொடுத்த பதில் தீர்க்கமானது.

தொழில் புரட்சியாலும் நவீன அறிவியல் வளர்ச்சியாலும் பசுமைப்போர்வை இழந்து தவிக்கும் பல முன்னேற்றமடைந்த நாடுகள் மீள்வனமாக்கல், காடழித்தலைத் தடுத்தல். பசுமை பேணும் இயக்கங்கள் என பதறித்துடித்து தம்மை பாதுகாக்கவென உலகின் தொண்டர் நிறுவனங்களுக்கு பெருந்தொகையான நீதியை ஒதுக்கு

அதே வேளை யுத்தம் மூலம் சிறுபான்மையான ஒரு இனத்தையும் அந்த இனத்தின் அவர்கள் வாழும் பூமியின் இயற்கை வளத்தையும் அழிப்பதற்கு ஸ்ரீலங்கா போன்ற நாட்டிற்கு முண்டு கொடுத்து நிதியுதவியினை வழங்கிவருவது. வேதனைக்குரியது எமது மக்களின் பாரம்பரிய வாழ் நிலங்களின இயற்கை வளங்களை அழித்து மக்கள் வாழத்தகுதியற்றதாக எம் தாயகப்பிரதேசத்தை ஆக்கத்துடிக்கும் சிங்களத்தின் நாசகாரத் திட்டங்களுக்கு எதிராக தமிழீழ வனவளத்தைப் பாதுகாக்கும் தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவினது செயற்பாடுகள் அனைவரது பாராட்டுக்கும் கவனத்திற்கும் உரியன.

இன்று மீண்டுமொருமுறை ஓயாத அலைகள் மீட்டுதந்த ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் நடந்துகொண்டிருக்கின்றேன். மீள்காடாக்கம் செய்யப்பட்ட புதிய வனங்களைக் கடந்து இடையிடையே வீதியோரங்களில் நாட்டப்பட்டிருக்கும் மரங்களினூடாக நீண்டு செல்கிறது அந்த வீதி இப்போது மீட்கப்பட்ட தம நகரங்களை நோக்கி மக்கள் சென்றுவிட்டனர். வன்னியின் கணிசமானளவு வனங்களை ஆக்கிரமித்திருந்த சிங்களப் படைகளும் விரட்டப்பட்டுவிட்டன. தொடரும் மீள்காடாக்கத்தினால் மீண்டும் துளிர்விடும் எமது வனங்கள் தன் மக்களிற்கு அடைக்கலம் தந்து வாழ்வித்த பெருமிதத்துடனும், தன் காலடியில் சிங்களத்து பட்டாளம தோற்கடிக்கப்பட்ட வீராப்புடனும தன் விஸ்வருபத்தை நோக்கி மீண்டும் வளர்ச்சியுறத்தொடங்கிவிட்டது.

- அன்புமாறன் -



www.eelamview.com

# 25 வருட ஆயுதப்போர் தடங்கலும் தடையுடைப்பும்

புதிதாகப்பிறந்த இந்த நூற்றாண்டில் உலகின் தலைசிறந்த கெரில்லாப் போரியல்வாதியாக தலைவர் பிரபாகரன் கணிக்கப்படுகிறார். விடுதலைக்கு எதிராக எழுந்த பெருமலைகளைக் கரைத்து போராட்ட வெள்ளத்தை இலக்கு நோக்கி பிரவகிக்கச் செய்யும் விடுதலைப்புலிகளின் ஆதார விசையாக இவரே இயங்குகிறார். அதிசயிக்கத்தக்க தனது ஆற்றலால் விடுதலைப் போராட்டத்தின் தலைமைத்துவமாக, விடுதலைப்புலிகள் அமைப்பை 25 வருடம் வழிநடத்தி உலகின் முதன்மையான கெரில்லாப்போரமைப்பாக விடுதலைப்புலிகளை உருவாக்கியதன் மூலம் இன்று உலகின் கவனம் தமிழீழத்தை நோக்கி திரும்பியுள்ளது. அடையப் பெற்ற இந்த உயர்நிலையால் இன்று தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் சர்வதேச அரசியலில் அலட்சியம் செய்யவியலாத பிரச்சனையாக பிரசன்னமாகியுள்ளது; வெல்லப்படமுடியாத ஒரு சக்தியாக தமிழரின் போராட்ட அமைப்பு விளங்கப்பட்டிருக்கின்றது. இத்தகையதொரு பரிமாணத்தில் நின்று கொண்டு தமிழரின் உரிமைப்போராட்டத்தின் தொடக்கம் பற்றி, ஆயுதப்போராட்டத்துக்கு வரலாறு எழுப்பிய தேவைபற்றி, ஆயுதப்போராட்டத்தை எதிர்கொண்டு நின்ற சவால்களை எவ்வாறு எமதுதலைமைத்துவம் சந்தித்தது என்பது பற்றி, மீண்டெழுந்த இப்போராட்டம் அடைந்த போரியல் ரீதியான வளர்ச்சி பற்றி அரசியல் இராணுவ கண்ணோட்டத்துடன் மீள சிந்தனைக்குட்படுத்துவது, போராட்டம் கடக்கவேண்டியுள்ள காலத்திற்கு ஒரு விச்சையும், உத்வேகத்தையும், புத்தலையும் தருமென்ற வகையில் அதை நோக்காககொண்டு இக்கட்டுரை அமைவது பொருத்தமுடையதாக இருக்குமென நம்பலாம்.

1796 இல் பிரித்தானியரால் வன்னி அரசு வெற்றிகொள்ளப்பட்டதோடு இத்தீவில் தமிழரின் ஆதிபத்தியம் அடியோடு அற்றுப்போனது. பின், இத்தீவு ஒரே நாடாக்கப்பட்டதும் அப்போதைய பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியல் நலன்களுக்கான தந்திரோபாயத்திற்கமைய இலங்கையின் அரசியல் அதிகாரமிக்கவர்களாக பெரும்பான்மையினரை உருவாக்கியதும் தமிழரின் அரசியல் உரிமை ஈவிரக்கமற்று நசுக்கப்பட்டது. இந்நிலை 1931 டொனமூர் அரசியல் திட்டத்திலிருந்து உருவானது. அன்றிலிருந்து தமிழர்கள் தமது அரசியல் உரிமைகோரி எழுச்சியுறத் தொடங்கினர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவு புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கை நிர்ணயித்தது. 1943 இல் மேற்கத்தைய ஏகாதிபத்திய அரசியல் நலன்களுக்கேற்ப இலங்கைத்தீவில் இரு தேசியஇனம் ஒரு நாடாகவே 'சுதந்திரம்' அடைந்தது. அத்துடன், அதன் ஆட்சியதிகாரம் சிங்களப் பெரும்பான்மை இனத்தவரிடம் ஒப்படைக்கப்படுவதற்கான ஒரு அரசியல் அமைப்பையும் பிரித்தானியா உருவாக்கியிருந்தது. அன்றிலிருந்து சிங்களதேசத்தின் தமிழின ஒடுக்குமுறை கட்டற்றவாறு வலுப்பெறத் தொடங்கியது. இந்த வன்மம் தமிழரின் உரிமைப்போராட்டத்தைத்தொடக்கவும், தொடரவும் செய்தது.

தமிழரின் அரசியல் உரிமையைப் பெற்றுக்கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைத்துவங்களின் முயற்சியென்பது ஆரம்பத்தில் அரசியல் கோரிக்கைகளாகவே எழுந்தன. முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கேளாக்காதுடன் நிராகரிக்கப்பட்டபோது கோரிக்கைகள் வலுப்பெற்றன. விண்ணப்பங்களோ வெறுமனே கடதாசிகளாக சிங்களத்தலைமைத்துவங்களால் வீசியெறியப்பட்ட தலைகுனிவோடு அவை நிரந்தர முறையீடுகளாக முன்னேற்றம் கண்டன. அதிகார சிங்களப் பெரும்பான்மை இனத்திடம் இருக்கும்போது அதற்கெதிரான முறையீடுகளை ஏற்கும்படியாவதைத் தவிரவேறு எந்த நீதியைத் தந்துவிடப்போகிறது முறையீடுகள் பயனற்றுப்போனது. பாராளுமன்ற விவாதத்திற் குத்த தமிழ்த்தலைமைகள், பிரச்சனையைப் பிரபலயப்படுத்தவும் பகிரங்கப்படுத்தவும் அதன்மூலம் அரசுக்கு ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்கவும் முயன்றபோது அவை ஒரு பொருட்டின்றி அலட்சியப்படுத்தப்பட்டன.

சிங்களத்தின் ஒவ்வொரு புறக்கணிப்பும் தோற்கடிப்பும் தொடரத்தொடர தமிழர்களின் குரல்வளை மேலும் நசுக்கப்படலாயிற்று எனவே உரிமை பெறும் அவர்களின் முயற்சியும் மேலும் மேலும் வன்மையடைந்து வந்தது. 1956 வரை நீட்சிகண்ட இப்போக்கு ஈற்றில் தமிழர்களை அரசுக்கெதிரான சாத்வீகப்போராட்டத்திற்குத் தள்ளியது. மக்கள் வீதியில் இறங்கினர். 1956 காலி முகத்திடல் போராட்டத்திலிருந்து, 1961 இல் வடகிழக்குத்தழுவி பெருமெடுப்பாய் திரண்டெழுந்து சத்தியாக்கிரகமிருந்தது வரை சாத்வீகப் போராட்டம் வளர்ச்சியுற்றது. ஆனால் ஆத்ம நேயமற்ற அராஜகவாதிகளால் சாத்வீகம் புரிந்து கொள்ளப்படுவது சாத்தியமற்றுப்போனது. சாத்வீகப்போராட்டவாதிகளை, சிங்களக்காடையர்களிலிருந்து இராணுவம் வரை ஏவிவிட்டு, மலசலப்பைகள் எறிவதிலிருந்து துப்பாக்கிச்சூடு வரையிலான தாக்குதல் நடத்த அரசு பணிப்பு வழங்கிப்பார்த்திருந்தது.

போராட்டம் முனைப்புற்றபோதெல்லாம் நாடு தழுவிய ரீதியில் கலவரம் என்ற பெயரில் தமிழின அழிப்பை சிங்கள அரசு கட்டவிழ்த்துவிட்டது. தமிழ்மக்கள் ஈவிரக்கமற்றவாறு கொன்றொழிக்கப்பட்டனர். தமிழர்களிடம் எதிர்க்கும் உணர்வு மேலும் வலுப்பெற்றது. இத்தகைய சூழல் சமரச முயற்சிகளைத்தோற்றுவித்தது. ஆனால். அந்த சமரச முயற்சிகள் முரண்நிலையைத் தணித்து, சமாதானத்தை நோக்கி நகரவில்லை; சிங்கள இனவாத அரசுகள் அதை நோக்கமாகக் கொண்டு அதில் இறங்கவில்லை மாறாக; தமிழரின உணர்ச்சிக்கொந்தளிப்பை தணியவைத்து, திசை திருப்பி போராட்ட கொதிநிலையை அடக்குவதற்காகவே அவற்றைப் பயன்படுத்திக்கொண்டன. 1961 இல் சத்தியாக்கிரகப்போராட்டம் இராணுவத்தினரைக்கொண்டு வன்மமாக அடக்கப்பட்டதோடு உரிமைப் போராட்டத்தில் சாத்வீக வழிமுறை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டது. அவ்வாறே 1965 டட்லி செல்வா உடன்படிக்கையும் வெள்ளை அறிக்கையானதுடன், சமரசமுயற்சி நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டு விட்டது.



எண்பதுகளில் தமிழீழத் தேசியத்தலைவர்

1970 ஆம் ஆண்டு கல்வி தரப்படுத்தலும், 72ல் முதலாம் குடியரசு அரசியல் யாப்பும் கொண்டு வரப்பட்டதுடன் சிங்களப்பேரினவாதம் அரசியலமைப்பு ரீதியாக சட்ட அங்கீகாரத்தையும், பாதுகாப்பையும் பெற்றது. பேரினவாதம் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டது, தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டனர். தமிழர்கள் அரசியல் நீரோட்டத்தில் தமது உரிமைகளைப் பெறுவதற்காக முன்னேறும் அனைத்துக்கதவுகளும் அடைக்கப்பட்டு விட்டன. இழப்பதற்கு ஏதுமற்றவாறு தமது அனைத்து அரசியல் உரிமைகளையும் ஏறத்தாழ இழந்தனர். அவர்களது தனிநபர் உயிர்வாழ் உரிமையுங்கூட இனவன்முறையாலும், சிங்கள குடியேற்றங்களாலும் பறிக்கப்பட்டது. சிங்கள பேரினவாதத்தின் இத்தகைய இயக்கத்திற்கும், தொடர்ச்சிக்கும் ஒரு காத்திரமான பின்புலமுண்டு. அதுவே தமிழர்களின் கவனத்திற்கும், விழிப்புக்குமுரியது.

## பேரினவாத முன்னெடுப்பின் பகைப்புலம்

இலங்கைத்தீவில் தமிழ் சிங்களமென்ற இரு இனங்களின் தனித்துவமான தோற்றத்திலிருந்து சிங்கள தேசத்தில் தமிழர் பற்றிய அச்சமும் பகைமையும் இருந்தே வந்துள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் மனப்படிமமாக இருந்த இந்த உணர்வை நன்கறிந்த சிங்கள அரசியல்வாதிகள்; இதைத் தூண்டுவதன் மூலமும், வளர்ப்பதன் மூலமும் தலைமைத்துவ அந்தஸ்தைப் பெறமுடியுமென்ற யதார்த்தத்தை உணர்ந்தனர்.

எனவே இனத்துவேச அரசியலைக் கையிலெடுப்பதன் மூலம் அரசியல் செல்வாக்கைப் பெறவும், தலைமைத்துவத்தை வகிக்கவும் முடியுமென்ற அசையாத நம்பிக்கையுடன் அதில் தீவிரமாகக் குதித்தனர். இதனை முதலில் சரியாக இனங்கண்டு பின்பற்றியது ஐ.தே.க தான். ஆரம்பத்தில் முற்போக்கு கலந்த போதும் சி.சு.க பின்பு ஆணைகளை யதார்த்த நிலைமையைப் புரிந்துகொண்டு இனத்துவேச அரசியலைக் கையிலெடுத்துக்கொண்டது, 1956 இல் இருந்து சிங்கள ஆட்சியாளர்கட்சிகளும் இதிலிருந்து விலகியிருக்க விரும்பவில்லை, அரசியல் செல்வாக்கைப் பெறும் சூத்திரம் அவர்களை விலகியிருக்க விடவில்லை.

எனவே சிங்கள தேசத்தின் கட்சி அரசியல் என்பது தமிழ் இனத்துவேச அரசியலாக மாறியது. அதன் போட்டியிலும், தீவிரத்திலும், வெற்றியிலுமே அரசியல் செல்வாக்கு தீர்மானிக்கப்பட்டது. ஆட்சிப் பீடமும் தீர்மானிக்கப்பட்டது. இதுவே தமிழர் ஈவிரக்கமற்று மேலும் மேலும் நசுக்கப்பட்டதற்கும், பௌத்த சிங்கள ஏதேச்சதிகாரம் நிறுவப்பட்டதற்குமான புறநிலையாகும். இலங்கையின் இந்த அரசியல் போக்கில் தமிழர் தமது உரிமையை அரசியல் நீரோட்டத்தில் வென்றெடுப்பதற்கான சாத்தியம் அற்றுப்போனது. இந்நிலையே தமிழர்களிடமிருந்து தனிநாட்டுக் கோரிக்கையும். வன்முறைப் போராட்டமும் முகிழ்ப்பதற்கான வரலாற்று நிர்ப்பந்தத்தைக் கொடுத்தது.



www.eelamview.com

### வரலாறு பெற்றெடுத்த பிரபாகரனும் பிரபாகரன் பெற்றெடுத்த விடுதலைப் புலிகளும்

வரலாற்றின் வளர்ச்சியாக, எழுபதின் ஆரம்பத்தில் வெடித்த வன்முறை எதிர்ப்பியக்கம் தமிழரின் மனக்கொந்தளிப்பையும், எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. அது ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வாறு, அமைப்பு வடிவத்தையோ, செயற்திட்டத்தையோ கொண்டிருக்கவில்லை. ஆயினும் வன்முறையின்றி வேறெந்த மார்க்கமும் விடுதலையை வென்றெடுக்க சாத்தியமற்றதாகவும், பொருத்தமற்றதுமாகவே தமிழ் மக்களால் உணரப்பட்டது.

ஆங்காங்கே பலகுழுக்களாகவும், தனிப்பட்டும் தொடர்புகளுடனும், தொடர்புகளற்றும் செயற்பட்டு வந்தவர்களுள் ஒருவராக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், ஆயுதப்போராட்டத்திற்கான ஒரு அமைப்பை கட்டியெழுப்பவேண்டுமென மிகச்சிலரைகொண்டு 'புதியதமிழப்புலிகள்' என்ற அமைப்பை ஆரம்பித்தார். 1976ல் வெடிமருந்து யுகத்தில் தமிழர் மீண்டும் எழுச்சியுற்று தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட புறப்பட்டுவிட்டதை அர்த்தப்படுத்துவதாக துப்பாக்கி, ரவை கொண்ட வளையத்தினூடு பாயும் புலி முகத்தை சின்னமாககொண்டு, "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற கோசத்துடன் கெரில்லாப் போர்முறையை ஆயுதப் போராட்ட வழிமுறையாக முன்வைத்து, கொள்கைத் திட்டத்தையும், போர்முறைத் திட்டத்தையும் கொண்ட ஒழுக்க கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன்கூடிய, ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பாக "தமிழீழ விடுதலைப் புலிகள்" அமைப்பை அவர் ஸ்தாபித்தார். பின்னாளில் தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதான இந்த அமைப்பின் அடிக்கல் 1976. 05. 05 அன்று நாட்டப்பட்டது.

டணியின் பிரச்சாரமே மக்கள் மத்தியில் சென்றடையக்கூடிய கருத்தாகவும் இருந்தது. மக்கள் விரிக்கப்பட்ட மாயையில் சிக்குண்டு நயவஞ்சகத்தின் பின்னால் விடுதலைதேடிப் போய்க்கொண்டிருந்தனர். விடுதலைப் போரோ துரோகத்தனத்தால் துடித்துக்கொண்டிருந்தது.

தமிழீழத்திற்கு ஆணை கேட்ட வ. கூ. 1981 இல் சிங்களக்குள்ளநரி என்று சொல்லப்படும் ஜெயவர்த்தனாவிடம் மாவட்ட அபிவிருத்தி சபையைப் பெற்றுவந்து, இதுவே தமிழீழத்தின் அடிக்கல் என்று தமது துரோகத்தனத்திற்கு கொள்கை விளக்கமளித்தனர். இதுவே தமிழ் மக்களிடம் தமது தலைமைத்துவத்தை ஏற்று நின்றவர்கள் யார் என்றவிழிப்பை ஏற்பட வைத்தது.


தமிழீழத் தேசியத்தலைவருடன் லெப். கேணல் ராதா

இதையடுத்து உள்ளுராட்சித் தேர்தலில் தமிழீழத்திற்கு ஆணைகேட்ட கூட்டணியினர் குதித்த போது, தலைமறைவுவாழ்வில் அதுவரை உறுதியுடன் ஆயுதப் போராட்டத்தைக் கட்டிக்காத்த தலைவர் பிரபாகரன், தேர்தலை பகிஸ்கரிக்குமாறு விடுத்த வேண்டுகோளையேற்ற மக்கள் தேர்தலை முற்றுமுழுதாக பகிஸ்கரித்தனர் இந்நிகழ்வு உதய சூரியன் அஸ்தமனத்தைநோக்கி அழைத்துச் சென்றதை தமிழ் மக்கள் உணர்ந்து விழிப்புற்றதை வெளிக்காட்டியது.

கள் போர்முறைத் திட்டமோ, சீரான செயற்றிட்டமோ இன்றி புத்துயிர் பெறவும் புதிதாய்த் தோன்றவும் செய்தன. சமூகவிரோதக் குழுக்கள் இந்தப் போராட்ட அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டன. முன்னேறவேண்டிய போராட்டம் முக்குளித்தது. ஒரு தலைமைத்துவமும், ஒருமுகப்பட்ட அணித்திரள்வும் உடைக்கப்பட்டது. இந்திய இராஜதந்திரத்தில் போராட்டம் பலியாகிக்கொண்டிருந்தது. ஆயினும் இந்தியாவின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு, கிடைத்த உதவியைப் பெற்றுக் கொண்டும் அதேநேரம், பணிந்துகொடாமலும் கட்டுக்கோப்பான இயக்கமாக விடுதலைப் புலிகளை களத்தில் செயற்படவைத்தார் பிரபாகரன்.

# மறுபாய்ச்சலின் முன் ஒரு மீள்பார்வை

### ஆயுதப் போராட்டத்திற்கு எழுந்த முதல் நெருக்கடி.

ஆயுதப்போராட்டம் தவிர்ந்த எந்தப் பாதையும், தமிழீழம் தவிர்ந்த எந்தக் கோரிக்கையும் தமிழ்மக்களின் வாழ்வுரிமையைப் பெற்றுத்தந்து விடாது இதை தமிழ் மக்கள் பட்டுணர்ந்து அதற்குத் தம்மை ஆயத்தமாக்கிவிட்டபோது, இதனை உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 'உதய சூரியன்' சின்னத்தில் "தமிழீழமே எங்கள் தீர்வு. இரத்தம் சிந்தியும் போராடுவோம, தமிழீழம் அமைப்போம் ஆணைதாருங்கள்' என்ற கோசத்தோடு தேர்தலில் குதித்தது.

அதுவரையிருந்த தமிழ்த்தலைமைகளின் ஒன்றிணைவும், அவர்களது இந்தக் கோசமும் முழு மக்களையும் அவர்களின் தலைமையின்பால் ஈர்த்தது. 1977 தேர்தலில் கூட்டணி அமோக வெற்றியுடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியுமானது. ஆனால் சிங்களத தலைமைத்துவத்திடம் இவர்கள் மலிவாக விலைபோனதுதான் தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத துயரம். த. வி. பு அமைப்பின் கீழ் ஆயுதப் போராட்டதத்திற்காக அணிதிரள வேண்டிய மக்களை, உத்வேகத்தோடு ஆயுதப் போராட்டம் முனைப்புடன் முன்னேற வேண்டிய நேரத்தில் விடுதலைக் கூட்டணி தனது வெற்றுக் கோசத்தினால், நயவஞ்சகத்தினால் மக்களின் விடுதலை உணர்வைப் பயன்படுத்தி தமது தலைமைத்துவத்தின் கீழ் ஈர்த்துக்கொண்டது. விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவுக்கான முட்டுக்கட்டையாக விடுதலைக் கூட்டணி எழுந்து நின்றது.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்கொண்ட தலைவர் பிரபாகரனின் உறுதி தளராத செயற்பாட்டினால் அச்சமுற்ற சிங்கள அரசு, புலிகள் தடைச்சட்டத்தையும, பயங்கரவாத தடைச்சட்டத்தையும் பிறப்பித்து போராட்டத்தை ஒழிக்க இராணுவத்தை அனுப்பி வைத்தது. புலிகள் முற்று முழுதான தலைமறைவு வாழ்க்கைக்கு போக வேண்டியதாயிற்று. இக்காலத்தில் வி. கூட

1983 திருநெல்வேலித் தாக்குதல் ஆயுதப் போராட்டத்தின்பாலும், விடுதலைப் புலிகளின் பாலும் மக்களிடம் அசாத்திய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதேவேளை, வரலாறு காணாத 1983 யூலை படுகொலை உலகை ஒருகணம் இத்தீவை நோக்கி திருப்பியபோது, பிரதான எதிர்க்கட்சியான விடுதலைக் கூட்டணி கையாலாகத்தனத்துடன் வாலைச்சுருட்டி நின்றமை தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் பற்றிய முழுவிளக்கத்தை அடையவைத்தது. அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தலைமைதுவத்திலிருந்து அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். விடுதலைப் போராட்டம் ஒரு தலைமைதுவத்தின் கீழ் முனைப்புறுவதற்கான புறச்சூழல விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பத்தொருவருடம் கட்டிக்காத்த ஆயுதப்போராட்டத்தின் பயனாய் முழுமையாய் கருக்கட்டியது.

### இந்தியாவின் பூகோள ஆதிக்க நலனுக்குள் போராட்டம் புதையும் அபாயம்.

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்மக்களின் அரசியல் போராட்டம் ஆயுதப் போராட்டமாக ஒரு நேரிய, சீரான தடங்களைப் பதித்து முன்னேறும் புறநிலை தோன்றியது. இந்நிலையில் இதை அவதானித்த இந்திய அரசு, தனது பிராந்திய பூகோள அரசியல் நலனுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமெரிக்கா பக்கம் சார்ந்த இலங்கையை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்காக, ஈழப்போராளிக் குழுக்கள் மூலம் தாக்குதல் நடத்தி அரசை நிலைகுலைய வைக்க உதவிசெய்து ஆதரவளித்தது. அதேநேரம் விடுதலைப் புலிகளின் ஈழப்போராட்டம் தனது பிரதேச ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தெனக் கருதிய இந்தியா, தமிழ்மக்களின் ஒருதலைமைத்துவத்திற்குப் பதிலாக பல தலைமைத்துவங்களை உருவாக்கி, பல கொள்கையுடைய குழுக்களை உருவாக்கி தன் கட்டுப்பாட்டின்கீழ் அவற்றை வைத்திருப்பதன் மூலம் போராட்டம் முன்னேறாதவாறு குழப்பமடைய வைப்பதில் அக்கறையுடனிருந்தது.

இந்திய புலனாய்வு அமைப்பின் சதிவலையினால் ஈழத்தில் பல கொள்கையுடைய பல குழுக்

புலிகள் முன்னெடுத்த போர் நடவடிக்கைகள் இலங்கை இராணுவத்தின் நகர்திறனைக் கட்டுப்படுத்தியது. இராணுவம் பெரிதும் முகாங்களைவிட்டு வெளியேற முடியாத நிலையைப் புலிகள் தோற்றுவித்தனர். இது இராணுவத்தினால் எழுந்த அச்சுறுத்தலில் இருந்து மக்களை பெரிதும் விடுவித்தது. மக்கள் விடுதலைப் புலிகள் மீது பெரிதும் நம்பிக்கைவைக்கத் தொடங்கினர். இதற்குமேல் பொறுத்திராத இந்தியா, விதைத்ததற்கான அறுவடையைப் பெற செயலில் இறங்கியது. திம்புப் பேச்சுவார்த்தைக்காக, இந்தியா போராட்ட குழுக்களை அழைத்தது. பொறியாக விரிக்கப்பட்ட அந்தப் பேச்சில் தமது நியாயத்தை முன்வைத்த புலிகளின் நிலைப்பாட்டையே பேச்சில் பங்குபற்றிய ஏனைய குழுக்களும் ஒப்புக்கொள்ளவேண்டி பேச்சிலிருந்து வெளிநடப்புச் செய்தபோது, விடுதலைப் புலிகளால் தமது நலன்கள் பாதிக்கப்பட்டதாக இந்தியா விசனமுற்றது.

விடுதலைப் புலிகள் முனைப்புடன் எடுத்த போர் நடவடிக்கைகளின் பயனாகவும், அரசியல் செயற்றிட்டத்தின் பயனாகவும் ஈழத்தில் காத்திரமான அரசியல்செல்வாக்கை புலிகள் பெறத்தொடங்கினர். இதையுணர்ந்த இந்திய அரசு, தனது கூலிகளாகவே செயற்பட்ட போராட்டகுழுக்களை விடுதலைப்புலிகளை அழிக்குமாறு ஏவியது. அவை அதைச் செய்யத்துணிந்தன போராட்டம் என்றுமில்லாத நெருக்கடியைச் சந்தித்தது. அக்குழுக்களின் செயற்பாட்டை அங்கீகரிக்கமுடியாதவாறும், மோதல் உருவாகாதவாறும் விடுதலைப் போராட்டத்தை நகர்த்த புலிகள் பகீரதப்பிரயத்தனம் எடுத்தனர். ஈற்றில் அவை புலிகள் மீது மோதலைத் தொடக்கியபோது அவற்றின் ஆயுதங்களைக் களைந்து தடைசெய்தனர் புலிகள். அவற்றின் நெறிமுறையற்ற செயற்பாட்டினால் மக்கள்மீது திணிக்கப்பட்ட தனிப்பட்ட அராஜகம் நீங்கியதாக மக்கள் உணர்ந்தமை போராட்டம் தொய்வுறாது புதியவீச்சுடன் முன்னேறுவதற்கான சூழலைத் தோற்றுவித்தது

வடக்கில் இராணுவ முகாம்களை முற்றுகையிட்ட புலிகள், போராட்டத்திற்கான தளப்பிர

→



www.eelamview.com

தேசத்தை பேணத்தொடங்கினர். இது அரசியல் ரீதியான செயற்பாட்டிற்கும், படைத்துறை வளர்ச்சிக்கும், படைப்பெருக்கத்திற்கும் ஏற்ற வாய்ப்பை அளித்து போராட்டம் முனைப்புற்று முன்னேறுவதற்கான புதிய சூழல் பரிணமித்தது.

## இருளை நோக்கி இழுக்கப்பட்ட விடுதலைப் போராட்டம்

இலட்சியத்தில் விட்டுக்கொடுப்பற்ற விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் காத்திரமான வளர்ச்சியை எட்டியிருப்பதும், மேலும் அது முன்னேறுவதற்கான அகபுறச்சூழ்நிலைகளைக் கொண்டிருப்பதும், இந்தியாவை அதன் நலனுக்கான ஏனைய இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில் ஒரு நேரடி இராணுவ தலையீட்டு நிலைப்பாட்டை எடுக்கவைத்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் இருநாட்டினதும் பரஸ்பர நலன் பேணல் கைச்சாத்தானது. அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் வருவிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டத்தை மூழ்கடித்துவிட இந்தியா முடிவுகட்டியது.

இந்தியாவின் கூலிகளாகவும், இந்தியாவின் அடிவருடிகளாகவும், இந்தியா சார்ந்தும், அரசியல் ஞானசூனியங்களாகவுமிருந்து செயற்பட்ட மாற்று ஆயுதக்குழுக்கள் தமிழீழத்தில் செய்திருந்த தீவிரப் பிரச்சாரத்தின் விளைவாய், தமிழ்மக்கள் இந்திய இராணுவத்தை மீட்பாளர்களின் வருகையாகவே கருதினர். இந்த ஆயுதக்குழுக்களின் செயற்பாட்டால போராட்டத்தை ஒடுக்கவந்தவர்களை விடுதலையை வென்றுதர வந்தவர்களாக கருதிய மக்களுக்குள் நின்று, ஒரு வல்லரசின் ஒடுக்குதலுக்கு எதிராக, அம்மக்களை கிளர்ந்தெழ வைப்பது என்ற அசாத்திய நெருக்கடிக்குள் போராட்டம் அகப்பட்டுக்கொண்டது.

இந்திய அரசு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தலைவர் பிரபாகரனை வற்புறுத்தியது மக்கள் ஒப்பந்தம் தமது நலனுக்கானது என்று நம்பத் தலைப்பட்டனர். இறுதியில விடுதலைப் போராட்டத்தை மீட்டெடுப்பதற்காக ஒப்பந்தத்தில கைச்சாத்திட மறுத்து, ஆயுதங்களைக் கையளித்து போராட்ட வடிவத்தை மாற்றி சாகும்வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில புலிகள் அமைப்பு இறங்கியது. இந்திய அரசு வாக்குறுதியளித்துப்பின் வாக்குமாறிக்கொண்ட விடயங்கள் தொடர்பான ஐந்து அம்சக் கோரிக்கையுடன் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தும், பசியில அவன் உயிர் உருகி வழிந்தும், பாரதம் பாராமுகத்துடன் நடந்தும இறுதியில திலீபன் அந்த மக்களின்முன் இறந்ததும், எமமக்களுக்கு; இந்தியா யார்? ஏன்? எதற்காக? எப்படி? என்ற மர்மச சூத்திரத்தின் முடிச்சை அவிழ்த்தது. மேலும் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளை இந்தியா இலங்கையுடனான கூட்டுசதியில் கொன்றமை எம் தேசத்தில் ஒரு பேரலைகளையே மூட்டியது. மக்கள் புலிகளின் தலைமைத்துவ நிலைப்பாட்டை ஏகோபித்து ஆதரித்து நின்றனர் இந்திய இராணுவம ஆயுதக்களைவு என்று புலிகள் மீது பெரும யுத்தத்தைக் கட்டவிழ்த்தது. மக்கள் கவசமாக இருக்க, இந்த சவாலைச் சந்தித்து அரசியல், இராணுவ வியூகமிட்டு, விடுதலைக்காக நெருப்பாற்றில் குளித்து ஈற்றில் இந்தச் சவாலில் வெற்றியீட்டி போராட்டத்தை பெரும மூழ்கடிப்பிலிருந்து மீட்டெடுத்தார் தலைவர் பிரபாகரன். இது உலகின் கவனத்தை ஈர்த்து, முக்கியத்துவம் மிக்கதாக எமது போராட்டத்திற்கான கவனத்தைப் பெற்றுத்தந்தது.

## பொருளாதார முற்றுகை, இராணுவ முற்றுகை வெல்லும மமதையில் அரசு

இரண்டாம் கட்ட ஈழப்போரின் தொடக்கத்தில், கெரில்லாப் போர்முறையிலிருந்து பெற்ற அனுபவத்தைக்கொண்டு பல பிராந்தியப் படையணிகளை தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து தாக்குதல் நடத்தக்கூடியவாறு நகர்வுப் போர்முறைக்கு அபிவிருத்தி அடைந்திருந்த விடுதலைப்புலிகள், பல இராணுவ முகாமகளை அடுத்தடுத்து வீழ்த்தி வெற்றிகொண்டிருந்தனர். யுத்தத்தின் அடுத்தகட்ட அபிவிருத்திக்கான தேவைகருதி மரபுப்போருக்கான மரபுப்படையணிகளை உருவாக்கும் பொருட்டு, 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி' என்ற முதல் மரபுப்படையணியையும தொடக்கினர்.

1991 இல் ஆனையிறவு மீதான புலிகளின் ஆ.க.வெ தாக்குதல் மரபுப் போரணியாக புலிகள் பரிணமிப்பதை வெளிக்காட்டியது. 'இலங்கைத்தீவில் இரு இராணுவம்' என்று ஊடகங்கள் விழிக்கும் அளவிற்கு அதன் முக்கியத்துவம் இருந்தது. ஆயினும், இலக்கில் வெற்றியடையாத நடவடிக்கையாக அது அமைந்ததும், 604 போராளிகளை இழக்க நேர்ந்ததும், 2000ம் வரையான போராளிகள் காயமுற்றதும், ஒரு பின்னடைவை ஏற்படுத்தியதாகவே அமைந்தது இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி இராணுவம் தமிழீழத்தின் இதயபூமியான மணலாற்றை நோக்கி 'மின்னல்' நடவடிக்கையைத் தொடங்கியது. இதை எதிர்கொண்டு புலிகள் வெற்றிகொண்டனர் இதில் 233 வரையான போராளிகளை இழக்க நேர்ந்ததோடு, 1000ம வரையான போராளிகள காயமுற்றனர்.

அடுத்தடுத்து இருபெரும் சமர்களுக்கு முகம் கொடுத்ததன் விளைவாக. புலிகள் ஆளணி இழப்பீடு அதிகரித்ததன் பிரச்சனையை சந்திக்க நேர்ந்தது. அதேவேளை வெடிபொருட்களஞ்சியம் ஏறத்தாழ தீர்ந்துபோன நிலையிலிருந்தது. இத்தகைய சூழலில்தான், ராஜீவ்காந்தியின கொலையுடன் புலிகளைச் சமபந்தப்படுத்தி இந்தியரசு புலிகளைத் தடைசெய்திருந்தது இதனால் தமிழ்நாட்டு மக்களிடமிருந்து பெறுக்கொள்ளக்கூடிய பல்வேறு வகையான உதவிகளும நின்றுபோயின. இத்தகைய சூழலைக கருத்திற்கொண்ட சிங்கள அரசு, கெரில்லா எதிர்ப்புப் போர்முறையின் முக்கியமான தந்திரோபாயமான உணவு, மருத்துவ, போக்குவரத்து ஊடகத்தடைகளை விதிப்பது என்பதை ஈவிரக்கமற்றவாறு வடக்கில் இறுக்கமாக நடைமுறைப்படுத்தியது. வடக்கின் வாழ்நிலை நெருக்கடிக்குள்ளானது. இதேவேளை இராணுவம வலம்புரி நடவடிக்கை மூலம குடாநாட்டிற்கிருந்த பாதையான கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை கைப்பற்றியதன் மூலம், குடாநாட்டு முற்றுகையை இறுக்கியது. பின் ஊரியான் நீரேரியூடாக வன்னியிலிருந்து குடாநாட்டுக்கான நெல்வரவும, போக்குவரத்தும சிறிதளவேனும இடம்பெற்று வந்ததை 1992 பலவேகய 02 நடவடிக்கை மூலம இராணுவம் மூடிக்கொண்டது. போராட்டத்தின் மையத்தளமாக இயங்கிய யாழ்குடாநாடு இராணுவத்தின் முழுமையான முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டது,

— கு. கவியழகன் —

படைத்துறையில புலிகளுக்கேற்பட்ட ஆளணி இழப்பீடும். தீர்ந்துபோன வெடிபொருள் ஆயுதக் களஞ்சியமும, உணவுப்பொருள் தடையால் அதை எதிர்நோக்கும எட்டலட்சம் மக்களும், மருத்துவத் தடையால் மக்களுக்கும், போராளிகளுக்கும எழுந்த சிக்கலும் எரிபொருள், உற்பத்தி சக்திகளின் தடையும், போக்குவரத்து ஊடகங்களுக்கு ஏற்பட்ட தடையும், தமிழ் நாட்டிலிருந்து பெறக்கூடிய உதவிகளுக்கெழுந்த தடையும, விநியோகமார்க்கமற்ற இராணுவ முற்றுகையும என எல்லாமாக இணைந்து போராட்டத்தை என்றுமில்லாத நெருக்கடிகளுள் அமிழ்த்தியது.

இக்காலத்தில் தோன்றிய புதிய உலக ஒழுங்கு மாற்றத்தால் உலகில் அநேகமான தேசிய விடுதலைப்போராட்டங்கள் முடிவிற்கு வந்தன. அநேகம்முறியடிக்கப்பட்டோ, விலைபேசப்பட்டோ, கைவிடப்பட்டோ முடிவுற்றது. இதே பார்வையில் ஈழப்போராட்டமும் அதன் முடிவை எய்தும் நிலைக்கு வந்து விட்டதாக உலகின் அரசியல் இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டனர். ஜே.வி.பி. கிளர்ச்சியை முறியடித்த வீறாப்பிலிருந்த பிறேமதாசா அரசு. இத்தகைய சூழலில புலிகளையும வென்றுவிடப்போவதான மமதையில் இருந்தது யாழ்குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான ஒரு நடவடிக்கை லெப். ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில உருவானது.

ஈழப்போராட்டம் அமைதியான கடலில் ஓட்டி வரப்பட்ட படகல்ல. அது பல புயல்களையும், சூறாவளிகளையும், கொந்தளிப்புக்களையும் கடந்து, பிரபாகரனால் ஓட்டிவரப்பட்ட படகு. இப்போதெழுந்த பெரும் சவால்களைச் சந்திக்க குனியாத குணம்கொண்ட தலைவர் பிரபாகரன் வியூகங்களை வகுத்தார்.

கிளாலி நீரேரிப்பாதையைத் திறந்து, யாழ்ப்பாணம் - வன்னிக்கான போக்குவரத்துப் பாதை ஏற்படுத்தப்பட்டது. அரசபடை. நாகதேவன் துறையில் கடற்படைத் தளமமைத்து அதைத்தடுத்தது எதிர்காலத்தைக்கணிப்பிடும் பார்வையுடன், 1991 இன் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட கடற்புலிகளை களத்திலிறக்கி கடற்படையை எதிர்கொள்ள வைத்தார் தலைவர் பிரபாகரன். கிளாலி நீரேரி கடற்புலிகளால் காவலிடப்பட்டது. யாழ்ப்பாண முற்றுகை தகர்ந்து பொடிப்பொடியானது: புதிய பயிற்சி, புதிய போர்த்தந்திரோபாயத்தைப் புகட்டி. பல அணிகளாக களத்தில் இறக்கி துல்லியமான வேவின் மூலம் நேர்த்தியான பயிற்சி மூலம், வேகத்தாக்குதல் மூலம். சிறு இலக்கைத் தெரிந்து பேரடியைக் கொடுத்து வெற்றிகொள்வது என்ற 'மின்னல் வேகத்தாக்குதல்' முறையை தலைவர் களத்தில் செயற்படுத்தினார் இப்போர்முறை பெற வேண்டிய அறுவடை, மிகச் சொற்பமான இழப்போடு குறைந்த வெடிபொருள் பயன்பாட்டோடு தேர்ந்தெடுத்த இலக்கின் முழு இராணுவத்தைக்கொல்வதும், ஆயுத வெடிபொருட்களைக்கைப்பற்றுவதும், இத்தகைய பல தாக்குதல்களின் திரட்சி மூலம பேரிழப்பை இராணுவத்திற்கு ஏற்படுத்திவிடுவதுமாகும்.

இத்தகைய வெற்றிகரப் போர்த்திட்டத்தின் தாக்குதல் ஒன்றில், யாழ்குடாநாட்டு நடவடிக்கையை திட்டமிட்ட லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட்ட ஒன்பது மேலதிகாரிகள் ஒரே தாக்குதலில் கொல்லப்பட்டனர். மேலும் இப்போர் நடவடிக்கையால் 1992 இல் 1400 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 1500 இராணுவத்தினர் ஏறத்தாழ ஊனமுற்றனர். பெருந்தொகையானோர் படையைவிட்டுத் தப்பியோடினர். அத்துடன் இராணுவத்தினரை பீதிக்குள் வைத்திருக்கவும் முடிந்தது. விடுதலைப்புலிகளின் வெடிபொருள் ஆயுதக்களஞ்சியங்கள் நிரப்பப்பட்டன உறுதி தளராத மக்களின் மனோதிடம பேணப்பட்டது. மக்கள் புதிய உற்பத்தி சக்திகளைத் தேடிப்பெற்றுவித்தனர். இத்தகைய உடைப்பினதும, வளர்ச்சியினதும் முடிவாக 1993 இல் 'தவளை' நடவடிக்கை மூலம 2000ம் வரையான இராணுவத்தினரைக் கொண்ட பூநகரித் தளத்தை புலிகள வெற்றிகொண்டனர் இவை எல்லாமாக இணைந்து, நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்த போராட்டம் புதிய உத்வேகத்தோடு, புதிய பரிமாணத்தில் பாய்ச்சலாக முன்னேறியது. தவறான அரசியல், இராணுவ கணிப்புகள தவிடுபொடியாகின. மக்கள 'தவளை' நடவடிக்கைக்காக தலைவர் பிரபாகரனுக்கு வெற்றிக்கடயங்கள் அனுப்பி வைத்தனர்.

## அரசின் மூலோபாய மாற்றமும், யாழில் இருந்து புலிகளின் பின்வாங்கலும்

1994இல் பதவிக்குவந்த பொ.ஐ.மு. முன்னணி அரசிற்கு, தான் கைப்பற்றிய ஆட்சிப் பீடத்தை தக்கவைப்பதற்காக முப்படைகளிலும், ஏனைய நிர்வாகத்துறைகளிலும 17 வருடமாக ஊறிப்போன ஐ.தே.க. விசுவாசிகளை மாற்றியமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டது. இதற்கு ஒரு யுத்தநிறுத்தத்திற்கான தேவை அவசியப்பட்டது. இதற்காக பேச்சுமுயற்சியை பயன்படுத்தியதோடு, போரில வெற்றியீட்டிக்காட்டுவதற்கான போர்முனைப்புக்கு ஆயத்தப்படுத்தும அவகாசத்தையும பெற்றுக்கொண்டது. இத்தகைய அரசின உள்நோக்கத்தால் சமாதான முயற்சி தொடர்ந்து முன்னேற முடியாமல போயிற்று.

மூன்றாம்கட்ட ஈழப்போரின் தொடக்கத்தில் திருமலைத் துறைமுகத்துள பாய்ந்த கடற்புலிகள் இரு பீரங்கிக் கப்பல்களை மூழ்கடித்தனர். அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்தினர். குறைந்த இழப்போடு மண்டைதீவு இராணுவ முகாமை வெற்றிகொண்டனர். இந்தப்பேரா விளைபெரும சிங்கள தேசத்தை வெருட்டியது. சந்திரிகா பிடித்த ஆட்சித் தளமபும நிலைகுள்ளானது. அதை நிலைப்படுத்த சந்திரிகாவிற்கு ஒரு இராணுவ வெற்றி இன்றியமையாததாயிற்று.

யாழ். நகரைக் கைப்பற்ற ''லீப்போவேட்'' (முன்னேறிப்பாய்தல்) நடவடிக்கையை அது மேற்கொண்டது. புலிகளின 'புலிப்பாய்ச்சல் எதிர் நடவடிக்கையால படுதோல்வி அடைந்ததுடன், காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதுடன் புக்காரா தாக்குதல் விமானம சுட்டுவீழ்த்தப்பட்டது. இது தென்னிலங்கை அரசியலில சந்திரிகாவிற்கு மோசமான சூழலைத் தோற்றுவித்தது. நிச்சயப்படுத்தப்பட்ட இராணுவ வெற்றியே சந்திரிகாவின் ஆட்சியை தக்கவைக்கும் எனும நிலை எழுந்தது. இதனால், கிழக்கில் புலிகளை முறியடித்து அதை பல்லினவாழ் பிரதேசமாக்குவதன் மூலம கெரில்லாப் போரியலுக்கான சாதகங்களை சிதைத்து பின் வடக்கை நோக்கி பிரதான நகர்வைச் செய்வதனும ஐ.தே.க வின் மூலோபாயத்திற்கு மாறாக முதலில் யாழ் குடாநாட்டைக்கைப்பற்றுவது எனும நிலைப்பாட்டை சந்திரிகா அரசு எடுக்கவேண்டியதாயிற்று.

→



www.eelamview.com

கிழக்கிலிருந்து இராணுவம் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டது. மோட்டார், பீரங்கிச்சூட்டு வலுவை உயர்நிலையில் பிரயோகிப்பதற்கான ஆயுதக்கொள்வனவு நடந்தது. வெளிநாட்டு இராணுவ உதவிகளுடனும், ஆலோசனைகளுடனும் பெரும் ஆளணி, ஆயுத சக்திகளுடனும் "ரிவிரச" தொடங்கப்பட்டது. புலிகள் யாழ்குடாநாட்டை விட்டு வன்னிநோக்கி ஒரு தந்திரோபாயப்பின் வாங்கலைச் செய்யவேண்டியதாயிற்று. 03 இலட்சம் மக்கள் வன்னிக்குத் தப்பிவர, 05 இலட்சம் மக்கள் இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி சிங்கள தேசத்தை பெரும் மகிழ்ச்சிவெள்ளத்தில் ஆழ்த்தியது. தன்னை நிலைப்படுத்திக்கொண்ட சந்திரிகா அரசு, புலிகளின் இத்தற்காலிகப் பின்னடைவை போராட்டத்தின் வீழ்ச்சியாகவும், புலிகள் மீதான தோற்கடிப்பாகவும் தீவிரமாகப் பிரச்சாரப்படுத்தியது. இதன் மூலம் தனது கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிட தீவிரமாக முனைந்தது. வெளியுலகமும் இதனை நம்பத்தலைப்பட்டது. இதனால் புலிகளிற்கு அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியான பெரும் நெருக்கடிகள் எழுந்தன.

தலைவர் பிரபாகரன் தனது நேரடி நெறிப்படுத்தலில் 'ஓயாத அலைகள் - 01' ஐ நிகழ்த்தி அரசின் திட்டத்தையும், எழுந்த நெருக்கடியையும் தவிடுபொடியாக்கினார். பெருங்கடலோடு அமைந்த முல்லைத்தீவுத் தளத்தை வெற்றிகொண்டு, 1200 இராணுவத்தைக் கொன்று, ஆட்லறிகள் உட்பட ஆயுதங்களைக் கைப்பற்றிய புலிகள் தமது குன்றாத போர்ப்பரிமாணத்தை வெளிக்காட்டினர். தமிழீழத்தின் ஒரு நகரம் விடுவிக்கப்பட்டது. எல்லையற்ற ஒரு கடற்பரப்பைத் திறந்து புலிகள் தமவசப்படுத்தினர். இது புலிகள் பற்றிய புதிய மதிப்பீட்டைத்தந்ததுடன், சந்திரிகாவின் யாழ்ப்பாண வெற்றியை கேள்விக்குட்படுத்தியது. நம்பிக்கையுடனான புதிய வேகம் தளத்திலும், புலத்திலும் பிறந்தது.

### வன்னி மீதான இறுதிவெற்றிக்கு இராணுவ, பொருளாதார, அரசியல் வியூகம்

'ஓயாத அலைகள் -01' இன் பின் யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதையை திறப்பது, அரசிற்கு யாழ்ப்பாணம் மீதான வெற்றியை தக்கவைப்பதற்கான நிர்ப்பந்தமாகியது. இதனால் சத்ஜெய நடவடிக்கையும், பின் 'ஜயசிக்குறு'வும் சிங்களப் படைகளால் தொடக்கப்பட்டன. வன்னியின் மார்பைப்பிளந்து முன்னேறுவதால் விடுதலைப்புலிகளின் தளப்பிரதேசத்தைக் கூறுபோடவும், அதை மேலும் பல கூறுகளாக்கவும் இராணுவம் திட்டமிட்டது. இதன் மூலம் புலிகளின் இராணுவ பலத்தை நம்பகரமாகச் சிதைக்க முடியுமென அது எண்ணியது.


புலிகள் வன்னியின் அடர்ந்த காட்டினுள் எதிரியின் உண்மை வலுவை வரவழைத்து தமது பிரதேசத்தில் போரை மையங்கொள்ள வைத்து, எதிரியின போர்வலுமீது தீர்மானகரமான சிதைவை ஏற்படுத்தத்தொடங்கினர். வெற்றிக்கான முடிவுத்திகதி அறிவித்து தொடங்கப்பட்ட இந்த 'ஜயசிக்குறு' (வெற்றி உறுதி), பின் வாங்கமுடியாத அரசியல் சிக்கலை அரசிற்கு உருவாக்கியது. இலங்கையின் போர்வலு புலிகளின் காலடியில் பரப்பப்பட்டது. தலைவர் பிரபாகரன் வகுத்த போர்வியூகத்தால் ஒரு வருடத்திற்கு மேலாய் அது தன் படைகளை இழந்து, இறுதியில் 'ஓயாத அலைகள் - 02' என்ற கிளிநொச்சிநகர் விடுவிப்புச் சமர் மூலம் அர்த்தமற்ற படையெடுப்பாக ஆகிப்போனது. ஜயசிக்குறு கைவிடப்பட்டது.

ஜீரணிக்கமுடியாத இத்தோல்வியின் பின், இராணுவ வல்லுனர்களின் ஆலோசனையுடன் புதிய மூலோபாயத்தை வகுத்தது சிங்களப் படைத்தலைமை. இதன்படி, எழுபத்தைந்து வீதம் இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்களைக்கொண்ட வன்னியில், நிவாரணவெட்டை அரசு அமுல்படுத்தியது. பொருளாதார, மருத்துவ தடைகளை அது மேலும் இறுக்கியது. வான், எறிகணைத் தாக்குதலை பரவலாக மக்கள்மீது நடத்தியது. மக்களை வாழ்வியல் நெருக்கடிக்குள் தள்ளியது. அதேநேரம், தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்வரும் மக்களுக்கு அது நன்கொடைத் தொகைகளை வழங்கியது. நிவாரணத்தை வழங்கியது. இழப்பீட்டுத் தொகைகளை அள்ளி வீசுகிறது. மக்களை வன்னியிலிருந்து வெளியேற்றி தனது கட்டுப்பாட்டிற்குள் இழுப்பது என்ற தந்திரோபாயத்தை மக்கள் மீது சுமத்திய அவலத்தால் வெற்றிகொள்ளத்தொடங்கியது. போருக்கான, புலிகளின் ஆளணி நிரப்பீட்டை உடைப்பதே முக்கிய குறிக்கோளாகவிருந்த இந்தச் சதியிலிருந்து மக்களால் தப்பிக்க முடியவில்லை. சுமத்தப்பட்ட அவலம் அவர்களை நிர்ப்பந்தித்தது.

அதேநேரம், வன்னியைப் பிளந்து முன்னேறுவதற்குப் பதிலாக வன்னியின் நாலாபுறமும் படை நடவடிக்கையில் இராணுவம் குதித்தது. இதனால வன்னியைச் சுற்றி காவலரண் அமைத்து தற்காப்புச் சமரில் ஈடுபடுவதற்கான ஆளணியைப் புலிகளால் பெற்றுக்கொள்ளமுடியாது என்ற அதன் கணிப்பு பல பிரதேசங்களை அதன் கைகளில் வீழ்த்தியுமிருந்தது. இந்தப் புதிய சிக்கல் புலிகளை தற்காப்புச் சமரில் சிக்கவைப்பதுடன், வலிந்த தாக்குதலொன்றைச் செய்வதற்கான வாய்ப்பையும் அறவே ஒழித்தது. இறுதி வெற்றி பற்றி இராணுவம் நம்பிக்கைகொள்ளத் தொடங்கியது. இயற்கைக் குழப்பத்தினால் வன்னியின் நெல் உற்பத்தி இந்த ஆண்டு (1999) மோசமான பாதிப்பை உருவாக்கியது. மோசமான வாழ்வியல் நெருக்கடிக்குள் மக்கள் தள்ளப்பட்டனர். புலிகளோ இராணுவ, அரசியல், பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடியைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

போராட்டம் சந்தித்த இந்தப் புதிய சவாலுக்கு, தனது தலைமைத்துவ வல்லமையின் மூலம் புதிய வியூகம் வகுத்தார் தலைவர் பிரபாகரன். மக்களுக்கு ஆயுதப்பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்க உத்தரவிட்டார். மக்கள்படை கட்டுமானங்களை புலிகள் உருவாக்கினர். எல்லைப்படை வீரர்கள் வன்னியைச் சுற்றி எல்லையிட்டு தற்காத்தனர். புலிகள்சேனை பிரபாகரனின் பெரும் சமருக்கான தாக்குதல் பயிற்சியை பெறத் தொடங்கியது. தாக்குதல் எல்லைப்படை உதவிப் படையாகப் பயிற்சி பெற்றது. வன்னியின்எதிர்பாராத எழுச்சி, ஆளணி நிரப்பீட்டை அதிகரித்தது. தலைவர் பிரபாகரன் 'ஓயாத அலைகள்- 03' என்ற பெரும் போர்வியூகத்திற்குள் எதிரிப்படைகளை அடக்கினார்.

பரந்த பிரதேசத்தில், பலமுனைகளால், பல அணிகளை நகர்த்தி ஒருங்கிணைந்த ஒரு தாக்குதல் செயற்திட்டத்தில் தீர்மானகரமான ஒரு சமரைத்தொடக்கி எதிரிப்படைகளை 'டிவிசன்'களாக தோற்கடித்தனர் புலிகள். எதிரியின் முன்னணிப் படை சிதைவுற்றது. உலகின் புருவங்களை உயர்த்திய பெரும் போர்நடவடிக்கையை பிரபாகரன் நேரடியாக நெறிப்படுத்தினார். வன்னியில் நிலைகொண்ட எதிரி தோற்கடிக்கப்பட்டதுடன் ஆனையிறவு என்ற பலப்பரீட்சையைத் தீர்மானிக்கும் தளத்தின் மீது போரைத்தொடக்கி வெற்றி கொண்டனர் புலிகள். யாழ்ப்பாணத்தின் நுழைவாயில்கள் புலிகளின் கைகளில் வீழ்ந்தன. இராணுவ சமநிலையை புலிகளுக்கு சாதகமாக திசைதிருப்பியது 'ஓயாத அலைகள் - 03' அது. புலிகளுக்கு நாணயகரமான அரசியல் பலத்தைக்கொடுத்தது. விடுதலைப் போராட்டத்தின் இந்தப் புதியபரிணாமம், ஆறுக் வெற்றிநோக்கிய புலிகளின் பயணத்தையும், அதற்கான புலிகளின் பலத்தையும் தாகமாகப் பறைசாற்றியது.



எதிர் வியூகம்: தடை தகர்க்கும் வழி சொல்லும் தலைவன்

விடுதலைப்புலிகள் அமைப்பு தொடங்கப்பட்டு தொடரப்பட்ட இந்தக் கால்நூற்றாண்டில் தமிழரின் விடுதலைக்கெதிராக எழுந்த அனைத்து பலங்களையும் அது வெற்றி கொண்டிருக்கிறது. அனைத்து மூலோபாயங்களையும் தோற்கடித்திருக்கிறது. அனைத்து சதிமுயற்சிகளையும் அது முறியடித்திருக்கிறது. அரசியல் இராஜதந்திர வியூகங்களை அது உடைத்தெறிந்திருக்கிறது. உள்ளூர் ஆயுதத் தயாரிப்புக்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப்போராட்டம் இன்று அடைந்துள்ள வளர்ச்சிவரை தோற்கடிக்கப்படவியலாத சக்தியாக தன்னை நிலைநாட்டியிருக்கிறது.

எமது சொந்தப் பலத்தின் மூலம் அடையப்பெற்ற இந்தப் போர்வலிமை சிங்கள அரசிற்கு தாங்கவியலாத அரசியல் பொருளாதார இராணுவ நெருக்கடியை இன்று ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப்போராட்டம் அலட்சியம் செய்யவியலாத அரசியற்பலத்தை சர்வதேச அரசியல் அரங்கில் பெற்றுக்கொண்டுள்ளது. தமிழருக்கிழைத்த மாபெரும் அநீதிக்கெதிராக எழுந்த இப்போராட்டம் மனித ஆற்றலாலும், மனித தியாகத்தாலும் வளர்த்தெடுக்கப்பட்டதுபோல் இறுதி வெற்றியையும் அவ்வாறே நிகழ்த்தியாகும்.



www.eelamview.com

# இதையும் பரணியாய்ப் பாடுங்களேன்

"ரெண்டு வித்துடலையும் என்னெண்டு ஒரே நேரத்தில வீட்டை கொண்டு போறது. அதுவும் எல்லைக்குப் போன பிள்ளையள் வரும் என்று காத்துக் கிடக்கும் ஏழைத் தாய்தந்தை முன்னுக்கு எப்படி இதைச் சொல்லுறது"

கண்ணனும் காளிதாசனும் மூடுப்பட்ட பதுங்குகுழியை கிளறுவதற்கு முதல் இந்தக் கேள்விதான் விடயமறிந்த ஒவ்வொரு நெஞ்சுகளிலும் சுமையாய் கனத்துக்கொண்டிருந்தது.

கண்ணன், காளிதாஸ் சகோதரர்களாகப் பிறந்து உயிர் நண்பர்களைப்போல் மிக அன்பாய் பழகுபவர்கள். இருவருக்குமிடையே எவ்வளவு நெருக்கமான உறவு! அண்ணா தம்பி ஒருகணம் கூட பிரிந்திருக்கமாட்டார்கள். அதுதானே இருவரும் ஒன்றாகவே களம்வரைக்கும் வந்துவிட்டார்கள். சாவிலும் அப்படிச் சேர்ந்தே இருக்கவேண்டுமா? அவர்களின் விருப்பத்திற்குச் சரி அவர்களையே நம்பியிருக்கும் அம்மா...அப்பா ..

இப்ப கணத்துக்கு முன்னரும் கிபிர் வாற இரைச்சல் கேட்கவே வெளியில் நின்ற அண்ணனையும் அக்கறையோடு இழுத்துக்கொண்டுதானே பதுங்கு குழிக்குள் இருவருமாகப் போனார்கள் இருவரும் ஒன்றாகவே மூடப்பட்டது வேதனையாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகவிருந்தது.

குண்டு வீச்சினால் ஏற்பட்ட எந்த சூழல் மாற்றமும் இயல்புக்கு வரவே இல்லை. வெடியதிர்வு ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து யாருமே மீளவில்லை. எரியக்கூடிய பொருட்களில் தீப்பிடிக்க அவை எரிந்துகொண்டிருந்தன. புழுதியும் வெடிமருந்து மணமும் நிலைமையை இன்னும் மோசமாக்குவனவாகவே மாற்றி இருந்தன.

இது நிகழ்ந்தது மன்னாரங்கப் பகுதியிலிருந்து சில மீற்றர் தூரத்திற்குள்தான். காவலரணில ஓயாமல் நின்று காவல காத்துவிட்டு இங்கேயும் சில வேலைகள் செய்ய வந்தபோதுதான் இந்த விபரீதம்.

கால்களில் மிகை ஒலியின் வேகத்தோடு மீட்புப் பணியில் எல்லோரும் துரிதமானார்கள். "டேய் உது குள்ளதான் கண்ணனும காளிதாசனும" சொல்லுகிறபோதே உயிரின் அடிசுரமகூட ஒருமுறை உலர்ந்துபோனது.

ஊரிலிருந்து எல்லைகாக்க ஆர்வமாக வந்து ஒவ்வொரு முறையும் போகின்றபோதும் நின்ற இடம் நகராமல் ஒரே காவலரணில் அதே பதுங்கு குழியில் இரவுபகல் என காவல், நிற்கும போராளிச் சகோதர சகோதரிகளையும் கைகள் புண்ணாகியும ஓய்வு எடுக்காது பதுங்குகுழி அமைத்து, காவல் காத்து சோராது நின்று களமாடி அவர்களின் முன்னாலேயே மடிந்துபோன சொந்தங்களையும் நேரில் கண்டபோது அவர்களுக்குள்ளோ ஒரு உறுதியும் ஓர்மமும உருவாகியிருந்தது. "இந்தமுறை போண முடிஞ்சாலும ஊருக்கு போறேல்ல, களத்திலதான் நிற்கிறது" என்ற முடிவோடு தன் பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்திவிட்டு களத்திலேயே நின்றான் கண்ணன். எப்போதும் எந்த விடயத்திலும் பிரியாத அண்ணன் காளிதாசும அவன்கூடவே களத்தில் நின்றுவிட்டான்.

கண்ணனுக்கும். காளிதாசுக்கும் உருவ வேறுபாடு இருக்கிறது. உணர்வில் துளி வேறுபாடும் இல்லை. ஒருவரை ஒருவர் விஞ்ச நினைப்பது பாசம் வைப்பதில் மட்டும்தான்.

அவர்கள் களத்திற்கு வந்தால் என்ன கட்டளை கிடைக்கின்றதோ அதை நிறைவேற்றுவதில்தான் கருத்தாயிருப்பார்கள். எல்லைப்பணி முடிந்து போகும போது பாராட்டுப்பெற்று, நாங்கள் இந்த மண்ணுக்கு பணிசெய்தோம் என்ற திருப்தியோடு போவார்கள். களமுனை என்பதன் கடினவாழ்க்கையும். லேசான பயத்தையும் பழகப் பழக சரியாக்கிக்கொண்டார்கள் இப்போது இருவருமே களத்தின் கதாநாயகர்கள்.

களத்தின் நிலைமைக்கு ஏற்ப பணி செய்கின்றபோது திசைக்கொன்றாய் இருவருமே பிரியவேண்டியிருக்கும். உறவைக் காரணம்காட்டி தாமதிக்க அவர்கள் களவாழ்க்கையின் சூழ்நிலை அறியாதவர்கள் அல்ல. ஆனாலும் பிரிந்திருக்க அவர்கள் இருவராலும் முடிவதில்லை. அங்கே கிடைக்கின்ற சிறு ஓய்வுவேளையில் கூட தொலைத்தொடர்புக் கருவியில் அண்ணனும தம்பியும் ஒரிரு வார்த்தை தானும் கதைத்துவிடுவார்கள். இருவரும் மாறிமாறி நலவிசாரிப்பு. பின் ஒருவருக்கொருவர் கவனமாக இருக்கவேண்டும் என்ற புத்திமதி இப்படியே இரண்டு இரத்த உறவுகளின் சிறகும் களத்திலேயும் விரிந்து பறந்தது.

கண்ணன் அமைதியான மென்மையான சுபாவம் கொண்டவன். வட்ட முகம், எளிமையான தோற்றம யாருடனும் எளிதில் பழகமாட்டான். பாசம் வைத்தாலோ பிரியவும மாட்டான். ஒவ்வொருமுறையும் அவன் களத்திற்கு வந்து அந்தப் போராளிகளுடன் பழகி அவர்களின் உணர்வறிந்து பிரிவது அவனுக்கு கஸ்டமான தொன்றாகவேயிருந்தது. களவாழ்க்கையின் அவசியத்தை, அங்கே எல்லை காத்துநிற்கும் ஒவ்வொரு போராளியின் நெஞ்சழுத்தை அறிந்தவர்கள் அதைப்பற்றிச் சிந்திப்பவர்கள் எப்படி இந்த மண்ணுக்கு பணி செய்யாது இருக்க முடியும? அதனால்தான் கண்ணன் தன்னை போராளியாக்கிவிட வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருப்பானாம். அண்ணன் காளிதாஸ் சற்றுவேறுபாடு உள்ளவன் கண்ணனிலும சற்று எடுப்பான தோற்றம். எல்லோருடனும கதைத்து கலகலக்கும் சுபாவம்.



எல்லைப்படை

வீரரின்

அணிவகுப்பு

இரண்டுபேரையும் எப்படி ஒரே நேரத்தில் அந்த ஏழைத் தாய்தந்தை இழந்துபோவதை தாங்குவார்கள். நடந்தால் நதியாக...கிடந்தால் மலையாக அந்தக் குடும்பத்தின் அரண்களே இவர்கள்தானே!

குண்டு வீச்சிலே கோலம் கலைந்து போய்க்கிடந்த பதுங்குகுழியின் மண்ணை விலக்கியபோது கண்ணனும் காளிதாசும் சிரித்தபடியே வெளியே வந்தனர். மண்ணும் புழுதியும் அவர்களில் படிந்து அவர்களையே உருமாற்றியிருந்தது. அண்ணன் தம்பியில் இருந்த மண்ணையும், தம்பி அண்ணனில் இருந்த மண்ணையும் தட்டிக்கொண்டிருக்க ஆச்சரியமும் ஆனந்தமும் அங்கு எல்லோரிடையேயும பரவியது. அவர்களின் உடலில் ஏற்பட்டிருந்த குண்டுச்சிதறல்களின் சிறு காயங்களிலிருந்தும், சிராய்ப்புக் காயங்களிருந்தும் இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

"நல்லவேளை கொஞ்சமென்றால் இரண்டுபேரும் ஒன்றாய்த்தான் போயிருக்க வேண்டியிருக்கும்".

காளிதாஸ் அங்கு நிலவிய மௌனத்தில் சொல்லெறிந்து கலைத்தான். ஒவ்வொருவரும் அந்தக் கணத்துக்குள் தாம் நினைத்ததைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். எல்லோரையும் அச்சத்திலும் பின் ஆனந்தத்தின் உச்சத்திலும் ஏற்றிய அண்ணனும் தம்பியும் சிரிப்பாலேயே எல்லோருக்கும் பதிலுரைத்தார்கள். இருவரது கைகளும் இறுக்கமாகவே பின்னப்பட்டதுபோல பிரியாமலே இருந்தன.

களம் கணத்துக்கு கணம் புதிய சூழல்களை பிரசவிக்கின்ற ஓரிடம். மாறிக்கொண்டிருக்கும் கணங்களுக்குள் சிக்குப்பட்டுக்கொள்வது மரங்களும், கட்டடங்களும், நிலமும் மட்டுமல்ல...

அன்று அதிகாலை. அவர்களுக்கு மட்டும வரவில்லை. இரவே தெரியாதபோது எப்படி அதிகாலையை அவர்களால் அறிய முடிந்திருக்கும். இராணுவ நடமாட்டங்களின் அசுமாத்தங்கள் அதிகரித்தமையினால் இமையோடு இமைசேராது விழித்திருந்தபோது அந்த இமைகளுக்கிடையே ஊசலாடுவது தாயகக் கனவும் உறவுகளின் கலப்பும்தான்.

கண்ணனுக்கு எப்படி இருந்திருக்குமோ என்னவோ? அண்ணன் முன்னணியில, இவன் இடையில ஒரு நிலையில் மற்றவர்களுடன். இருவரும ஒருவரோடொருவர் தொலைத் தொடர்பில கதைத்து சில மணித்துளிகள்தான் கடந்திருக்கும். போர்க்களத்தில ஒவ்வொரு கணமும இரத்தத்துளி போன்றதுதானே.

காலை விடியப்போகிறதுதானே நன்கு விடிந்ததும அண்ணை மறுபடியும தொடர்பெடுப்பான். இதுதானே அவர்களது வழமையான செயற்பாடு. ஆனால் அன்று அவர்கள் ஒருவரோடொருவர் கதைத்தபோது இயல்பாக நலம விசாரித்துக்

– துளசிச்செல்வன் –

கதைக்கக்கூடியவாறு நிலைமை இருக்கவில்லை. யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. கடுமையான எறிகணை விதைப்புக்கள். அங்குலத்திற்கு அங்குலம் வீழ்ந்து வெடிக்கும் குண்டுகள். பூமியின் அச்சாணியை அதிர வைக்கின்ற கவசவாகனங்களின் இரைச்சல்கள் எல்லாம் அந்த விடிகாலைக்கு புதியதொரு அடையாளமாயிருந்தது.

(19ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

தமிழீழம் அழகானது: வளமானது: இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 30.%ற்கு மேற்பட்ட நிலப்பரப்பையும் மொத்தக் கடற் பரப்பில் 60%ற்கு மேற்பட்ட கடல் பகுதியையும் தமிழீழம் கொண்டது. இது தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

# தாயகம் காப்போம்

இலங்கையின் கிழக்கே கும்புக்கன் ஆறு தொடக்கம் வடமேற்கே மகா ஓயாவரை பல ஆற்றுப்படுக்கைகளையும் எல்லையாகக்கொண்டு பரந்து விரிந்த ஈழத்தமிழர்களின் தாயகம் தமிழீழம்.

20000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட தமிழீழம் இலங்கையின் கிழக்கு மாகாணம், வடமாகாணம், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் பகுதியையும் உள்ளடக்கியது.

பௌத்தமும் அதனோடு உள்நுளைந்த பாளிமொழியினதும் அதனையொட்டிவந்த சிறுகுடியேற்றங்களினதும் தாக்கத்தினால் உருவான சிங்கள இனம், தீவின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளில் ஒதுங்க தமிழ் மக்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும், தென்மேற்கின் கரையோரப் பகுதியிலும் நிலையாக வாழ்ந்து வந்ததினால் அப்பகுதி தமிழர்களின் தாயகமாக தொடர்ந்து நிலைத்திருந்தது.

13ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டு வரை இத் தாயகப் பகுதி யாழ்ப்பாண அரசாக நிமிர்ந்து நின்றது. தமிழர்களின் தாயகப் பிரதேசமான யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் 16ம் நூற்றாண்டின் பின் வீழ்ச்சியடைந்து அதன் பின் ஒல்லாந்தர்களிடம் வீழ்ச்சியடைந்தது. இந்த நிலையில் தமிழர் தாயகப்பகுதி இவர்களால் தனியான நிர்வாக அலகாக வைத்தே ஆட்சி செய்யப் பெற்றது. இதன் பின்னர் இலங்கை முழுவதையும் கைப்பற்றிய பிரித்தானியர் தமிழர் தாயகத்தையும் சிங்களவர் தாயகத்தையும் 1833 ம் ஆண்டில் ஒன்றிணைத்து இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். 1948 ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த போது பிரித்தானியரால் இலங்கை என்ற தனியான நிர்வாக அலகிற்குட்பட்ட வகையில் தமிழர் தாயகப்பிரதேசம் சிங்களவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்று தமிழீழம் தமிழர்களின் தாயகம் என்ற எண்ணக்கருவை சிங்கள அரசு அழிக்க முனைந்த போது ''தமிழீழ மண்மீட்புப்போர்'' வீறுபெற்று சர்வதேச அரங்கில் உயர்ந்து நிற்கிறது.

இவ் அழகான, வளமான, நிறைவான, வலுவுடைய தமிழீழத்தை தமிழ் இனத்திடமிருந்து பறிக்க இலங்கையில் 1948 ம் ஆண்டிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட தந்திரமே ''சிங்களக்குடியேற்றங்களாகும்.''

இச்சிங்களக்குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகப்பகுதியை காலத்துக்கு காலம் சிங்கள அரசுகள் திட்டமிட்டு செயலாற்றி கபளீகரஞ் செய்து வருவது கண்கூடு.

1) இனவழிப்பு (Genocide)
2) மண்ணில் அத்துமீறல் (Encroachment)

இந்நாட்டின் தமிழ்பேசும் இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு மேற்சொன்ன இரு வழிகளையும் இற்றைக்கு எட்டு தசாப்தங்களுக்கு முன்பே சிங்களப் பேரினவாதிகள் வகுத்தனர். 1920களில் சிங்கள மகா சபை போன்ற நிறுவனங்களும், பௌத்த பேரினவாத அமைப்புகளும், பின்னாளைய திரிசிங்கள பெரமுனாக்களும் இப்பணியை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மிகவும் இலாவகமாக சிறுகச் சிறுகசெய்து வந்தன.

ஒரே பிரதேசமாக விளங்கிய தமிழீழப்பிரதேசம் ஆங்கிலேய ஆட்சியின் போது (1833ல்) வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்களாக வகுக்கப்பெற்று, அவற்றுடன் சில சிங்களப் பகுதிகளும் ஆளுகைத் தொடர்புகளுக்காக இணைக்கப்பட்டன: ஆயினும் 40 ஆண்டுகளின் பின் 1873 இல் ஆளுனராக இருந்த சேர் வில்லியம் கிறேகறி அன்றைய வடகிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டிருந்த சிங்களப் பகுதிகளை முற்றாக நீக்கி தமிழர்கள் மட்டும் வாழ்ந்த இன்றைய வடகிழக்கு மாகாணங்களை உருவாக்கினார். 1948ல் இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி D . S சேனநாயக்கா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற ''கல்லோயா சிங்களக் குடியேற்றத்திட்டம்'' தொடக்கம் இன்றும் தமிழீழத்தின வடக்கு கிழக்குப்பகுதியில் சந்திரிக்கா அரசினால் மேற்கொள்ளப்பெற்று வரும் சிங்களக்குடியேற்றங்கள் வரை ஒரே அடிப்படை உள்நோக்கங்களைக்கொண்டே நடைமுறைப் படுத்தப்பெற்று வருகின்றன. அவையாவன.

☆ தமிழ்த்தேசிய இனத்தினதும் அவர்களினது தாயகத்தினதும் தனித்துவத்தை அழித்தல்.

☆ தமிழ்த்தேசியப் பண்புகளை சிதைத்தல்

☆ தமிழீழத் தலைநகரை தமிழ்மக்களிடமிருந்து பறித்தெடுத்தல்.

☆ ஒவ்வொரு தமிழனினதும் நெஞ்சத்திலுள்ள தமிழர் தாயகம் தமிழீழம் என்ற எண்ணக் கருவை இல்லாதொழித்தல்.

## எல்லை கடந்து முன்னேறிய எல்லைகள்

ஓரினத்தை அழிப்பதற்கு, வல்லாதிக்க ஆக்கிரமிப்பாளர் கையாளும் பேராயுதம் குடியேற்றத்திட்டமாகும். இது குறித்து அரசியல் ஞானியும் சிந்தனையாளருமான மாக்கியவல்லி என்பவர் கூறிய கூற்றை இங்கு நினைவு கூர்தல் பொருந்தும்.

''ஓர் அரசன் (அரசு) தான் கைப்பற்றிய பிரதேசத்தைத்தொடர்ந்து அனுபவிக்கவேண்டுமாயின் அங்கு தனது குடிகளைக்குடியேற்றிக் கொள்ளவேண்டும். இது இராணுவ முகாம்களை தாபிப்பதை விட மேலானதாகும். ஏனெனில் இராணுவத்திற்கு அரசனே (அரசே) ஊதியம் கொடுத்து போஷிக்க வேண்டும். அதே வேளையில் இராணுவத்தினர் அந்த மண்ணுக்கு அந்நியமானவர்கள். ஆனால் குடியேற்றவாசிகளோ அப்படியல்ல. அவர்கள் சிறிது காலத்திற்கு அந்நியமாக இருந்தாலும் வெகு விரைவில் அந்த மண்ணில் ஊறிவிடுவார்கள். இவர்களுக்கு அரசு ஊதியம் கொடுத்துப் பேணத்தேவையில்லை. அவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாக அன்றி, சந்ததி சந்ததியாகத் தமது உயிர்வாழ்வுக்காக உணர்ச்சியோடு நின்று எதையும் தாக்குப் பிடிப்பவர்கள். எனவே குடியேற்றம் இராணுவத்திலும் மேலான நிரந்தர இராணுவமாக விளங்கும்''

இந்த உத்தியைக் கைக்கொண்டு ஆங்கிலேயர் அயர்லாந்திலும், இஸ்ரேலியர் பலஸ்தீனத்திலும் செய்த - செய்து கொண்டிருக்கும் குடியேற்ற நடவடிக்கைகளும், அவர் தம் குடியேற்றவாதக்கொள்கைகளும் உலகறிந்த விடயங்கள்.

- சி. விபுலேந்திரன் -

இந்தப் பாணியிலேயே தமிழீழத்திலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்திட்டத்தை அரசு தீட்டியது.

### சிங்களக் குடியேற்றத்திட்டங்களுக்கான எண்ணக்கருக்கள்

சிங்களக்குடியேற்றத்திட்டங்களுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியாக சிங்கள அரசுகளினால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்ற ''காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டங்களும்', ''காணி அபிவிருத்திக்கான ஆணைக்குழுக்களும்'' [அரசினால் நியமிக்கப்பெற்ற] பெரிதும் உதவி புரிந்தன. இந்த அடிப்படையில்,

☆ தமிழ்த்தேசிய இனத்தினதும் அவர்களினது தாயகத்தினதும் தனித்துவத்தை அழிக்கும் வகையில் இலங்கை சுதந்திரமடைந்த போது தமிழர் இராச்சியத்திற்கும் சிங்களவர் இராச்சியத்திற்கும் இடையே காணப்பெற்ற காட்டு எல்லைப்பிரதேசம் அழிக்கப்பெற்று அப்பிரதேசங்களில் சிங்களவர் குடியேற்றப்பட்டு அவர்களுக்கான அபிவிருத்தித்திட்டங்களும் முன்வைக்கப்பெற்று திட்டம் அமுலாக்கப்பெற்றது.

☆ தமிழ்த்தேசியப் பண்புகளை சிதைக்கும் வகையில் தமிழ்மொழியை அழித்து, தமிழர் கலைபண்பாட்டை சீரழித்து, பொருளாதார வாழ்வை சீர்குலைத்து, வரலாற்றைத் திரித்து தமிழர் தாயகப்பகுதியை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றன.

☆ தமிழீழத் தலைநகராம் திருகோணமலை மாவட்டத்தை தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்து திருகோணமலை சிங்களமயப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பெற்றன.

☆ தமிழர் தாயகம் தமிழீழம் என்ற எண்ணக் கருவை தமிழர்களினது நெஞ்சங்களிலிருந்து அகற்ற தமிழர் தாயகப்பிரதேசங்களை துண்டாடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றன,

சிங்கள இனவாத அரசுகளின் இவ் அடிப்படை எண்ணக்கருக்களுக்கு சர்வதேச ரீதியான குடியேற்ற விதி முறைகள் ''நேரடியான சிங்களக்குடியேற்றங்களை'' அமைக்க சாதகமாக அமைந்ததோடு, இதனோடு இணைந்து ''அத்துமீறிய மறைமுக சிங்களக்குடியேற்றங்களும்'' நடைபெற வாய்ப்பாக அமைந்தது.

இக்குடியேற்ற நடைமுறைகளுக்கு சிங்கள அரசுகள் முன் வைத்த விளக்கங்களும், குடியேற்றத்திட்டங்களில் சகல இனங்களுக்கும் உதவிகள் வழங்கப்படும் என முன்வைத்த விடயங்களும், வறுமைப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை என்ற கோஷத்துடன் நாட்டின் அபிவிருத்தியே இலக்கு என கூறப்பெற்ற கருத்துக்களும் சர்வதேசங்களிலிருந்தும் பல உதவிகளும் அரசுக்கு கிடைத்ததோடு சிங்கள அரசின் குடியேற்றச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திய சிங்கள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் குடியேற்றச்செயற்பாடுகளுக்கு தேவையான சர்வதேச உதவிகள் கிடைப்பதற்கும் வழிவகுத்தது.

தமிழீழத்தின் பரப்பளவு

| இலங்கையின் மாகாணப் பகுதிகள் | பரப்பளவு (சதுர கிலோ மீற்றர்) |
|---|---|
| ❋ வட மாகாணம் | 8879.6 |
| ❋ கிழக்கு மாகாணம் | 10001.0 |
| ❋ வடமேல் மாகாணப்பகுதி (புத்தளம் மாவட்டப்பகுதி) | 1488.5 |
| மொத்தம் | 20369.1 |

சிங்களக் குடியேற்றச் செயற்பாடுகளில், கூடிய பரப்பளவைக் கொண்ட கிழக்கு மாகாணப் பகுதியிலேயே 1948ல் முதலில சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பெற்றன அன்று தொடங்கிய குடியேற்றத் திட்டம் இன்று தொடர்கிறது. இத்திட்டங்களுக்கு சான்று கூறும் வகையில் பல சிங்களத் தலைவர்களின் உரைகள், கூற்றுக்கள் வெளிச்சம் போட்டுக் காட்டின.

☆ 1983ல் இலங்கையின் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனா அவர்கள்.

''சிங்களவர் எல்லைகளை நோக்கி நகராவிட்டால் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்'' என்றார். →



www.eelamview.com

☆ 08-01-1985 அன்று மாவட்ட அமைச்சர்கள், அரச அதிபர்கள் முன்னிலையில் திரு.லலித் அத்துலத் முதலி அவர்கள் தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை இல்லாதொழிப்பதுதான் குடியேற்றத்திட்டங்களின் நோக்கம் எனக் கூறினார். மேலும் இக்குடியேற்ற திட்டவாசிகளுக்கு ஆயுதப்பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பெறும் என்ற நோக்கத்தையும் இக்கூட்டத்தில் ஒப்புக்கொண்டார்.

☆ ஈழக்கோரிக்கையின் எண்ணக்கருவை அழிக்கும் வகையில் மூன்று குடியேற்றத்திட்டங்கள் திட்டப்பட்டதாக 26-08-1990 அன்று மகாவலி அமைச்சைச் சேர்ந்த ''மாலிங்க ஹேர்மன் குணரெட்ண'' என்பவர் சண்டேடைம்ஸ் பத்திரிகையில் பேட்டியளித்திருந்தார்.

1) முதற்பகுதி 45000 நிலமற்ற விவசாயிகளை மாதுறு ஓயாவுக்கு (மட்டக்களப்பு, பொலநறுவை மாவட்டங்களுக்கு) அனுப்புவது.

2) ஜான் ஓயாவில் குடியேற்றம் ஒன்றை அமைப்பது.

3) ஈழக்கோரிக்கைக்கு எதிரானவர்களை மல்வத்து ஓயாவில் குடியமர்த்துவது.

இவ்வாறு பல தலைவர்களும் சிங்கள அரச அதிகாரிகளும் குடியேற்றத் திட்டங்களின் உண்மை நோக்கங்களை ஒப்புக்கொண்டு அன்று தொடக்கம் இன்றுவரை சிங்களக்குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை வழங்கி பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றங்கள்

சிங்கள குடியேற்றத்திட்ட செயற்பாடுகளினால் கூடுதலாக பாதிக்கப்பெற்றது கிழக்கு மாகாணமேயாகும்.

இன்று இச்சிங்களக்குடியேற்றத் திட்டங்களால் தமிழீழத்தின் பகுதியான இலங்கையின் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தை நாம் இழந்துவிட்டோம். மல்வத்த ஓயா குடியேற்றத்திட்டம் இதற்கு வழி வகுத்தது.

புத்தளம் மாவட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் விதம்

| ஆண்டு | தமிழ் பேசும் மக்கள் விதம் | சிங்களவர் விதம் |
|---|---|---|
| 1921 | 55 | 42.3 |
| 1953 | 44.7 | 53 |
| 1981 | 15 | 85 |

இம்மாவட்டத்தில் தமிழ்பேசும் மக்களின் பாராளுமன்ற அங்கத்துவமே இல்லாமல் போனது (2000ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில்)

இதே போன்று தமிழீழப்பகுதியான கிழக்கு மாகாண மாவட்டங்கள் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு வருவதோடு சிங்களமயப்படுத்தப்பெற்றும் வருகின்றன. அத்துடன் வடதமிழீழப் பகுதியும் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பெற்று வருவதோடு அதற்கான திட்டங்களும் ஆரம்பிக்கப்பெறுகின்றன.

கீழே தரப்பெற்ற தரவுகளில் இருந்து புத்தளம் மாவட்டத்திலும், வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், தமிழ்பேசும் மக்களின் விகிதாசாரம் குறைந்து சென்றதும் சிங்களவர்களின் எண்ணிக்கையும் விகிதாசாரம் அதிகரித்துள்ள நிலையும் தமிழீழப்பகுதிகளில் இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பெற்றதை தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

வடமாகாண சனத்தொகை (1981 குடிசன மதிப்பீட்டின்படி)

| ஆண்டு | தமிழர்கள் | | சிங்களவர் | | முஸ்லீம்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | விதம் | எண்ணிக்கை | விதம் | எண்ணிக்கை | விதம் |
| ❊ இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் (1946) | 4 49958 | 93.8 | 9602 | 2.0 | 18183 | 3.3 |
| ❊ இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் (1981) | 10 23 228 | 92.1 | 33149 | 3.0 | 52638 | 7.4 |

கிழக்கு மாகாண சனத்தொகை (1981குடிசன மதிப்பீட்டின்படி)

| ஆண்டு | தமிழர்கள் | | சிங்களவர் | | முஸ்லீம்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | விதம் | எண்ணிக்கை | விதம் | எண்ணிக்கை | விதம் |
| ❊ இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் (1946) | 146059 | 52.3 | 23456 | 8.5 | 109024 | 32.2 |
| ❊ இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் (1981) | 409451 | 41.9 | 243358 | 24.9 | 315201 | 39.1 |

இந்த வகையில் தான் சிங்கள மக்களினது இன்னொரு அதிகரிப்பைக்காட்ட 2001ல் குடிசன தொகை மதிப்பீடு செய்யும் ஒழுங்கை சிங்கள அரசு மேற்கொண்டது. இன்றைய யுத்த கால சூழ்நிலையும் தமிழ்மக்களின் இடம்பெயர்வினால் இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் வாழும் நிலைமைகளும், பெரும் தொகையான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ள நிலையும் தமிழ் மக்களின் எண்ணிக்கையை தமிழீழப்பிரதேசங்களில் பெருமளவு குறைந்திருக்கும். ஆனால் சிங்கள ஆயுதப்படைகள் தமிழீழப் பிரதேசங்களில் நிலைகொண்டிருப்பதும், புதிய சிங்களக் குடியேற்றங்களும் தமிழீழத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை கூடுதலாக கூட்டியிருக்கும். இச்செயற்பாடு விடுதலைப் புலிகளின் அறிவிப்பினால் தமிழீழப்பகுதியில் நிறுத்தப்பட்டதும் சர்வதேச ரீதியாக தமிழீழப்பகுதி சில இனங்களும் வாழும் பிரதேசம் தமிழர்களின் தாயகம் அல்ல என்றும் சிங்கள அரசு மேற்கொள்ள இருந்த பிரச்சாரங்களும் முறியடிக்கப்பெற்றதை யாரும் மறுக்கமுடியாது.

## தமிழீழத்தில் சிங்கள குடியேற்றத் திட்டத்தின் விளைவுகள்

''தமிழர்களின் தாயகம் தமிழீழம்'' என்ற எண்ணக்கருவை அழிக்கும் வகையில் தமிழீழத்தில் உருவாக்கப்பெற்ற சிங்களக்குடியேற்றத்திட்டங்கள் திட்டமிட்டு சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக தமிழீழத்தில் பல பாதிப்பான விளைவுகள் ஏற்பட்டன.

☆ தமிழீழத்தின் மாவட்டங்களின் இன விகிதாசாரம் மாற்றமடைந்தது.

☆ இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பெற்ற விகிதாசாரத்தேர்தல் முறைமூலம் தமிழீழ மாவட்டங்களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக சிங்களவர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்கள் மூலம் புதிய சிங்களக்குடியேற்றங்களும் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டதோடு, சிங்கள குடியேற்றப்பிரதேசங்களும் அபிவிருத்தியடைந்தன. தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை குறைந்தது.

2000ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழீழப் பகுதியில் தெரிவு செய்யப்பெற்ற சிங்களப்பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| வவுனியா | — | 02 |
| திருகோணமலை | — | 02 |
| அம்பாறை | — | 03 |
| மொத்தம் | — | 07 |

❊ தமிழீழ மாவட்டங்களில் சிங்களவர்களுக்கான புதிய மாவட்டங்களும் புதிய தேர்தல் தொகுதிகளும் உருவாக்கப்பெற்றது.

1) மட்டக்களப்பு — 1959ல் அம்பாறைதேர்தல தொகுதி

2) திருகோணமலை - 1970ல் சேருவில தேர்தல தொகுதி

☆ சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழீழத்தின் மொத்த நிலப்பரப்பான 20000 சதுர கிலோ மீற்றரில் 6500 ற்கு மேற்பட்டசதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| அம்பாறை மாவட்டம் | | — | 4500 ச கி மீ |
| திருகோணமலை | ,, | — | 600 ,, |
| வன்னி | ,, | — | 500 ,, |
| புத்தளம் | ,, | — | 1400 ,, |
| மொத்தம் | | | 7000 ,, |

| தமிழீழ மாகாணப் பிரிவுகள் | இப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களும் |
|---|---|
| ☆ வடமாகாணம் | — பவல் ஓயாத் திட்டம்<br>— பாவற்குளம் குடியேற்றத்திட்டம்<br>— பதவியா குடியேற்றத்திட்டம்<br>— துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்<br>— மல்வத் ஓயாத் திட்டம்<br>— கொண்டச்சி குடியேற்றத் திட்டம் |
| ☆ கிழக்கு மாகாணம் | — கல் ஓயா குடியேற்றத் திட்டம்<br>— அல்லைக் குடியேற்றத் திட்டம்<br>— கந்தளாய் குடியேற்றத் திட்டம்<br>— மாதுறு ஓயா குடியேற்றத் திட்டம்<br>— மொறவெவ குடியேற்றத் திட்டம்<br>— யான் ஓயா குடியேற்றத் திட்டம்<br>— மகாதிவுல்வெவ குடியேற்றத் திட்டம்<br>— மகாவலி அபிவிருத்தித் திட்டம் |

(18ம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகள் நூறாவது குரல்



www.eelamview.com

# நீதி நிர்வாகத்துறையின் எட்டாண்டுகால செயற்பாடுகள்

## -ஒரு கண்ணோட்டம்-

இவ்வுலகில் மக்கள் வாழ்வின் இயங்கியலில் நீதி செலுத்தப்படுவதன் பங்கு அவசியமானது. நீதி செலுத்தும்முறை எமது பண்டைய சமூக முறைகளிலிருந்து பேணப்பட்டுவந்த ஓர் அவசியமான அலகாகும். அந்தவகையில் இன்று தமிழீழத்திலும் நீதி செலுத்துதலை செம்மையாகச் செயற்படுத்த தமிழீழ நீதிநிர்வாகத்துறை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்றது.

தமிழீழ நீதிநிர்வாகத்துறைச் செயற்பாடானது 1993 - 08 - 19ம் திகதி சட்டக்கல்லூரியைப் பூர்த்தி செய்த போராளிகளின் அணி ஒன்றுடன் ஆரம்பமானது. நீதி செலுத்துதலில் பக்கச் சார்புகள், செல்வாக்குகள், தாமதங்கள் என்பவைகள் ஏற்படாதவாறு செயற்படுத்தும் பொருட்டு, தமது நாட்டின் விடுதலைக்காகப் போராடும் அணைத்துக்கொண்ட போராளிகளின் ஒரு பகுதியினர் தலைவர் அவர்களால் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு சட்டக்கல்லூரியில் கற்கைநெறியில் பயிற்றப்பட்டு அவர்களிலிருந்து நீதியாளர்கள், சட்டவாளர்களைத் தெரிவுசெய்து தமிழீழ நீதிமன்றுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நீதிநிர்வாகத்துறைச் செயற்பாடானது, நீதிமன்றுகள் செயற்படுத்தல், சட்டக்கல்லூரி, சட்டவாக்கச் செயற்பாடுகள் ஆகிய மூன்று பிரதான செயற்பாடுகளை இன்று வரையான எட்டு ஆண்டுகளில் செயற்படுத்தி வருகின்றது.

நீதியாளர்கள் யாவரும் சட்டக் கல்வியைப் பூர்த்திசெய்து தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் முன்னிலையில் நீதியாளருக்கான உறுதியுரையினை மேற்கொண்டவர்களாவர்.

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் நீதித்துறை தொடர்பில் நீதியாளர்களின் உறுதியுரையை ஏற்று நீதியாளர்களை செயற்பட அனுமதிப்பதுடன், குற்றவாளிகளின் தண்டனைகளைக் குறைத்தல், குற்றவாளிகட்கு மன்னிப்பு வழங்கல், ஆகியவற்றையும் செயற்படுத்துவதுடன், நிகழ்வுத்தவறு, அல்லது சட்டத்தவறு ஒன்று காணப்படுகின்றதான விடையங்கள் தொடர்பில் நியாய விளக்கமொன்றிற்குப் பணிப்புரைகளையும் விடுக்கலாம்.

தமிழீழத்தில் செயற்படுத்தப்படும் நீதிமன்றுகள் ஆறு வகைப்படும். அவற்றின் நியாயாதிக்கத்திற்கு ஏற்ப உச்ச நீதிமன்றே அதியுயர் நீதிமன்றாகத் திகழ்கின்றது. இது மூன்று நீதியாளர்களைக் கொண்ட அமைப்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நீதிமன்று சகல வழக்குகளினதும் இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. பார்வையிடல், ஆலோசனை வழங்குதல் ஆகியவையும் இதன் அதிகாரங்களாகும்.

இதற்கு அடுத்தபடியாக மேன்முறையீட்டு நீதிமன்று காணப்படுகின்றது. மேன்முறையீட்டு நீதிமன்று மாவட்ட மன்றுகளினதும், மேல் நீதிமன்றினதும், சிறப்பு நீதிமன்றுகளினதும் வழக்குகளின் மீதான மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ளது. இது மூன்று நீதியாளர்களைக் கொண்ட தவிசினால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது 06 நீதியாளர்கள் மேன்முறையீட்டு நீதியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முன்னிலையில் உறுதிப்பிரமாணம் எடுக்கும் உச்சநீதிமன்ற நீதியாளர்

இதற்கு அடுத்த கீழ்நிலை நீதிமன்றாக மேல் நீதிமன்று, காணப்படுகின்றது. மேல் நீதிமன்றானது, குற்றவியல் வழக்குகள் தொடர்பான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது இந்நீதிமன்றானது, மேல் நீதிமன்ற நீதியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படுகிறது. மரண தண்டனைக்குரியனவும், 10 ஆண்டுகட்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடியதுமான தவறுகள் தொடர்பில் இது நியாயாதிக்கமுடையது ஆகும்.

சிறப்பு நீதிமன்றானது, சிற்சில குறிப்பிட்ட குற்றவியல் வழக்குகளின் நிகழ்வுகள் தொடர்பில் அவற்றின் பாரதூரத்தன்மை, அதில் ஆராயப்படவேண்டிய விடையத்தின் முக்கியத்துவம் போன்றவைகளைக் கருத்திற்கொண்டு மூன்று நீதியாளர்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்படும் ஒரு நீதிமன்றத் தவிசாகும். சிறப்பு நீதிமன்றத் தவிசானது, அது ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கம் நிறைவடைந்ததும் கலைந்துவிடும்.

அடுத்த ஆரம்பநிலை நியாயாதிக்கமுடைய மன்றுகளாக மாவட்ட குடியியல் நீதிமன்றுகளும், மாவட்ட குற்றவியல் நீதிமன்றுகளும் காணப்படுகின்றன. குடியியல் மன்றுகள் சகல குடியியல் வழக்குகளையும் பெற்று ஆராய்ந்து ஆரம்பத் தீர்ப்புக்களை வழங்குகின்றன. இவ்வாறே குற்றவியல் வழக்குகளை குற்றவியல் மாவட்ட நீதிமன்றுகள்; குற்றவியல் சிக்கல்களில் மேல் நீதிமன்றிற்குரியவை தொடர்பில் சுருக்கமுறை விளக்கத்தினையும், தான் விளங்கக்கூடிய வழக்குகளை பூர்வாங்கமாக விளங்கியும் வருகின்றன. இற்றைவரை 10 குற்றவியல் மாவட்ட நீதிமன்றுகளும், 10 குடியியல் மாவட்ட நீதிமன்றுகளும் ஆரம்பிக்கப்பட்டு இன்று தலா மூன்று மூன்று மாவட்ட மன்றுகள் நீதி செலுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதுவரை 7459 குற்றவியல் வழக்குகளையும், 5790 குடியியல் வழக்குகளையும் மாவட்ட மன்றுகள் தீர்த்துள்ளன. இன்றுவரை மொத்தமாக 19776 வழக்குகளை மாவட்ட மன்றுகள் சந்தித்துள்ளன.

இவற்றில் மொத்தமாக 806 வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 656 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன.

தமிழீழ நீதிநிர்வாகத் துறைச்செயற்பாட்டில் மற்றுமோர் அலகான சட்டக்கல்லூரியானது, இன்றுவரை மூன்று தொகுதி மாணவர்களுக்கான சட்டக்கல்வியை நிறைவேற்றியுள்ளதுடன், 4வது அணிக்கான கல்வியூட்டலையும், மேற்கொள்கின்றது. அத்தோடு 2000 ஆண்டில் தமிழீழ சட்டக்கல்லூரியால் வெளிவாரி சட்டக்கற்கைநெறியொன்றும், ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

சட்டக்கல்லூரியின் உள்ளகக் கற்கைநெறியானது. 22 முழுமையான சட்டப்பாட நெறிகளையும், ஏனைய 04 உப பாட நெறிகளையும் கொண்டுள்ளது. வெளிவாரிக் கற்கைநெறி 18 சட்டக்கற்கை நெறிகளையும் ஒரு உப கற்கை நெறியையும் கொண்டுள்ளது. மூன்று ஆண்டுகள் வரையான கற்கை நெறியாக சட்டக்கற்கை நெறி காணப்படுகின்றது.

முதலாவது அணியில் 34 மாணவரும், 2 வது அணியில் 25 மாணவரும், மூன்றாவது அணியில் 28 மாணவரும் சட்டக்கற்கையைப் பூர்த்திசெய்து வெளியேறியுள்ளனர்.

சட்டவாக்கச் செயற்பாடுகள் சட்டசபைக்கு உடையவையாயினும், தற்போது நீதித்துறைச் செயற்பாட்டிற்காகவும், சட்ட அறிவுடையவர்கள் அவற்றைக் கையாள வேண்டும் என்பதற்காகவும், நீதிநிர்வாகத்துறையின் சட்டமாக்கற் பிரிவினரால் சட்டங்கள் வரையப்படுகின்றன. அவ்வாறு வரையப்படும் சட்டங்கள் சட்டப்பரிசீலனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு பின்பு தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் ஒப்புகையைப் பெற்று சட்டமாக வெளியிடப்படுகின்றன. இன்று இயற்றப்படும் சட்டங்கள் யாவும் தூய நீதியை நிலைநாட்டுவதற்காகவும், மக்கள் வாழ்வினை சீராக அனுபவிப்பதற்கும் வசதி செய்து கொடுப்பதற்குமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுகின்றன.

இவ்வாறு இயற்றப்படும் சட்டங்களில் மக்களின் இறைமை, நீதித்துறைச் சுதந்திரம், ஐ நா சபையின் மனித உரிமைகள் பிரகடனத்திற்கமைவாக, மக்களின் உரிமைகளைப் பேணும் நோக்கு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சிறப்பாக குடியிருக்கும், கருத்து வெளியிடும், மதத்தைப் பின்பற்றும், தொழில் புரியும் சுதந்திரம். சட்டத்தின்முன்பு எதிர்வாதம் செய்யவும், நபர் ஒருவர் குற்றத்தீர்ப்பு ஒன்றிற்கு முன்னர் சுற்றவாளியாகக் காணப்படுவதற்குமான சுதந்திரம், நியாயமாக விசாரிக்கப்படாமல் தண்டிக்கப்படாமை ஆகியவைகளையும் உள்ளடக்கிச் சட்டங்கள் வரையப்படுகின்றன.

இதுவரை பல பிரதான சட்டங்களும், திருத்தச் சட்டங்களுமாக மொத்தம் 19 வெளியிடப்பட்டுள்ளன. அவைகளில்

குற்றவியற் சட்டம்,
சான்றியற் சட்டம்,
தமிழீழச் சட்டக்கோவை,
தேச வழமைச் சட்டம்,
உணவுச் சட்டம்,
மோட்டார் ஊர்திகள் பதிவுச்சட்டம்,
சீதனத் தடைச்சட்டம்,
சீட்டுச் சட்டம்

போன்றவை பிரதான சட்டங்களாகும்.

இவைகளில் தமிழீழ தேசவழமைச் சட்டம் நியாயமான வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட உள்ளூர்ச்சட்டத்தின் திருத்திய வடிவமாகும். குற்றவியற் சட்டம், அனைத்து நாடுகளும் பின்பற்றும் பொதுவான குற்றச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளைத் தழுவி எமது சமுதாயத் தேவைக்கு ஏற்றவாறான விதிகளையும் உட்செலுத்தி உருவாக்கப்பட்ட சட்டமாகும்.

அவ்வாறே சான்றுச்சட்டமும் விசாரணைகளின் போது கட்சியினரின் சுதந்திரத்தை வலியுறுத்துவதை பிரதானமாகக் கொண்டுள்ளது. இதன்படி நியாயமான சந்தேகத்திற்கப்பால் குற்றங்கள் நிருபிக்கப்பட வேண்டும் என்பதுவும், ஒவ்வொரு சாட்சியை எதிர்தரப்பு விரும்பினால் குறுக்கு விசாரணை செய்யலாம் எனும் விதியும், பொலிஸாருக்குச் செய்த குற்ற வொறுப்புதல்களை சான்றாகக் கொள்ளக்கூடாது என்ற ஓர் அனைத்துலக விதியையும் குறிப்பிட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன.

(19 ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

16ம் பக்கத் தொடர்ச்சி தாயகம் ....

☆ பிரேமதாசா (இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி)வினால் அறிமுகம் செய்து வைக்கப் பெற்ற ''பிரதேச சபைத்திட்டம்'' பிரதேச ரீதியான பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் கீழ் சிங்களக்குடியேற்றப் பிரதேசத்தை பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைய வைத்ததோடு தமிழீழப்பிரதேசத்தை அரசியல் ரீதியாக ஆபத்தான நிலைக்கு கொண்டு சென்றது.

☆ சிங்களக்குடியேற்றங்கள் மூலம் 13 சிங்களப் பிரதேசச் செயலாளர் பிரிவுகள் தமிழீழ பிரதேசத்தில் புதிதாக உருவாக்கம் பெற்றது.

☆ தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தப்பெற்ற சிங்களக் குடியேற்றத்திட்டங்களும், திட்டமிடப்பெற்ற சிங்களக்குடியேற்றத்திட்டங்களும் தமிழீழ மாவட்டங்களை துண்டாடும் நோக்கங்களைக்கொண்டிருந்தது.

- கல்லோயாத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டம் உருவாக வழிவகுத்ததோடு மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களை துண்டாடியது.

- அல்லைக்கந்தளாய் திட்டம் திருகோணமலை மாவட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரித்தது.

- மாதுறு ஓயாத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தை துண்டாடும் நோக்கத்தை கொண்டிருந்தது வெலி ஓயாத்திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கிடையே அமைந்து இரு மாகாணங்களையும் துண்டாடியது.

- மல்வத்து ஓயாத்திட்டம்வடமாகாணத்தை புத்தளம் மாவட்டத்திலிருந்து பிரித்து இரு மாகாணப்பகுதிகளையும் துண்டாடியது. ஜான் ஓயாத்திட்டம் தமிழீழத் தலைநகரான திருகோணமலையை துண்டாடும் நோக்கத்தை கொண்டிருந்தது.

துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மகாவலிகங்கை வடக்கு நோக்கி திசை திருப்பப்பட்டு வடமாகாணத்தை துண்டாடும் நோக்கத்தைக் கொண்டு 1970 ல ஆரம்பிக்கப் பெற்றது.

☆ தமிழீழப் பிரதேசத்தில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்திச்செயற்பாடுகள் யாவும் சிங்களப்பிரதேசங்களில் தங்கியிருக்கும் வகையில் சிங்களக்குடியேற்றச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பெற்றன.

கல்லோயாத்திட்டத்தின் மூலம் உருவாக்கப் பெற்ற ''சேனநாயக்கா சமுத்திரத்தில'' இருந்து அம்பாறை மாவட்டதமிழ் பேசும் மக்கள் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் நீரைப் பெற வேண்டிய நிலையிலுள்ளது. தற்போது தமிழகத்திற்கு காவேரி போல் அம்பாறைக்கு சேனநாயக்கா சமுத்திரம் என்ற நிலை நீர்ப் பங்கீட்டில் ஏற்பட்டுள்ளது.

இதே போன்று திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் குளத்திலிருந்து பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தம்பலகமம் பிரதேச தமிழ் மக்கள் நீரைப்பெறுவதிலும் இதே நிலையேயுள்ளது.


## தாயகம் காப்போம்

அன்று இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ மண்ணில் தமிழ் தேசிய இன மக்கள் வாழ்ந்து அவர்கள் வாழ்வு வளம்பெற்று தமிழரசு நிலைத்திருந்தது.

இன்று எமது மண்ணும் மக்களும் அவர்களின் வாழ்வும் வளமும் சீரழிக்கப்படும் வகையில் இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளும் அதன் தலைவர்களும் திட்டம் போட்டு செயற்பட்டனர். இது உச்சமடைந்த நிலையில் தமிழீழ மண்மீட்புப்போர் எழுச்சியடைந்தது.

இந்த நிலையிலும் அண்மையில் சந்திரிக்கா அசுர வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு

அளவு கடந்த சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள்




பாதை திறக்க ஆரம்பித்த ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை பாதையை மட்டுமல்ல சந்திரிகா அம்மையாரின் தாயார் சிறிமா அம்மையார்போட்ட துரித மகாவலி அபிவிருத்திக்கிட்டத்தில் வடமாகாணத்தை துண்டாடி தமிழீழக்கோரிக்கையின் எண்ணக்கருவை அழிக்கும் நோக்கத்தையும் கொண்டு நகர்ந்து சுக்குநூறாகியது.

தமிழீழத்தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியுடனும், தியாகத்துடனும், இலட்சியவேசத்துடனும் வளர்க்கப்பெற்ற ''தமிழீழ மண்மீட்புப்போர்'' புலிகள் இயக்கம் ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை சிங்கள குடியேற்றங்களை தமிழீழப்பகுதியிலிருந்து அகற்றி வருவதோடு ''தமிழர் தாயகம் தமிழீழம்'' என்ற எண்ணக்கருவை அழிக்க நினைக்கும் சிங்கள அரசுகளின் திட்டங்களும் முறியடிக்கப்பெற்றுவருகிறது.

அழகான, வளமான, பரந்துவிரிந்த எமது தமிழீழத்தாயக பூமியை சிங்கள அரசிடமிருந்து மீட்டெடுக்க தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழத்தேசியத்தலைவரின் பாதையில் அணிதிரள்வோம். சிந்திப்போம் செயற்படுவோம் எமது தாயகம் காப்போம். தமிழீழமண் மீட்போம். O

06ம் பக்கத்தொடர்ச்சி

திரிசங்கு -

புலிகள் இயக்கம் பயன்படுத்திவிடக் கூடாது என்பதற்காக சிங்களக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவி சிங்கள அரசை சிக்கலிலிருந்து மீட்டெடுக்க பேரினவாதிகள் விரும்புகின்றனர்.

இந்த முயற்சிக்கு 'பச்சை' பேரினவாதிகளான ஐக்கிய தேசியக் கட்சியினரும். சிவப்புப் பேரினவாதிகளான ஜே. வி. பியினரும் நிபந்தனைகளுடனான ஆதரவுகளை அரசுக்கு நல்கமுயன்று வருகின்றனர். இவர்களைப் பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தை தக்கவைக்கும் தந்திரத்துடன் அம்மையாரின் அமைச்சர்கள் அரசியல் பேரங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த அரசியல் திருவிளையாடல்கள் இப்போதைக்கு ஓயப்போவதுமில்லை.

இராணுவ - பொருண்மிய- அரசியல் ரீதியில் தமது அரசு பாரிய சிக்கல்களைச் சந்தித்துள்ளதென்பதை பேரினவாதிகள் ஏற்றுக் கொண்டாலும் போரை நிறுத்தி-அரசியல் தீர்வு தேடும எண்ணம் அவர்களுக்கு உண்மையில் இல்லை. பதிலாக நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுவதற்கான ஒரு கால அவகாசத்தை அவர்கள் வேண்டி நிற்கின்றனர் அந்தக் கால அவகாசம எந்த வடிவத்தில் வந்தாலும் அதைப்பயன்படுத்தி விட வேண்டும என்று காத்திருக்கின்றனர்.

ஆனால் இம்முறை அந்த வாய்ப்பு சிங்கள அரசாங்கத்திற்கு கிடைக்குமா! என்ற கேள்விக்கு பதிலறிய தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர். O

5ம் பக்கத் தொடர்ச்சி

சந்திரிகா .....

கூற்றுக்கள். ''தமிழ் மக்களுக்கெதிராகப் பயன்படுத்திய சகல அடக்கு முறைகளும் சிங்களவரின் நீதியான வேண்டுகைகளுக்கெதிராகவே பயன்படுத்தப்படும்'' இதுவும் அவர்கள் விடுக்கும் எச்சரிக்கை. அடக்குமுறைகள் ஏற்கனவே இடம்பெறத்தொடங்கி விட்டன. போரே முற்றுமுழுதான தீர்வெனக் கொக்கரித்த ஐலண்ட் ஆசிரியர் இம்முறை தாது இரண்டு வார தலையங்கத்திற்கு (26- 07- 03. 08) இட்ட தலைப்பு' புலிகளிடம் போரைத் தோற்பது எப்படி?'' பூநகரி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மத்தியவங்கி, ஒட்டுசுட்டான், மாங்குளம், கனகராயன் குளம், ஆனையிறவு, 'அக்கினி-சுவாலை', கட்டுநாயக்கா தொடரும் இப்பேரழிவுகளுக்கு யார் பொறுப்பு? கட்டுநாயக்கா அழிவுக்கு அதன் தளத்தளபதியும், பாதுகாப்பு மேலதிகாரியும் மட்டுமா பொறுப்பு? வான்படைத் தளபதிக்கு, பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு, பிரதிப்பாதுகாப்பமைச்சருக்கு பொறுப்பில்லையா? ஏன் தேசிய பாதுகாப்புச்சபைக்கு, கூட்டுப்படைத் தளபதிக்கு, ஜனாதிபதிக்கு பொறுப்பில்லையா? எனக்கேள்வி எழுப்புகின்றது. போதும், ஆண்டது போதும் விலகுங்கள் இதுவே இன்றைய சிங்களத்தின் எதிரொலி.

இவ்வாறாக சிங்களவர், தமிழருக்குமிடையில் பேரினவாதத்திரையிட்டு ஆட்சிநடத்தி அம்பலப்பட்ட சிங்கள ஆசிறகு இப்போது அடுத்த பேரிடி. சிங்கள அரசின் ஆள்வோரைத் தீர்மானிப்பவராக, ஆட்டுவிப்பவராக இருந்துவரும் ஸ்ரீலங்கா முதலாளியமும், அது கூட்டுச்சேர்ந்திருக்கும சர்வதேச முதலாளியமும், முதற்றடவையாக ஆளமுடியாவிட்டால் பதவி விலகுங்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது' 1983யூலையின்பின் பொருண்மியப் பேரிடர் இன்று தோன்றிவிட்டது. போர் நடைபெறும்வரை இந்நாடு பொருண்மிய வளர்ச்சியைக் காணாது. இவ்வருடத்தின் முதல் நான்குமாத வளர்ச்சி 1.3 விழுக்காடே. முழுமையாக இவ்வருடத்தின் வளர்ச்சி மூன்று விழுக்காட்டையும் தாண்டாது. இந்நிலைமையை இனிமேலும் எம்மால் பொறுக்கமுடியாது. இது ஸ்ரீலங்காவின் முதன்மை வணிகரவை விடுக்கும் இறுதி எச்சரிப்பு.

ஸ்ரீலங்கா மட்டுமா கலங்கிநிற்கின்றது? கட்டுநாயக்கா தாக்குதலின் பின் லண்டனில் உள்ள சர்வதேச வான்வெளி, கடற்போக்குவரத்து காப்புறுதி கூட்டமைப்பான லொயிட்ஸ் நிறுவனமே கதிகலங்கிவிட்டது. அது வருடாந்தம பேரிடர் காப்புறுதிக் கட்டணமாகப் பெறும் தொகை 35மில்லியன் அமெரிக்க டொலர் கட்டுநாயக்காவில் ஒருபொழுதில் அது இழந்த தொகை 570 மில்லியன டொலர் என மதிப்பிடப்படுகின்றது இது அதனுடைய பதினாறு வருடகால பேரிடர் காப்புறுதி வருவாய்க்கு சமானம் என்கிறது கொழும்பு டெயிலி மிரர் ஏடு எனவேதான் லொயிடஸ் மறுபேச்சில்லாமல் ஸ்ரீலங்கா முழுவதையுமே பேரிடர் நாடாக அறிவித்துவிட்டது இதன் பொருள் என்ன ஸ்ரீலங்காவில் இப்போது தரையிறங்கும் ஒவ்வொரு விமானமும், துறைமுகங்களுக்கு வரும் ஒவ்வொரு கப்பல்களும் பெருந்தொகைப் பணத்தை மிகைப்பேரிடர் காப்புறுதிக் கட்டணமாக மேலதிகமாக செலுத்தவேண்டும். இதன்நேரடி, மறைமுகவிளைவுகள் கற்பனை செய்தே பார்க்க முடியாதவை. சங்கிலித் தொடர் போன்ற முடிவற்ற பாரியபொருண்மியத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை. உல்லாசப்பயணத்துறை வரவு 6ப- 70 விழுக்காடு வீழ்ச்சியடையப்போகிறது. ஆயத்த ஆடை ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சி வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோருக்கு பெரும் பாதிப்பு, தேயிலை ஏற்றுமதி பாதிப்பு இவ்வாறாக ஏற்றுமதி வருவாய் பெருமளவு பாதிக்கப்பட இறக்குமதி பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரிக்க, வரவு செலவுத் திட்டம் நிரவமுடியாததாக .. இவ்வாறாக அதலபாதாளத்திற்குள் அலைபாயும் நிலை. ஈற்றில் இவையவும் ஏழைச் சிங்களவர் தலையிலே விழும். அப்போது இன்னொரு போர் அங்கு மூழும்.

எனவே ஈசாப்பின் நீதிக்கதை போல் இக்கதையின் முடிவின் நீதியென்ன? அடக்குமுறைகள் இடம்பெற, அவலத்தில் சிங்களவர் துவள, தமிழர் இறுதி வெற்றியை அடைய சந்திரிக்கா அம்மையார் சந்திப்பது இன்னுமொரு வோட்டர்லூ. O

# விடுதலைப்புலிகள் நூறாவது குரல்



www.eelamview.com

**இதையும் பரணி......**
(14ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகள் வெடித்துச் சிதறும் பிரகாசத்தில் சிதைந்துபோன தென்னை, பனை மரங்களின் முகங்கள் தெரிந்தன. சண்டையின் ஆரம்பத்திலேயே எல்லாம் நடந்து முடிந்தாற்போல முன்னணிக் காவலரண் தாண்டி எல்லாப் பக்கமும் வேட்டோசைகளாகவே இருந்தன. சந்தித்த பெரிய சமர்களைவிட இது மிகவும் வித்தியாசமான சமராயிருந்தது. ஆட்டங்கண்டுவிட்ட ஆட்சிக்கதிரையை தக்கவைத்துக் கொள்வதற்கும் சிங்கள மக்களையும், உலக நாடுகளையும் ஏமாற்றவும் போட்ட நாடகம் அந்த இடத்தில் அரங்கேறியது. முடிவுதான் பரிதாபகரமாக ..அரசிடம் முதலிருந்த முகமூடியையும் பறித்துப்போனது.

நெருப்பிலே நீராடும் கூட்டத்திற்கு சுவாலை என்ன சுடவா போகிறது! எங்கும் பரவியிருந்த எதிரிகளும் ஒரு இடமும் மிச்சமில்லாது வந்துவிழும் குண்டுகளாலும் அந்தக்களம் உருமாறிப்போயிருந்தது. எல்லா இடமும் புகையும் எரிவுகளும். ஓயாமல் மிக், கிபிர் விமானங்களின் இரைச்சல்களும் தான். இந்த இரைச்சல்களுக்கிடையே பல தொலைத்தொடர்பு உரையாடல்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. அதற்குள் இந்த உரையாடல்களும் சில காதுகளில் விழுந்தது.

''காளி அண்ணா நிலமை எப்படியிருக்கு'' ஓவர்

''பறவாயில்லை சமாளிக்கக்கூடிய மாதிரித்தான் கிடக்கு, நீ எப்படி இருக்கிறாய் தம்பி''

''சிக்கலில்லை உனக்கு ஏதும் உதவி தேவையெண்டால் கேள், உடன செல் போட்டுத்தாறன்'' ஓவர்

''சரி தேவையெண்டால் எடுக்கிறன்''

அவர்கள் இருவருக்கிடையே மட்டும் மௌனம். சண்டைச் சத்தங்கள் ஓய்வில்லாது பூமியை உலுக்கிக்கொண்டிருந்தன

''கண்ணா கவனம்.. கவனமாயிருந்து வாறவனை பார்த்துப் பார்த்துச்சுடு''

வசனம் முடிக்காமலேயே நீண்ட இடைவெளி. அப்படியே தொடர்பு துண்டிக்கப்பட்டது. களத்தில் அண்ணனுக்கு ஏதோ பிரச்சினை போல.

ஓ... அங்கே நிற்கும் ஒவ்வொரு வீரர்களுக்கும் இருப்பது போல காளிதாசைச்சுற்றியும் பிரச்சினைதான். கிளாலிபபக்கத்தால் முன்னரங்க நிலைகளை ஊடறுத்து உள்நுழைந்து, இரண்டாவது கட்டமாக அமைக்கப்பட்ட நிலைகளைக்கைப்பற்ற கடும் பலத்தினைப் பிரயோகித்து, ஒவ்வொரு போராளிகளினதும் எல்லைப்படை வீரர்களினதும் உயிரையும் அர்ப்பணித்த உச்ச எதிர்ப்பினையும் தாண்டி ஒவ்வொரு காவலரணாக இராணுவத்தினர் கைப்பற்றியபோதிலும் காளிதாசின் காவலரணை நெருங்கக்கூட முடியவில்லை. அவனும் இன்னும் இரண்டு எல்லைப்படை வீரர்களும் அவர்களோடு பெண் போராளிகள் மூவருமதான். அதில் ஒருத்தி (மதி) பதுங்கிச்சுடும் துப்பாக்கியோடு நெருப்பினைப்போலவே எங்கும் சுற்றிச்சூழும் இராணுவத்தை அந்தக்காவலரணோடு மறித்தார்கள். அதிலே கடும் சண்டை நடந்து கொண்டிருந்தது. ஒரு இடமும் மிச்சமில்லாது வீழ்ந்து வெடித்த எறிகணைகள் கட்டளை மையத்திற்கும் காளிதாசுக்குமான தொடர்பை சிறுபொழுது துண்டித்திருந்தது. ஆனால் அவனின் காவலரண்களுக்கு சற்று பின்தள்ளி கடற்கரைப்பககமாக இறங்குதுறைக்கு அருகாக மோட்டார் நிலையத்திற்குப் பொறுப்பாக நிற்கும் தம்பியினது தொடர்பு இருந்தது. கண்ணன் குறுகிய காலத்துக்குள் மோட்டார் பயிற்சி பெற்றிருந்தாலும் சிறப்பாக சுடக்கூடியவன் என்று பலரும் கதைப்பதை காளிதாசும் கேள்விப்பட்டிருக்கிறான்.

மோட்டாரினால் ஆதரவுச் சூடுகளைப்பெற காளி கண்ணனை தொடர்பு கொண்டான். தொலைத்தொடர்புக் கருவியில் மீண்டும் இருவருக்குமிடையில் இணைப்பு.

''அண்ணா கவனம் எதுக்கு அடிக்க வேணுமெண்டு சொல்லு..''

அண்ணன் அதற்கான பரிபாசை இலக்கங்களைக்கூற தம்பியின் மோட்டார் இயங்கியது. மிக வேகமாக அடுத்தடுத்து எறிகணைகளை அனுப்பினான். இலக்குத்தவறாத சூடுகள். அதுவே அப்போது தேவையானதுமாக இருந்தது. தம்பியின் சூட்டாதரவுகள் அண்ணனின் முறியடிப்பிற்கு பெரிதும் துணைநின்றன.

கண்ணனின் ஒவ்வொரு எறிகணைகளும் எதிரிக்கு பெரிதும் சிரமத்தை ஏற்படுத்துவதுபோல எதிரியின் அத்தனை எறிகணை வீச்சுகளும் கண்ணனிற்கும் கடும் சிக்கலானதொன்றாகவே இருந்தது.

''கண்ணா காணும் நிப்பாட்டு. கனக்க அடிக்காதே சப்ளை வருகுதோ தெரியாது''

''உனக்கு தேவையெண்டால் கேள் உடனே ஒழுங்கு செய்யலாம் அண்ணா நீ கவனம்''

''ஓ தேவையெண்டால் கேட்கிறன். நீயும் கவனமா நிண்டு சண்டையைப்பிடி''

சாதாரண வாழ்க்கையில் சேர்ந்து வருகிற உறவுகளைவிட ஒரே களத்தில் மிக ஆபத்தான சூழலுக்குள் நின்று எப்போதும் அந்த உறவின் உயிர் பறிக்கப்படலாம் என்ற நிலையில் துடிக்கிறதே இந்த உறவுகள். இரண்டும். இது மிகவும் வித்தியாசமானதும், வைரமானதுமான உறவு.

''அண்ணை என்னில இருந்து 50மீற்றருக்குள்ள ஆமி வந்திட்டான. முன்னுக்கு வந்தவனை விழுத்திப்போட்டன்''

''என்னில இருந்து 50 மீற்றருக்குள்ள செல் அடியுங்கோ''

கண்ணனின் குரல் பதட்டமின்றி தொலைத்தொடர்புச் சாதனத்தில் தெளிவாகவே ஒலித்தது. அவன் கட்டளை மையத்தோடு கதைத்தவை காளியின் தொலைத்தொடர்புக்கருவியிலும் ஒலித்தது

''அண்ணை விரைவுபடுத்துங்கோ நான் வாறவங்களை சுட்டுக்கொண்டிருக்கிறன்''

அவன் நிற்கும் இடத்திலிருந்து 50 மீற்றருக்குள் செல்லடிப்பது என்பது மிக கிட்டிய தூரம். அது அவனுக்கும் தெரியும். அதில் தன்னைவிட மண்ணை அவன் அதிகமாக நினைத்திருக்கவேண்டும். அதுதான் தனக்கான எந்த ஆபத்தையும் நினையாது வரும் எதிரியை அழியுங்கள் என்று அறிவித்திருக்கிறான்.

கண்ணன் சொல்லும் தகவலின்படி கடற்கரைப் பக்கமாக நகர்ந்த இராணுவத்தினர் மீது கடுமையாக எமது ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. அந்த எறிகணைகள் ஒவ்வொன்றும் தீச்சுவாலைக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டிருந்தது.

எல்லா இடமுமே வெடிமுழக்கங்கள் என்பதால் எந்த சத்தத்தையும் பிரித்து அறியமுடியவில்லை. எந்தச்சத்தமோடு கண்ணனின் உயிர்மூச்சு அடங்கியதோ ..

சண்டை தொடர்ந்துகொண்டே இருந்தது. களம் ஓய்வதாக இல்லை அதைப்போலவே மனங்களும்.

''கண்ணன் கண்ணன் . கண்ணா .. கண்ணா'' ஓவர்

''கண்ணா . கண்ணா . காளி'' ஓவர்

அண்ணன் தம்பியை அழைப்பது எல்லோருக்கும் கேட்கிறது. உயிரின் ஆழத்திலிருந்து வரும் அந்த அழைப்புக்கு யார் பதில் சொல்லுவது. அழைப்பு நீண்டபடியே இருந்தது.

கட்டளைத்தளபதி நிலைமையை உணர்ந்துகொண்டார். சொல்லமுடியாத சோகத்தோடு தேடி எடுத்த சில சொற்களை மட்டும் அவன் நம்பும்படி சொல்லவேண்டியிருந்த களச்சூழலது. அவன் உருகிவிடுவானோ என்ற நினைப்பும் வவன் எப்படி தாங்கப்போகிறான். என்ற ஏக்கமே ஒவ்வொருவருக்குள்ளேயும்.

''காளி கண்ணனுக்கு சின்னக்காயம் பின்னுக்கு அனுப்பியாச்சு''
அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றின் இடைவெளியும் உச்சரித்த தொனியும், அதிலே கலந்துள்ள சோகத்தை உணர்த்தியது.
''டேய் காளி உன்ர கண்ணா வீரச்சாவு''
என்று யாரோ சொல்லுவதாகவே காளி உணர்ந்தான். தம்பியை பார்க்க வேணும்போல உயிரின் எல்லா இடமும் துடித்தது.
இதே களத்திலேயே எத்தனை தம்பிகள் தங்கைகள் வீரச்சாவடைந்ததை காளி பார்த்திருக்கிறான் இப்பவும அவன் அருகெல்லாம்...

உறவின் பிரிவு அவனின் வேகத்திற்கு இன்னும் உரம் சேர்த்தது.

''அண்ணை செல்லடிச்சுத் தாங்கோ விடுபட்ட பாயின்ர பிடிச்சுத்தாறன்''

இது காளியின் குரல்தான் மிகவும் கம்பீரமாக ஒலித்தது. அவனது வேண்டுதலின்படி உதவி கிடைகக அந்த இடம் மெல்ல மெலல எங்கள் கைகளில் விழ்ந்தது. காவலரண்கள் மீட்கப்பட தீச்சுவாலை தானே அணைந்தது. போரின் இரைச்சல் மெல்ல தணிந்தது. போராளி என்ற நிலையோடு இருக்கவேண்டும் என்று ஆவல்கொண்ட கண்ணன், தன் சாவின் பின் தான் 'ஒரு புலி வீரன்' என்று கௌரவிக்கப்பட்டான். தம்பியை கணம்கூட பிரியாதிருந்த அண்ணன் அப்போது தம்பியைப்போல அவன் நினைவுகளுடன் இன்னும் களத்திலே எல்லை காத்தபடி காக்கிறான் இந்த தேசத்தை.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

## நீதி நிர்...

பொதுவாக இன்று இயற்றப் படும் சட்டஙகள்'

நாகரிக விருத்தி,

மனித உரிமைகள் பேணல்,

மக்களின் இயல்பான சமூக

வாழ்வை அனுபவிக்க வாய்ப் பளித்தல்,

நீதித்துறைச் சுதந்திரம்

ஆகிய பிரதான விதிகளை அடியொற்றியே மேற்கொள்ளப் படுகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக நீதிநிர்வாகத்துறை ஒரு அரசாங்கத்தின் பிரதான கட்டமைப்பாக செயற்படும் அளவினதாய் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருவதுடன், செம்மையான பணியையும் ஆற்றி வருகின்றது. நீதித்துறையின் இன்றைய செயற்பாடுகள் நாளைய அரச நிருவாகத்திற்கான ஓர் அலகாகத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து செல்கின்றன.

தமிழீழத்தில் செயற்படுத்தப் படும் நீதிமன்றுகளில் மேற்கொள் ளப்படும் விளக்கங்கள் பகிரங்க மன்றிலும் இரு பகுதியினரும் சமூகமாய் இருக்கும்போதும் மேற்கொள்ளப்படுவதுடன், குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்படுபவர் ''நியாயமான சந்தேகத்திற்கப்பால்'' குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை அவர் சுத்தவாளியாகவே கொள் ளப்படுதல் ஆகியவையும் பிரதான மானவையாகும்.

சட்டவாளர்கள் அரச சட்டவாளர்களையும், பிரத்தியேகச் சட்டவாளர்களையும் கொண்டு செயற்படுகின்றன. வேறு நாடுகளில் சட்டக்கல்வி பயின்ற சட்டவாளர்களும் நிலைமைக்கு ஏற்ப தமிழீழச் சட்டக் கல்லூரியின் பரீட்சை எடுத்து சித்தியெய்துவதன் ஊடாக, தெரிவாகிய பின்னர் அல்லது நிலமைகளுக்கேற்ப அவ்வாறு வராமலும் உச்ச நீதிமன்ற நீதியாளர் முன்னிலையில் உறுதியுரையினைச் செய்த பின்பு சட்டவாளராகப் பணியாற்றமையும்.

எட்டு ஆண்டுகாலம் நீதி வழங்கல் பணியை செவ்வனே மக்களுக்குச்செய்து வரும் 'தமிழீழ நீதிநிர்வாகத்துறை தொடர்ந்தும் தனது நீதியானதும் நெறிப்படுத் தப்பட்டதும். முன்னோடியானதுமான பணிக்கூடாக சமுதாய அநீதிகள் களையப்பட்ட ஒரு புதிய நேரிய தமிழீழ மக்கள் சமூகத்தின் உருவாக்கத்திற்கு வழி செய்ய முயன்று நிற்கும். O

ந. மதிவர்மன் —



www.eelamview.com


# அறியப்படாதவர் மீது ஒரு அஞ்சலிப் பாடல்

என்றும் போலத்தான் அன்றும் விடிந்தது
எந்த மாற்றமுமில்லாது.
வழியில் அகப்பட்டதனைத்தையும் தழுவியபடி
நேற்றைய இரவைக்கீறி காற்று உயிர்ப்புற்றுலவியது.
நம்பிக்கையே நாளாந்தமாகிய வாசல்களில்
மெல்ல மெல்ல வெய்யில் பரவியது.
அவிச்சலில்லாத அந்த ஆனந்தப்பொழுதில்
வன்னியின் துயரத்துள்ளும் ஒரு சுகம்தெரிந்தது.
பாதங்களில் வேகப்பூட்டாத பரவசத்துடன்
விடுதலை மனிதர்கள் வெளியே வந்தனர்.
எந்தவானொலி என்ன சொல்லிற்றோ தெரியாது
முகிலுரசிய தலைகளில் முகங்கள் பூவனமாயின.
மகிழ்ச்சியில் மாரடைப்பே வந்து விடும் போல
ஆனந்தத்தவிப்பில் பலர் அழுதேவிட்டனர்.
வாய்வந்த வார்த்தைகளும் கூட
தொண்டையில் சிக்குண்டு திணறின
எடுத்தது எடுத்தபடியும் போட்டது போட்டபடியும்
புழுகமேறிய தமிழர் சைக்கிலேறி உலாப்போயினர்.
நெஞ்சுக்குள் சந்தோசம் நிறையும்போது
பூரிப்பின் வேர்களில் யாருக்கும் பூப்பூக்கும்.
பூத்துச் சிலிர்த்துப்போனது எம்பூமி.
காற்றின் திசைகளெல்லாம் கட்டுநாயக்காவே விரிந்தது.
பன்னிரண்டு குண்டுச்குருவிகளின் குடலுருவிப்போனதாம்
எவரோ எய்த அம்பு
வீணான பொலலாப்பேதும் வியாசனுக்கு வேண்டாமே
எய்தவரை X எனக்கொள்வோம்.
அது யாராகவும் இருந்துவிட்டுப்போகட்டும்.
அம்பெய்த அபிமன்யூக்களைப் பற்றியே
எல்லாவாய்களும் பேசின.
அருச்சுனனின் புதல்வர்களே!
உங்களுக்கெம் நன்றியென உரைத்தது காற்று.
தன் சாபக்கவிதைகள் பலித்ததெனச்
சந்தோஷித்தான் வியாசன்.
வானத்தாயும் வஞ்சிக்கவில்லை
அன்று பாளம்பிளந்த எம்மண் மீது
சில தூறல்கள் விழுந்தன.
ஓம்; ஓமெனத் தேவருரைத்த வாழ்த்தொலி
எல்லாசெவிகளிலும் கேட்டது
வெற்றிப்பெருமிதத்தின் வீறாய்ப்பிலிருந்தாள்
கொற்றப்பெருமாட்டி.
உயிரற்ற யந்திரங்கள் மீது இத்தனை கோபமா? என்று
'அரசியற் சாதுரியர்'' யாரும் ஆச்சரியப்படலாம்.
எள்ளி நகையாடியும் சிலர் எழுதலாம்.
கட்டுநாயக்காவில் கருகிப்போனவை
வெட்டுக்கத்தியும் சின்னப் புட்டுப்பானையுமல்ல.

# உலைக்களம்

— வியாசன் —

எரிந்தது பகைவரின் பலம்.
அழிந்தது அவர்களின் ஆணவம்.
எங்கள உயிருறிஞ்சிக் குடித்தவை
இந்த ஊத்தைப் பேய்கள் தான்.
நவாலியிலும்; நாகர்கோவிலிலும்
நரபலியெடுத்த ரத்தப்பிசாசுகளிவை.
கிளாலியிலும்; சுதந்திரபுரத்திலும்
எம் உறவுகளைத் தீயிட்ட எரிமாடன்கள் இவைதான்.
மந்துவிலிலும்; மாத்தளனிலும்.
சின்னபபிஞ்சுகளின் உயிர்தின்ற வன்மவல்லூறுகளிவை.
இந்தமகிழ்ச்சி இருக்காதா எங்களுக்கு?
குண்டுகொட்டிய போது கீழே நின்றவருக்கு
கொடுத்த தண்டனையறிந்து கொள்ளை மகிழ்ச்சி
குருதியும சதையுமாகக் கூட்டியள்ளியவருக்குத்தான்
இந்த அடிப்பின் பெறுமதி புரியும்.
பிஞ்சைப் பறிகொடுத்த பெருதுயரில்
நெஞ்சிலும் தலையிலுமடித்து ஓலமிட்டாளே ஒருதாய்
அவளைக்கேளுங்கள்
கட்டுநாயக்காவுக்கு அவளின் கருவறை பதில்சொல்லும்.
குண்டுபிளந்த தாயின் மார்பருகே கிடந்து
பச்சைப்புல்லொன்று பாலுக்கழுததே
அந்தச் சந்திரவதனத்துத் தளிரைக் கேளுங்கள்
முற்றாக எரியவில்லையா கட்டுநாயக்கா?
என்று மூச்செறியும்.
ஊரிழந்த துயரில் உருகியபடி
கிளாலிக்கரையில் வந்து கிடந்தோமே
விட்டானா பாவி
விரட்டி விரட்டி உயிர்ப்பூக்களைக் கிள்ளியெறிந்துவிட்டு
கட்டுநாயக்காவிற்தானே களைப்பாறினான்!
நெருப்பிட்டது யாரெனத் தெரியாதெனினும்
தகும் செயலாற்றியவர்களுக்கு எம் தலைசாய்த்தோம்.
''செட்டிக்குத்தானே தெரியும் வட்டியும் முதலும்''
இருதிரபுரியை விற்றுத்தான் இவை இறக்குமதியாயின.
இந்த வல்லூறுகள் வெறும் யந்திரங்களல்ல
எதிரி தவம்செய்து பெற்ற வரங்களிவை.
எங்களைக் கொல்லவென வாங்கிய நாகாஸ்த்திரங்கள்.
உட்புக முடியாதெனும் நம்பிக்கையில்



வித்தகர் வகுத்த பத்மவியூகம் பிளந்து
உள்ளே புகுந்தவர் யாரெனத் தெரியாதெனினும்
அவர்கள் சென்ற திசைநோக்கிச் சிரம் சாய்த்தோம்.
விமானத்தளத்தின் அருகுள்ள விளையாட்டுத்திடலில்
பழிதீர்க்கப் போனவரின் பாதணிகள் கிடந்தனவாம்
செருப்புகளை எடுத்துவாருங்கள் சிம்மாசனத்தில் வைப்போம்.
சென்றவர்கள் உண்டெறிந்த மீதவுணவிருந்ததாம்
எடுத்து வாருங்கள் ஒரு பருக்கையுண்டாலே போதும்
எமக்கும் பலம் பெருகும்.
வண்டிலில வந்தார்கள், வாய்க்காலால் வந்தார்கள்
கடலால் வந்தார்கள்
காற்றாகிக் குதித்தார்களென்று கூறுகின்றீர்களே
வெற்றுப்பீரங்கிகளே உங்களுக்கு வெட்கமே கிடையாதா?
கண்ணி வயல் கடந்து;
காவல் அரண கடந்து; மின்சாரவேலி மீதேறி
வந்தார்களென்று கூறும்போதில்
பெருமையில் நாங்கள் புல்லரித்துப் போகிறோம்.
சிரமும் செருக்கில் திணறுகிறோம்.
புத்தபெருமானே!
சத்தியமாய் எங்களுக்குத் தெரியாது.
வந்தவர்கள் தமிழரென்பதால் வாழ்த்துகிறோம்.
அவர்கள் கொன்றவையெல்லாம்
முன்னரெம்மைக் கொன்றவையென்பதால்
நாலுவரியெழுதி அவர்களுக்கு நன்றி சொல்கிறோம்.
கழிவு நீர் வாய்க்காலுக்குள்ளாலே நடந்தார்களாம்
வாய்க்காலே! உமக்கெமது நன்றி!
தென்னை மரத் தோப்புக்குள்ளே திரிந்தார்களாம்
தென்னை மரங்களே! உங்களுக்கெம் நன்றி
மின்சாரவெட்டுக்கு உத்தரவிட்ட ரத்வத்தையாரே!
நன்றிக்குரியவர் நீருமானீர்.
கட்டுநாயக்காவின் தலையில் குட்டியவரே
நீங்கள் யார்பெற்ற பிள்ளைகளோ நாமறியோம்.
உங்கள் பெயரும் அறியோம்
உங்கள் ஊரும் தெரியோம்
ஆயினுமுமக்கு ஆயிரம் தீபங்களேற்றினோம்.
நாயினும் கீழாய் நலிவுற்ற தமிழினத்தை
உலகத்தின் உதடுகளால உச்சரிக்க வைத்தவரே!
எழுதும் எந்தவரியும் உங்களிடம் தோற்கும்.
நீங்களெழுதிய வரிகள் மட்டுமே நிலைக்கும்
பிரிந்தோம்
மீண்டும் சந்திப்போம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com